# கடந்த 30 ஆண்டுகளில் வியத்நாம்-சீன உறவுகள் பற்றிய உண்மைகள்

வியத்நாம் சோஷலிஸக் குடியரசு வெளிநாட்டு
விவகார அமைச்சு
1979

# கடந்த 30 ஆண்டுகளில் வியட்நாம்-சீன உறவுகள் பற்றிய உண்மைகள்

வியத்நாம் சோஷலிஸக் குடியரசு வெளிநாட்டு
விவகார அமைச்சு

1979

வெளியிடுவோர்:

**பீப்பள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ்**

124, குமாரன் ரத்னம் வீதி,
கொழும்பு-2.

அச்சிடப்பட்டது:

**பிரகதி அச்சகம்**

93, மாளிகாகந்தை ரோட்,
கொழும்பு-10.

# பொருளடக்கம்

## முதலாம் பாகம்

### சீனுவின் போர்த்தந்திரத்தில் வியட்நாம்


1. சீனுவின் உலக வியாபித போர்த்தந்திரத்தில் வியட்நாம் 07
2. தென்கிழக்கு ஆசியாவைப் பொறுத்த சீனுவின் கொள்கையில் வியட்நாம் 10


## இரண்டாம் பகுதி

### சீனுவும் 1954ல் இந்தோ சீன யுத்தமுடிவும்


1. டியன் பெயன் பூ்ஹூவின் பின் முழுத் தேசத்தையும் விடுவிக்க வியட்நாம் மக்களால் முடிந்தது 17
2. இந்தோ சீனு பற்றிய 1954 ஜெனீவா மகாநாடும் சீனத் தலைவர்களின் துரோகமும் 20


## மூன்றும் பகுதி

### சீனுவும் தென் வியத்னும் விமோசனத்திற்கும் தேசத்தின் மீள் ஒன்றிணைப்பிற்குமான வியத்னும் மக்களின் போராட்டமும் (1954—1975)


1. 1954—1964 காலகட்டம்: தேசிய மீள் ஒன்றிணைவுக்கான வியத்னும் மக்கள் போராட்டத்தை சீனத் தலைவர்கள் சீர்குலைத்தனர் 26
2. 1965—1967 காலகட்டம்: வியத்னுமிய மக்களது விடுதலை யுத்தத்துக்குக் குழிபறிப்பும் அதை நீடிப்பதும் 32
3. 1969—1973 காலப்பகுதி: வியத்நாமின் முதுகின் பின்னுல் ஐக்கிய அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகள் 41
4. 1973—1975 காலகட்டம்: தென்வியத்நாமினைப் பூரணமாக விமோசனப்படுத்தும் வியத்நாமிய மக்களின் பிரயத்தனங்களுக்கு முட்டுக்கட்டையிடுதல் 51


## அத்தியாயம் 4

### விடுதலைபெற்ற ஐக்கியப்பட்ட வியத்நாமின் பாலான சீனக் கொள்கை (1975 மே முதல் இன்று வரை)


1. வியத்நாமில் அமெரிக்கா பெற்ற தோல்விக்குப் பின் சீனு 58
2. தீவிரமான வியத்நாம் விரோத நடவடிக்கைகள் 61
3. வியத்நாமுக்கு எதிராக அனைத்து வழிகளிலும் செயற்படுதல் 70


## அத்தியாயம் 5

### பீஜிங்கின் விஸ்தரிப்புவாதக் கொள்கை: தென் கிழக்காசியாவில் தேசிய சுயாதீனத்துக்கும் சமாதானத்திற்கும், ஸ்திரப்பாட்டிற்குமான ஓர் அச்சுறுத்தல்

# முதலாம் பாகம்

## சீனுவின் போர்த்தந்திரத்தில் வியட்நாம்:

1979 பெப்ரவரி 17 ஆந் திகதி ஆரம்பித்த ஆக்கிரமிப்பு யுத்தத்தில் முடிவுற்ற வியத்நாமை எதிர்த்த சீனத் தலைவர்களின் பகிரங்கமான குரோத நடவடிக்கைகளும் வியத்நாமைப் பொறுத்த சீனுவினது கொள்கையில் ஏற்பட்ட திடீர்த் திருப்பமும் உலகப் பொதுஜன அபிப்பிராயத்தை திகைப்பிலாழ்த்தியுள்ளன. எனினும் இந்தக் கொள்கைத் திருப்பம் எதிர்பார்க்கப்பட்டதே. கடந்த மூன்று தஸாப்தங்களாகச் சீனத் தலைவர்கள் கடைப்பிடித்து வரும் விஸ்தரிப்புவாத, மேலாதிக்கவாத போர்த்தந்திரத்தின் தர்க்கரீதியான வளர்ச்சியே இது.

சீனத் தலைவர்களைப் போல ''புரட்சிக்காரர்'' களாகவும், ''சோஷலிஸ்ட்டு'' களாகவும் காட்டிக் கொள்ளும், ''அதி தீவிர புரட்சிவாத'' சொல்லடுக்குகளைப் பயன்படுத்திக் கொண்டே எதிர்ப் புரட்சிகரமான, மிகமிகப் பிற்போக்கான போர்த் தந்திரத்தைக் கடைப்பிடிக்கும் பிறிதொரு உதாரணத்தை உலகம் கண்டதில்லை.

சீனத் தலைவர்களைப் போல உலகில் வேறெந்தத் தலைவர்களும் நண்பர்களை விரோதிகளாக்கியும், பகைவர்களை நண்பர்களாகவும் மாற்றிக் கொண்டு போர்த்தந்திர அரங்கில் தமது அணி அமைவுக் கொள்கையை இத்தனை சீக்கிரத்திலும் முற்றாகவும் மாற்றியமைத்ததில்லை.

தமது பிரதான கூட்டாளி எனச் சீனத் தலைவர்களால் கருதப்பட்ட சோவியத் யூனியன் இன்று தமது மிகவும் பயங்கரமான சத்துராதி என கருதப்படுகிறது.

''தனது குணும்சத்தை என்றுமே மாற்றிக் கொள்ளாத'' மிகவும் பயங்கரமான பகைவன் என முன்னர் கருதப்பட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்று விசுவாசமிக்க கூட்டாளியாகக் கருதப்படுகிறது. அதனுடன் இணைந்துவரும் சீனர்கள் சீனு ''ஒரு கிழக்கத்திய நேட்டோ'' வாகும் என மூர்க்கத்தனத்துடன் பிரகடனப்படுத்துகிறார்கள். ஏகாதிபத்தியத்தின் மீது நேரடி தாக்குதலை நடத்தும் ''புரட்சிகர சூறாவளி'' என ஆசிய, ஆபிரிக்க, தென் அமரிக்க நாகடுளின் தேசிய விமோசன இயக்கத்தை முன்னர் வர்ணித்தவர்கள், சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியம் இறுதியில் இந்தப் பிராந்தியங்களிலுள்ள மக்களின் புரட்சிகரப் போராட்டங்களிலேயே தங்கியுள்ளது1 எனக் கூறியவர்கள் இன்று தேசிய விமோசன இயக்கத்தை எதிர்க்கும் நிர்மூலமாக்கும் எத்தனிப்பில் ஏகாதிபத்திய வாதிகளுடன் கைகோர்த்துக் கொண்டுள்ளனர். சில்லியில் சர்வாதிகாரி பினேசெட், அங்கோலாவில் சி. ஐ. ஏ. யின் ஆதரவைப் பெற்ற எப். என். எல். ஏ, யூனிடா ஈரானில் ஷாபாலவி, மக்களைப் பூண்டோடொழித்த பொல் பொட் - இயெங் ஸாரி கும்பல் போன்ற பிற்போக்குச் சக்திகளுக்கு ஆதரவளிக்கின்றனர். . . இவர்கள் இன்றைய உலகிலுள்ள தேசிய விமோசன இயக்கத்தின் தோற்றத்தையும் குணும்சத்தை மூர்க்கத்தனத்துடன் திரித்துக் கூறுகிறார்கள். உலக மேலாதிக்கத்திற்காக பிரதான வல்லரசுகள் நடத்தும் போராட்டத்தின் விளைவுகளே இவை என வர்ணிக்கிறார்கள்.

சீனுவின் சர்வதேச அணி அமைவில் பூரண மாற்றம். ஏற்பட்ட அதே வேளையில்உள்நாட்டில் ஈவிரக்கமற்ற, கொடிய களையெடுப்புகள் நடைபெற்றன, எதிர்ப்பாளர்கள் அடக்கியொடுக்கப்பட்டனர், இதன்விளைவாக சீனத் தலைமையின் அணியில் அடிக்கடி பூகம்பங்கள் ஏற்பட்டன. இன்று உண்மையிலேயே புரட்சிகரமான தலைவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் நாளைக்கு சீனப் புரட்சியின் பகைவர்கள் என்றும் துரோகிகள் என்றும் கருதப்படுவர். சிலர் ஒரு சில வருடங்களுக்குள்ளேயே இரண்டோ மூன்று தடவைகள் தூக்கியெறியப்பட்டனர், மீண்டும் பதவியிலமர்த்தப்பட்டனர்.

சீனத் தலைவர்களின் போர்த்தந்திரம் பெருமளவில் மாறியுள்ளது. எனினும் ஒன்றுமட்டும் மாற்றமடையவே இல்லை. சீனுவை முதல்தரமான உலக வல்லரசாக கூடிய விரைவில் மாற்றுவதும் பெரிய - நாடு விஸ்தரிப்புவாத, மேலாதிக்கவாத திட்டங்களைச் செயல்படுத்துவதுமே இது. 1956 ல் நடந்த சீன கம்யூனிஸ்ட்

---

1 1960 நவம்பரில் மாஸ்கோவில் நடந்த கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சிகளினது மாநாட்டில் கலந்துகொண்ட சீன கம்யூனிஸ்ட் கட்சித் தூதுக் குழுவினர் உலக சோஷலிஸ அமைப்பே மனிதகுல வளர்ச்சியை நிர்ணயிக்கும் காரணியாகியுள்ளது என ஒப்புக்கொண்டமையும் இங்கு மனம் கொள்ளத் தக்கது.



கட்சி, மத்தியக் கமிட்டியின் காங்கிரசில் தலைவர் மா ஸேதுங் பின்வருமாறு கூறினார்:

''கலாசார ரீதியில், தொழில் நுட்ப ரீதியில், தொழில் நுட்ப
வியல் ரீதியில், தொழில் ரீதியில் சீனு மிகவும் வளர்ச்சியுற்ற
நாடாக மாற வேண்டும். சில தஸாப்தங்களின் பின்னர் சீனு
உலகின் முதலாவது வல்லரசாக மாறமுடியாது என்ற கருத்து
ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.''

பின்னர் 1959 செப்டம்பரில் ராணுவ மத்தியக் கமிட்டி மாநாட்டில் தலைவர் மா ஸேதுங் பின்வருமாறு சொன்னார்:

''நாம் பூமியை கைப்பற்றியாக வேண்டும். இதுவே எமது குறிக்கோள்.''

1949 அக்டோபர் 1 ஆந் திகதி சீன மக்கள் குடியரசு ஸ்தா
பிதமான உடனேயே தமது போர்த்தந்திர நோக்கத்தை ஈட்டிக்
கொள்ளும் முயற்சிகளை பீகிங் தலைவர்கள் துரிதப்படுத்தினர். சீனு
வின் பொருளாதாரம் இன்னமும் பின்தங்கியதாக இருந்த போதி
லும், 1950 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலிருந்து போர்த்தந்திர
முக்கியத்துவமுள்ள நியூக்லியர் வலிமையைக் கட்டியெழுப்ப அவர்
கள் தங்களாலான தனைத்தையும் செய்தனர். இப்போது ஆயுதப்
படைகளை ''நவீனமயப்படுத்து'' வதை அவர்கள் துரிதப்படுத்த
ஆரம்பித்துள்ளனர், நியூக்லியர் ஆயுதங்களை உற்பத்தி செய்தும்,
குவித்து வைத்தும் வருகிறார்கள். பொருளாதாரத் துறையிலும்
1958 ஆம் ஆண்டின் ''மாபெரும் முன் பாய்ச்ச'' லும், அண்மை
யில் அறிவிக்கப்பட்ட ''நான் நவீனமயப்படுத்தல்'' களதும் விஸ்
தரிப்பு, மேலாதிக்கம் என்ற அதே இலக்கையே நோக்கமாகக்
கொண்டவையாகும்.

## 1. சீனுவின் உலக வியாபித போர்த்தந்திரத்தில் வியட்நாம்

தமது உலக வியாபிதமான போர்த்தந்திரத்தில் முறியடிக்
கப்பட வேண்டிய பிரதான போட்டியாளர்களாக சீனு சோவியத்
யூனியனையும் ஐக்கிய அமெரிக்காவையும் கருதுகிறது என்றால்,
தமது போர்த்தந்திர நலன்களை உத்தரவாதப்படுத்துவதற்கு வியத்
நாமை கட்டுப்படுத்துவதும் கைப்பற்றுவதும் அவசியம் என கருது
கிறார்கள். சீனுவை ஒரு உலக வல்லரசாக மாற்றுவதற்காக 1950
ஆம் ஆண்டுகளில்சீனத் தலைவர்கள் புனர்நிர்மாணத்தில்ஈடுபட்ட
போது வடக்கில் கொரியாவைஎதிர்த்த ஐக்கிய அமெரிக்காவின்
ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கும், வியத்நாமில் பிரெஞ்சு கலோனிய
லிஸ்ட்டுகள் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தால் தெற்கி
லிருந்து சீனுவின் பந்தோபஸ்துக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலுக்கும்
அது முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அதே நேரத்தில், சர்வ
தேச குண்டாம் படையாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த, ஏகாதி

பத்திய சக்திகளின் பிரதான தலைவனான ஐக்கிய அமெரிக்கா சீனாவைப் பொறுத்து குரோதமான ஒரு கொள்கையைக் கடைப்பிடித்ததுடன், அந்த நாட்டை சுற்றிவளைக்கவும் தனிமைப்படுத்தவும் எத்தனித்துக் கொண்டிருந்தது.

பிரெஞ்சு, கலோனியலிஸ்ட்டுகளை எதிர்த்து வியத்நாம், லாவோஸ், கம்பூச்சிய மக்கள் நடத்திய வெற்றிகரமாக எதிர்ப்பு யுத்தத்தின் விளைவாக இந்தோசீனா பற்றிய ஜெனீவா மாநாடு 1954 இல் நடைபெற்றது. வியத்நாம் மக்களின் பரிபூரண வெற்றி தமது கலோனியல் சாம்ராஜ்யத்தின் தகர்வுக்கு இட்டுச்சென்றுவிடும் என்று பிரெஞ்சுக்காரர்கள் பயந்தார்கள். பிரெஞ்சு கலோனியலிஸ்ட்டுகளை எதிர்த்த போராட்டத்தின் இறுதியில் வியத்நாமுக்கு ஆயுதங்களை வழங்கிய பிரதான நாடாக சீனா இருந்தது. இந்த நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுடனான பிரதான பேச்சுவார்த்தை நடத்துபவனாக அது தன்னை மாற்றிக் கொண்டதுடன் வியத்நாம், லாவோஸ், கம்பூச்சிய மக்களுக்கல்ல, பதிலாக சீனாவுக்கும் பிரான்சுக்கும் சாதகமான ஒரு தீர்வினை உருவாக்க பிரான்சுடன் அது உடன்பாட்டிற்கு வந்தது. தெற்கில் சீனாவின் பந்தோபஸ்தை உத்தரவாதப்படுத்தவும், வியத்நாம் மீதும் இந்தோசீனா மீதும் தனது கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்தவும், அதே நேரத்தில் சர்வதேச விவகாரங்களை தீர்ப்பதில், குறிப்பாக ஆசியாவில் தீர்த்து வைப்பதில் ஒரு மாபெரும் வல்லரசின் பாத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும் அவர்கள் இந்தோ சீன மக்களின் நலன்களை தாரைவார்த்தார்கள். கொரிய பிரச்னையை முதலாவதாக கையாண்ட ஜெனீவா மாநாட்டில் சீனா முதல் தடவையாக ஐ. நா. பந்தோபஸ்துக் கவுன்சிலின் நிரந்தர அங்கத்தவர்களான நான்கு பெரிய — வல்லரசுகளுடனும் சமதையாக இடம் பெற்றது.

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் தமது செல்வாக்கை விரிவுபடுத்த இது சீனத் தலைவர்களுக்கு நல்ல வாய்ப்பை அளித்தது. அதே பொழுதில் ஜெனிவாவில் ஆரம்பித்த, பின்னர் வார்ஸோவில் தொடர்ந்து நடந்த நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் தொடர்புகளை பேண அவர்கள் விழைந்தனர்.

*1954* ஜெனீவா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தென் வியத்நாமை ஒரு புதியரக நவ காலனியாகவும், தென் கிழக்கு ஆசியாவில் ஐக்கிய அமெரிக்காவின் ராணுவத்தளமாகவும் மாற்ற எத்தனித்தனர். வியத்நாம் நீண்டகாலம் பிரிக்கப்பட்டிருப்பதையே சீனத் தலைவர்கள் விரும்பினர். ஆனால் ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டத்தில் வியத்நாம் மக்கள் தேசிய விமோசனத்திற்காக வீரத்துடன் நின்றதுடன் புதிய புதிய வெற்றிகளையும் ஈட்டினர்.

*1960* ஆம் ஆண்டுகளின் இறுதியில், ஐக்கிய அமெரிக்காவில் பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிகளை மூர்த்தண்யப்படுத்திய உலகில் ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிலையினை பலவீனப்படுத்திய வியத்நாமை எதிர்த்த தமது ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மூழ்கித் திக்குமுக்காடினர். சோஷலிஸ நாடுகளினதும் உலகப் புரட்சிகர இயக்கத்தினதும் பிரமாண்டமான வளர்ச்சிக்கு இந்த நல்ல சாதகமான சூழலை ஏற்படுத்தியதுடன், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஜப்பானும் ஐக்கிய அமெரிக்காவின் பலமிக்க பொருளாதாரப் போட்டியாளர்களாக மாறவும் இது வழிவகுத்தது. ஒரு இக்கட்டான சூழ்நிலையில் ''யுத்தத்தை வியத்நாம் மயப்படுத்தும்'' உபாயத்தை கடைப்பிடிக்க அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் நிர்ப்பந்திக்கப்பட்டார். 1954 ஆம் வருட பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் அனுபவத்தில் கற்றுக் கொண்ட பாடத்திற்கமைய, ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அனுகூலமான முறையில் தீர்ப்பதற்கு அதாவது நெகுவின் வான் தியூவின் கைப்பாவை ஆட்சியைப் பேணும் அதே வேளையில் வியத்நாமிலிருந்து ஐக்கிய அமெரிக்கத் துருப்புக்களை வாபஸ் பெறுவதற்கு சீனர்களை அவர் பயன்படுத்தினார். சோவியத் யூனியன் மீது நிர்ப்பந்தத்தைக் கொண்டுவரவும், உலகப் புரட்சிகர இயக்கத்தை எதிர்க்கவும் நிக்ஸன் நிர்வாகம் சீனத் துருப்புச் சீட்டை பிரயோகித்தது.

ஐக்கிய அமெரிக்க பலவீனமடைந்ததையும், சோவியத் விரோதக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான நிக்ஸனின் கொள்கையை சீனத் தலைவர்கள் அனுகூலமாகப் பயன்படுத்தினர், இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவையும் சோவியத் யூனியனையும் கொண்டு உருவான ''பெரிய தூண் உலகத்'' தை ஒழித்துவிட்டு, அதற்குப் பதிலாக சீனாவிலும் ஒரு தூணைக் கொண்ட 'பல தூண்கள் உலகை' உருவாக்குவது என்ற கிஸிங்கர் திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்குடன் ஐக்கிய அமெரிக்காவுடன் சமரசம் செய்து கொள்ளவும், வியத்நாம் பிரச்னைக்குத் தீர்வு காண அவர்களுக்கு உதவவும் முன்வந்தனர். அதே நேரத்தில் தைவானிலிருந்து அமெரிக்கத் துருப்புக்களை வாபஸ் பெறச் செய்யவும் சீனத் தலைவர்கள் வியத்நாம் பிரச்னையைப் பாவித்தனர் அணி அமைவு பற்றிய தமது கொள்கையை மாற்றிக்கொண்ட அவர்கள் சோவியத் யூனியனைத் தமது பிரதான சத்துராதி என கருத ஆரம்பித்தனர், சோவியத் யூனியனுடன் 1969 மார்ச்சில் எல்லைத் தகராறை ஏற்படுத்தினர், வியத்நாம் மக்கள் பரிபூரண வெற்றியை ஈட்டுவதை தடுக்கும் விதத்தில் ஐக்கிய அமெரிக்காவுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்ததன் மூலம் இரண்டாவது தடவையாகவும் வியத்நாமுக்குத் துரோகமிழைத்தனர். 1971 இல் அவர்கள் 'பிங்பொங்' ராஜதந்திரத்தின் மூலம் அமெரிக்காவை அணுகினர், கிஸிங்கரை பீகிங்கில் வரவேற்றனர். இதைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையில் சீனாவின் அந்தஸ்து புனர் அமைக்கப்பட்டது, சீன மக்கள் குடியரசு பந்தோபஸ்துக் கவுன்சிலின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களுள் ஒன்றாகியது. இந்த நிகழ்வுப் போக்கு ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனின் சீன விஜயத்திலும், 1972 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட ஷா ஹாய் அறிக்கையிலும் முடிவுற்றது. தமது உலக வியாபக போர்த்தந்திரத்தைச் செயல்படுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைப்பது பீக்கிங் தலைவர்களுக்கு அவசியமானதாகும்.

இந்தோ - சீனு பற்றிய 1954 ஜெனீவா ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்ட பின்னர் போலவே வியத்நாம் பற்றிய 1973 ஜனவரி பாரீஸ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னரும் சீனத் தலைவர்கள் தென் வியத்நாமில் அதுவரையிருந்த நிலையை தொடர்ந்து வைத்திருக்கவே விரும்பினர். எனவேதான் ஐக்கிய அமெரிக்காவின் கைப்பாவை ஆட்சியைப் பூரணமாக ஒழித்துக்கட்டிய, தென் வியத்நாமை விடுதலை செய்து நாட்டை ஐக்கியப்படுத்திய 1975 ஆம் வருட வியத்நாம் மக்களின் வெற்றி ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பெருந் தோல்வியை ஏற்படுத்தியது என்பதுடன், தமது உலக வியாபிதமான போர்த்தந்திரத்தைச் செயல்படுத்துவதிலும் தமது விஸ்தரிப்புவாத மேலாதிக்கவாதத் திட்டங்களை அமுல் படுத்துவதிலும் பீக்கிங் ஆட்சியாளர்களுக்கும் பெருந் தோல்வியை ஏற்படுத்தியது. அன்றிலிருந்து வியத்நாமைப் பொறுத்து அவர்கள் பகிரங்கமாகவே குரோதமான கொள்கையைப் பின்பற்றுவதுடன், ஆயுதத் தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர்.

ஆகவே, கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சீனுவின் உலகப் போர்த்தந்திரத்தில் வியத்நாம் மிக முக்கிய காரணிகளில் ஒன்ருக இருந்துள்ளது. 1950 ஆம் ஆண்டுகளின் மத்தியில் பிரெஞ்சு போர்த்தந்திரத்திலும், பின்னர் 1970 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்காவின் போர்த்தந்திரத்திலும் வியத்நாம் கேந்திர நிலைபாட்டினைப் பெற்றிருந்ததினுல் தமது மாபெரும் நாட்டு விஸ்தரிப்புவாத, மேலாதிக்கவாதத் திட்டங்களைச் சாதிப்பதில் ஏகாதிபத்தியவாதிகளுடன் உடன்பாடுகளைச் செய்து கொள்வதற்கு சீனத் தலைவர்கள் வியத்நாம் 'துருப்புச் சீட்டை' பயன்படுத்தி வந்துள்ளனர். அதே நேரத்தில் ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்த வியத்நாமின் போராட்டத்தில் சீனுவுக்கு முழுக் கட்டுப்பாட்டையும் பெற்றுக்கொள்ளவும், இவ்வாறு சர்வதேச அரசியல் வாழ்வின் ஈர்ப்புமையமாக மாற்றவும், இதன் மூலம் ''ஏகாதிபத்திய விரோத'' பெயர்ப்பலகை உயர்த்திப் பிடித்து ''உலகப் புரட்சியின் தலைமை'' யைப் பெற்றுக்கொள்ளவும், சோவியத் யூனியனையும் உலகப் புரட்சிகர இயக்கத்தை எதிர்க்கவும் அவர்கள் விரும்பினர்.

## 2. தென்கிழக்கு ஆசியாவைப் பெறுத்த சீனுவின் கொள்கையில் வியட்நாம்

நூற்ருண்டுகளாக சீன விஸ்தரிப்புவாதத்தின் பாரம்பர்ய இலக்காக இருந்த தென் கிழக்கு ஆசியா, சீன மக்கள் குடியரசுத் தலைவர்கள் கைப்பற்றுவதற்கு நீண்ட காலமாகவே கனவு கண்டு வந்த பிராந்தியமாகும்.

1936 இல் தனது இளமை பற்றி அமெரிக்கப் பத்திரிகையாளர் எட்கார் ஸ்னேவுடன் பேசுகையில் கொரியாவையும் தாய்வானையும் ஜப்பான் கைப்பற்றியது பற்றியதும் இந்தோசீனு, பர்மா, மற்றும் பல இடங்களில் சீனு தனது சுயாதிபத்தியத்தை இழந்ததும் பற்றிய பிரசுரம் ஒன்றை படித்தபோது தனக்கு ஏற்பட்ட உணர்வை மா-ஸே துங் விவரித்தார்:



''இதைப் படித்த பின்னர் எனது நாட்டின் எதிர்காலம் பற்றி நான் வேதனையடைய ஆரம்பித்தேன், இதைப் பாதுகாப்பது அனைத்து மக்களினதும் கடமையாகும் என்பதையும் நான் உணர்ந்தேன்.''1

1939 இல் வெளியிடப்பட்ட ''சீனப் புரட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும்'' என்ற மகுடமிடப்பட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தஸ்தாவேஜு ஒன்று பின்வருமாறு கூறுகிறது:

''சீனுவை தோல்வியுறச் செய்த ஏகாதிபத்திய வல்லரசுகள் சீனுவின் சார்பு நாடுகளை கைப்பற்றின. இவ்வாறு ஜப்பான் கொரியாவையும், தாய்வானையும், ரிஜகிஜயையும், பெஸ்காடொரஸையும், போர்ட் ஆர்தரையும் அபகரித்தது; பிரிட்டன் பர்மாவையும், பூடானையும், ஹொங்கொங்கையும் அபகரித்தது; பிரான் அனுமை அபகரித்தது.''

1954 இல் பீக்கிங்கில் வெளியிடப்பட்ட ''நவீன சீன வரலாறு பற்றிய குறிப்பேடு'' என்ற கைநூல் தென் கிழக்கு ஆசியாவிலும், கிழக்கத்திய (தென் சீனு) கடல் பகுதியிலுமுள்ள பல சுற்றியுள்ள நாடுகளை, சீன பிரதேசமாகக் காட்டும் நிலப்படம் ஒன்றையும் உள்ளடக்கியிருந்தது.

1963 இல் ஆஹீவானில் வியத்நாம் தொழிலாளர் கட்சியினது தூதுக் குழுவினருடன் நடந்த சந்திப்பின் போது தலைவர் மா-ஸே துங் சீனத் தலைவர்களின் விஸ்தரிப்புவாத திட்டங்களை குறிப்பாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்திஞர்:

''50 கோடி ஏழை விவசாயிகளின் அக்கிராசனராக நான் இருப்பேன், எனது ராணுவம் தென் கிழக்கு ஆசியாவின் மீது படையெடுக்கும்.''

அந்தச் சமயத்தில் தாய்லாந்தையும் சீனுவின் ஸெசுவான் மாகாணத்தையும் ஒப்புநோக்கிக் காட்டிய தலைவர் மா-ஸே துங் இவை இரண்டும் ஒரே அளவானவைஎன்ற போதிலும் தாய்லாந்தின் ஜனத்தொகை ஸெசுவானிலும் பார்க்க அரைவாசி என்ருர். ஆகவே தாய்லாந்தில் குடியேற சீனர்கள் அனுப்பப்பட வேண்டும். பெரிய ஆனல் ஜனத்தொகை குறைந்த லா வோஸைப் பொறுத்தும் சீனு இதையே செய்ய வேண்டும் என்று மா-ஸே துங் கருதிஞர். இதை 1965 ஆகஸ்டில் நடந்த சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் அரசியல் குழுக் கூட்டத்தில் அவர் திரும்பவும் ஊர்ஜிதம் செய்தார்:

---

1. ''ரெட் ஸ்டார் ஓவர் சைஞு'' என்ற எட்கார் ஸ்னேவின் நூலில் — பெங்குவின் புக்ஸ், லண்டன், 1972, ப. 159.

''தென் வியத்நாம், தாய்லாந்து, பர்மா, மலேஷியா, சிங்கப்பூர் . . . உட்பட நாம் தென் கிழக்கு ஆசியாவை எவ்வாறாயினும் கைப்பற்றியாக வேண்டும். இந்தப் பிரதேசம் மூலப் பொருள் வளம் மிக்கது. இதால் ஏற்படும் செலவு தென் கிழக்கு ஆசியாவைக் கைப்பற்றிய பின்னர் நாம் இந்தப் பிராந்தியத்தில் எமது பலத்தை விரிவுபடுத்த முடியும். அப்போது சோவியத் கிழக்கு ஐரோப்பிய அணிக்கு முகம் கொடுக்கக்கூடிய வலிமை எமக்கு இருக்கும். மேற்கத்திய காற்றின் மீது கிழக்கத்திய காற்று நிலவும்.''

உலகின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் சீனாவும் மிகவும் கூடுதல் சாதகமான ஸ்தூலமான நிலைமைகளைப் பெற்றுள்ளது. இங்கு தனது விஸ்தரிப்புவாத, மேலாதிக்கவாத திட்டங்களைச் செயல்படுத்த தேவையான சாதனங்களையும் வாய்ப்புகளையும் அது கொண்டுள்ளது. இதனால் தான் இந்தப் விஸ்தரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தவும், தமது எதிர்ப் புரட்சி உலக போர்த் தந்திரத்தை அமுல்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவும் எண்ணியிருந்த சூழ்ச்சிகளை சீன மக்கள் குடியரசின் தலைவர்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொண்டு வந்துள்ளனர்

இவர்கள் போர்க் கேந்திர முக்கியத்துவமுள்ள நியூக்லியர் சக்தியைக் கட்டியெழுப்பியுள்ளனர், தமது பொருளாதார வலிமையை விருத்தி செய்துள்ளனர், இந்தப் பிராந்தியத்திலுள்ள நாடுகள் மீது நிர்ப்பந்தத்தைக் கொண்டுவர அல்லது விலைக்கு வாங்கவும் தமது சூழல் பாதைக்குள் இவற்றை இழுத்து விடவும் இவர்கள் ராணுவ பயமுறுத்தல்களை மேற்கொள்வர் அல்லது பொருளாதார .உதவி வாக்குறுதிகளை அளிப்பர். இவர்கள் பிற நாடுகளின் பிரதேசங்களில் அபகரிப்புகளைச் செய்துள்ளனர், எல்லை மோதுதல்களை ஏற்படுத்தியுள்ளனர், இந்தப் பிராந்தியத்திலுள்ள நாடுகளைக் கீழ்ப்படியச் செய்ய அல்லது பெலவீனப்படுத்த தமது ஏஜண்டுகளைப் பாவித்துள்ளனர் அல்லது தமது துருப்புக்களை நேரடியாகவே அனுப்பியுள்ளனர். மிகவும் மிலேச்சத்தனமான முறைகளையும் கையாளத் தயாரான இவர்கள் கம்புச்சியாவில் மக்கள் ஒழிப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்க பொல் பொட் - இயெங் ஸாரி கும்பலைப் பயன்படுத்தினர். தமது விஸ்தரிப்புவாதக் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல அவர்கள் வெளிநாடுகளிலுள்ள சீனர்கள், பீக்கிங்கின் உத்தரவின் கீழ் இயங்கு தோன்றல்களான சில சிறிய இனக் குழுக்கள் போன்ற 'ஐந்தாம் படையினர்' உட்பட தென் கிழக்கு ஆசியாவிலுள்ள தமது பல கைக் கருவிகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

வெளிநாடுகளிலுள்ள சீனர்களைப் பயன்படுத்துவதைப் பொறுத்து பீக்கிங்கின் உள்நோக்கங்களை அயல் நாட்டு அமைச்சர் சென் யி தனது உரை ஒன்றில் மிக்க தெளிவாக விவரித்தார்:

''சிங்கப்பூரின் ஜனத்தொகையில் 90 சதவீதத்தினர் சீனர்களே; 10 லட்சம் பேர்களைக் கொண்ட ஜனத்தொகையில் 900,000



பேர்களுக்கும் கூடுதலான சீனர்கள் உள்ளனர். ஆகவே இந்தப் பிராந்தியத்தில் சீனர்களால் கட்டியெழுப்பப்பட்ட நாடே சிங்கப்பூர்''1

பல்வேறு தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கிடையிலுள்ள முரண்பாடுகளை சீனத் தலைவர்கள் பாவித்துள்ளனர். ஏஸியன் நாடுகளுக்கும் இந்தோ - சீனா குடா நாட்டைச் சேர்ந்த மூன்று நாடுகளுக்குமிடையில் பிளவை ஏற்படுத்தவும், மலேஷியாவுக்கும் இந்தோனேஷியாவுக்கு மிடையில் பிரிவினையைத் தூண்டவும், பர்மாவுக்கும் தாய்லாந்துக்கு மிடையில் பூசலை ஏற்படுத்தவும் அவர்கள் முயன்றனர். உலகிலேயே புரட்சி வெடிக்கக்கூடிய பிராந்தியங்களுள் ஒன்றாக தென் கிழக்கு ஆசியா இருப்பதையும், இங்கு தேசிய விமோசன இயக்கம் வளர்ந்தோங்கி வருவதையும், கலோனியலிஸமும் ஏகாதிபத்தியமும் விரைவாக மறைவதையும் இவர்கள் தமது சொந்த விஸ்தரிப்புவாத நோக்கங்களுக்குப் பயன்படுத்த விழைகிறார்கள். 1954 இல் வியத்நாமில் பிரெஞ்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டபோது இந்தோ சீனாவில் உலக ஏகாதிபத்தியத்தின் பிரதம தலைவனான ஐக்கிய அமெரிக்கா கால் வைப்பதைத் தடுப்பதற்காகவும், மூன்று இந்தோசீனா நாடுகளும் பூரண வெற்றியீட்டுவதைத் தவிர்ப்பதற்காகவும் பலவீனப்பட்ட கலோனியல் வல்லரசான பிரான்ஸ் தென் வியத்நாமிலும் லா வோஸிலும் கம்புச்சியாவிலும் நிலை கொண்டிருப்பதை சீனத் தலைவர்கள் விரும்பினார்கள். இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்கர்கள் பலவீனப்படுத்தப்பட்டு தோற்கடிக்கப்பட்ட போதும் அதே சீனத் தலைமை இந்தப் பிற நேச நாடுகளின் மீது அமெரிக்க - சீன கூட்டு ஆதிக்கத்தை ஸ்தாபிப்பதற்கும், இங்கு சோவியத்தின் செல்வாக்கை கட்டுப்படுத்துவதற்கும் ஐக்கிய அமெரிக்கா இங்கு நிலை கொண்டிருக்க வேண்டும் என்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் புரட்சியின் முன்னேற்றத்தை ஏகாதிபத்தியவாதிகள் தடுத்து நிறுத்த வேண்டும், தென் கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் ''ஆதிக்க இடை வெளி'' யைத் தாம் படிப்படியாக நிரப்ப வேண்டும் என்றும், பின்னர் தமது ஏகாதிபத்திய கூட்டாளிகளை அகற்றி 'ம்ட்டு இந்தப் பிராந்தியத்தின் முழுக் கட்டுப்பாட்டையும் தாம் விதற்கொள்ள வேண்டும் என்றும் இவர்கள் விரும்புகின்றனர். வமது சூழ்ச்சிகரத் திட்டங்களை மூடிமறைக்க சோவியத் செல்வாக்கை தடுத்து நிறுத்த வேண்டும் என்று அவர்கள் கபடத்தனமாகக் கூறுகிறார்கள்.

தென் கிழக்கு ஆசியாவில் வியத்நாம் கேந்திர முக்கியத்துவமுள்ள இடத்தை வகிக்கிறது. சீன நிலப் பிரபுத்துவ விஸ்தரிப்பாளர்கள் வியத்நாம் மீது பல தடவைகள் படையெடுத்தனர்.

---

1. 1960 மேயில் வியத்நாமுக்கு பிரதமர் சூ என் லாய் தலைமையில் விஜயம் செய்த சீன கட்சி - அரசாங்கத் தூதுக் குழுவினருக்கு வாழ்த்துத் தெரிவிக்க வியத்நாமிலுள்ள ஹோவா பிரதிநிதிகளுடன் நடந்த சந்திப்பின் போது.

இந்த நாட்டை தம்முடன் இணைத்துக் கொள்ளவும், ஏனைய தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு எதிரான ஆக்கிரமிப்புக்கு இதை ஒரு மிதிபலகையாகப் பாவிக்கவும் அவர்கள் விரும்பினர். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர் இந்தப் பிராந்தியத்தில் முதல் தடவையாக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி தொழிலாளர் - விவசாயிகள் ராஜ்யத்தை ஸ்தாபித்த முதல் கம்யூனிஸ்ட் கட்சி வியத்நாம் கம்யூனிஸ்ட் கட்சியே. பிரெஞ்சு கலோனியலிஸ்ட்டுகள் மீதும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மீதும் வெற்றியீட்டியதன் மூலம் வியத்நாம் புரட்சி இந்தப் பிராந்தியத்தில் மாபெரும் செல்வாக்கைப் பிரயோகித்தது. வியத்நாமையும், பின்னர் முழு இந்தோ - சீன குடாநாட்டையும் தமது கைக்குள் கொண்டுவரவும், அதன் பின் தென் கிழக்கு ஆசியாவில் விஸ்தரிப்பை மேற்கொள்வதற்கான மிதிபலகையாக இந்தோ - சீனாவைப் பயன்படுத்தவும் சீனத் தலைவர்கள் எத்தனித்தனர். 1963 செப்டம்பரில் கன்டனில் நடந்த வியத்நாம், சீனா, இந்தோனேஷியா, லாவோஸ் ஆகிய நான்கு கம்யூனிஸ்ட் கட்சிகளது கூட்டத்தில் பிரதமர் சௌ என் -லாய் பின்வருமாறு கூறினார்:

> ''எமது நாடு பெரியது தான், ஆனால் எமக்கு வேறு வழி கிடையாது. தென் கிழக்கு ஆசியாவுக்கான பாதையைத் திறக்க வியத்நாம் தொழிலாளர் கட்சி எமக்கு உதவும் என்று நாம் நம்புகிறோம்.''

வியத்நாமை பலவீனப்படுத்தவும் அதைத் தமது கைக்குள் கொண்டுவரவும் இந்தோ - சீன குடாநாட்டைச் சேர்ந்த மூன்று நாடுகளுக்கு மிடையிலான ஒற்றுமைக்குக் குழிபறிக்கவும், இவற்றிற்கிடையில், குறிப்பாக ஒரு லாவோஸுக்கும் கம்புச்சியாவுக்கும் மறுபுறம் வியத்நாமுக்குமிடையில் பிளவை ஏற்படுத்தவும் சீனத் தலைவர்கள் தம்மாலானதனைத்தையும் செய்தனர். அதே நேரத்தில் வியத்நாமைத் தனிமைப்படுத்துவதற்காக அதன் மீது அபாண்டத்தைக் கக்கவும் அதை இழிவுபடுத்தவும் ஏனைய தென் கிழக்கு ஆசிய நாடுகளையும் வியத்நாமுக்கு எதிராகத் தூண்டிவிட எத்தனித்தார்கள். ஹொாவங்-ஸா தீவுகள் (பராஸேல்ஸ்) மீதும்,' ட்ருவொங்ஸா (ஸ்பராட்லே) ஆர்கிலொகொஸ் மீதும் பீக்கிங் ஆட்சியாளர்கள் சொந்தம் கொண்டாடினார்கள். கிழக்கும் (தென் சீனா) கடல் மீதும், வியத்நாம் மீதும், முழு தென் கிழக்கு ஆசியா மீதும் தனது கட்டுப்பாட்டைப் படிப்படியாக ஏற்படுத்தவும் கிழக்குக் கடலிலுள்ள அபரிமிதமான இயற்கை வளங்களைச் சுரண்டுவதற்குமாக ஐக்கிய அமெரிக்காவின் அங்கீகாரத்துடன்1974 ஆரம்பத்தில் சீனா ட்ருவொங் ஸா (பராஸேல்ஸ்) ஆக்கிபெலாகொஸ் மீது தாக்குதல் நடத்தி அதைக் கைப்பற்றியது.

தமது உலக போர்த்தந்திரத்தைச் சாதிப்பதற்காகச் சீனத் தலைவர்கள் முதலில் தென் கிழக்கு ஆசியாவிலும் பின்னர் அகில உலகிலும் சக்திகளைத் திரட்ட விரும்புகிறார்கள். 1960 ஆம் ஆண்டுகளில் ''உலகப் புரட்சியின் தலைமையை'' சுவீகரித்துக் கொள்வதற்காகவும், சோவியத் யூனியனை எதிர்ப்பதற்காகவும் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் சக்திகளை ஒன்று திரட்ட அவர்கள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர். தமது கட்டுப்பாட்டின் கீழ் ஒரு ''கம்யூனிஸ்ட் சர்வதேசிய'' த்தை உருவாக்குவதற்காகவும், ''பீக்கிங் — ஜகர்த்தா — புனம்பென் — பியொங்யாங் — ஹனோய் அச்சை ஸ்தாபிப்பதற்காகவும் பதினொரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் (இவற்றுள் எட்டு தென் கிழக்கு ஆசியாவைச் சேர்ந்தவை) மாநாட்டைக் கூட்டவும் 1963 ஆம் ஆண்டிலிருந்து அவை தம்மாலானதனைத்தையும் செய்தன. ஐக்கிய நாடுகளுக்கு எதிரான ஒரு ஸ்தாபனத்தை அமைப்பதற்காக அவர்கள் இந்தோனேஷியாவுடன் சேர்ந்து ''புதிய விழிப்புற்ற சக்திகளின் மாநாட்டைக் (கொனெபோ) கூட்ட எத்தனித்தார்கள். இரண்டாவது ஆசிய - ஆபிரிக்க மாநாட்டை (1765 இல் அல்ஜீரியாவில்) நடத்த அவர்கள் முயற்சித்தார்கள். இந்த கபடத் திட்டங்கள் ஏகாத்திய விரோத சக்திகளை ஐக்கியப்படுத்துவதில் தளம் கொண்டுள்ள உலக மக்களின் நலன்களுக்கு எதிராகவும், சோஷலிஸ அமைப்பையும் தேசிய சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்திற்குமான இயக்கத்தையும் பலப்படுத்துவதில் தளம் கொண்ட உலகப் புரட்சியின் நலன்களுக்கும் விரோதமானவையானதால் இவை தோல்வி கண்டன.

தமது போர்த்தந்திரத்தில் வியத்நாமை மிக முக்கிய காரணியாக சீனத் தலைவர்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகக் கருதி வந்துள்ளனர். வியத்நாம் மீது தமது கட்டுப்பாட்டை ஏற்படுத்த அவர்கள் எல்லாவித முயற்சிகளையும் மேற்கொண்டனர். இதற்கு வியத்நாம் பலமிக்க, சுதந்திரமான, ஐக்கியப்பட்ட, சுபீட்சமுள்ள நாடாக மாறப்படாது, மாறாக அது சீனாவில் தங்கியிருக்க வேண்டும் என்பது அவர்களின் பாதையாக இருந்தது. இதற்கு மாறாக சுதந்திரமான அரசியல், சுயாதிபத்திய மார்க்கத்தைப் பின்பற்றுகிற, சர்வதேச அரசியலில் சரியான வழியைக் கடைப்பிடிக்கிற சுதந்திரமான, ஐக்கியப்பட்ட, சுபீட்சமான, பலமிக்க வியத்நாம் சீனத் தலைவர்களின் போர்த்தந்திரத்திற்கு, முதலாவதாக தென் கிழக்கு ஆசியாவைப் பொறுத்த அவர்களின் விஸ்தரிப்புக் கொள்கைக்கு முட்டுக்கட்டையாக இருக்கும். இதனால்தான் வியத்நாம் புரட்சிக்கு உதவுகிற, அதே வேளையில் அதற்குக் குந்தகம் செய்கிற இரட்டைக் கொள்கையைச் சீனத் தலைமை பின்பற்றியது. வியத்நாம் ஏகாதிபத்தியத்தின் மீது வெற்றியீட்டிய ஒவ்வொரு தடவையும் அவர்கள் பின்னையதுடன் உறவு கொண்டு வியத்நாமின் நலனுக்கு எதிராக அதற்கு விட்டுக் கொடுப்புகளைச் செய்தனர். இதனால்தான் இவர்கள் வியத்நாமுக்கு எதிரான மறைமுகமான எதிர்ப்பிலிருந்து பகிரங்கமான குரோதத்திற்கும் மாறியதுடன் வியத்நாம் மீது ஆக்கிரமிப்பு யுத்தத்தை மூர்க்கத்தனத்துடன் கட்டவிழ்த்து விட்டனர்.

வியத்நாமைக் கைப்பற்றும் சீனத் தலைவர்களின் கொள்கை ஏனைய தென் கிழக்கு ஆசிய நாடுகளைப் பொறுத்தும், மற்றைய அண்டைய நாடுகளைப் பொறுத்தும் சீனாவினது கொள்கையின் பொது கட்டுக்கோப்புக்கமைந்ததே இவர்கள் இந்தியாவினது பிர

தேசத்தில் ஒரு பகுதியைக் கைப்பற்ற விரும்புகிறார்கள் 1962 சீன இந்திய யுத்தத்தின் போது இவர்கள் இதைச் செய்தனர். ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் ''தலைமைப் பாத்திரத்'' திற்குத் தம்முடன் போட்டியிடக்கூடிய வலுமிக்க ஒரு இந்தியாவை அவர்கள் விரும்பவில்லை. மொங்கோலிய மக்கள் குடியரசை ஒரு சுதந்திரமான ராஜ்யமாக அங்கீகரித்த போதிலும் அதை அபகரிக்கவே அவர்கள் இப்போதும் விரும்புகிறார்கள். சோவியத் சோஷலிஸக் குடியரசுகளது ஒன்றியத்தினது பிராந்தியத்தில் ஒரு பகுதியை அபகரிக்க அவர்கள் விரும்புகிறார்கள். சீனாவின் அருகில் வலுவுள்ள ஒரு சோவியத் யூனியனை அவர்கள் விரும்பவில்லை

சோவியத் யூனியனுக் கெதிராக போர் தொடுப்பதற்கு ஏகாதிபத்திய நாடுகளைத் தூண்டுவதற்கும், அதற்கெதிராக ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமெரிக்க நாடுகளை ஏவுவதற்காகவும் கூட அவை சோவியத் யூனியனின் கௌரவத்தைத் தாழ்மைப்படுத்த எத்தனிக்கின்றன. ''மலை முகட்டிலிருந்து புலிகளைப் பொருதுவதைப் பார்ப்பது'' என்ற மாவோ ஷெடொங்கின் சூத்திரத்திற்கேற்ப ''மேலாதிக்கவாத எதிர்ப்பு'' என்ற சுலோகத்தின் கீழ் ஏகாதிபத்திய மற்றும் பிற்போக்குச் சக்திகளின் ஒத்துழைப்போடு ஒரு சர்வதேச சோவியத் விரோத ''படையை'' உருவாக்க சீனத் தலைவர்கள் பெரும் பிரயத்தனங்களை யெல்லாம் மேற்கொண்டனர்.''

பல மேற்கு ஐரோப்பிய அரசியல்வாதிகளும், பத்திரிகையாளர்களும் குறிப்பிட்டுள்ளதைப்போல ''கடைசி வியத்னாமியன் இருக்கும்வரை ஐக்கிய அமெரிக்கா போராடத்தயாராயிருந்ததைப் போல'' அது ''கடைசி மேற்கு ஐரோப்பியன் இருக்கும் வரை சோவியத் யூனியனை எதிர்த்துப் போராடவும்'' அது உறுதி பூண்டது.

மிகத் திறமையாக ஆட்டுத்தோல் போர்க்கப்பட்டிருப்பினும் சீனத் தலைவர்களின் இன்றைய சர்வதேச உபாயமானது அத எதிர்ப் புரட்சி மற்றும் முற்றுமுழுதான பிற்போக்குப் பண்பு என்பவற்றையே வெளிப்படுத்துகிறது. பெரிய தேச இன ஆதிக்கவாதிகள் மற்றும் பூர்ஷுவா தேசியவாதிகளைப் போன்றே சீனத் தலைவர்களின் உண்மையான உருவம் வெளிப்பட்டுள்ளது.

கெட்டித்தனமாக உண்மை நிலையை மறைத்தாலும் வியத்னாம் சம்பந்தமான சீன ஆட்சியாளர்களின் இன்றைய கொள்கை வியத்னாம் மக்களை அடக்கியொடுக்கி வியத்னாமை சீனாவின் ஒரு உப பிராந்தியமாகவே வியத்னாமை ஆக்கிக்கொள்ளும் நோக்கம் கொண்ட கடந்த நூற்றாண்டுகளின் ''சுவர்க்க சாம்ராஜ்ய'' ஆட்சியாளரின் கொள்கை போன்றே இருக்கிறது.



# இரண்டாம் பகுதி

## சீனாவும் 1954ல் இந்தோ சீன யுத்த முடிவும்

### 1. தியன் பெயன் பஃபூவின் பின் முழுத் தேசத்தையும் விடுவிக்க வியட்நாம் மக்களால் முடிந்தது.

காலவரையறையற்ற போராட்டம் மற்றும் சுய சார்பு என்ற உத்வேகத்தால் வழி நடத்தப்பட்ட வியத்னாம் மக்கள் 1945 ல் தமது ஆகஸ்ட் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி வியத்னாம் ஜனநாயகக் குடியரசை ஏற்படுத்தினர். சில மாதங்களின் பின் பிரெஞ்சு காலனித்துவவாதிகள் தென் பகுதி மாகாணங்களை மீண்டும் பிடித்துக் கொண்டதால், தமது தேச சுதந்திரம், ஐக்கியம், பிரதேச முழுமைத்துவம் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரானதோர் யுத்தத்தை 1946 டிசம்பர் முதல் வியத்னாம் மக்கள் நடத்த வேண்டியதாயிற்று.

மிக முனைப்பும் தீரமுமிக்க வியத்னாம் மக்களின் அந்த யுத்தம் பெரும் பெரும் வெற்றிகளையே ஈட்டிற்று. வியத்னாம், லாவோஸ் (லாவோ பாதுகாப்பு அரசாங்கத்தின் தலைமையிலான), கம்பூச்சிய (கம்பூச்சிய பாதுகாப்பு அரசாங்கத்தின் தலைமையிலான) மக்களால் ஈட்டப்பட்ட வெற்றிகள், விசேடமாக வரலாற்று முக்கியத்துவமிக்க தியென் பியென் பஃபூ வெற்றியானது பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளை முற்றாகவே சிக்கலானதோர் நிலைமைக்கு ஒதுக்கி யுத்த முனையின்சக்திச் சமநிலையை வியத்னாம், லாவோஸ், கம்பூச்சிய நாடுகளுக்குச் சாதகமானதோர் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தின.

1954 பெப்ரவரியில் இந்தோசீன யுத்த முனையைப் பரிசீலித்த பின் பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சர் ஆர். ப்ளோவன், அதிகாரிகளின் கூட்டு தலைவர்களின் முதல்வர் ஜெனரல் பி. எலை, இராணுவ அதிகாரிகளின் தலைவர் ஜெனரல் பிளான்க், விமானப்படை அதி

காரிகளின் தலைவர் ஜெனரல் ஃபே ஆகியோர் பின்வரும் பாதகத்தை எதிர்பார்க்கும் முடிவுக்கே வந்தனர்.

> ''எவ்வளவு பலமுள்ளதாயிருப்பினும் முன்னணிப் படையை சக்திப்படுத்துவதென்பது எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. அதற்கு மேலாக, கலப்பு இன நாட்டின் முயற்சிகள் ஈற்றுக் கட்டத்தை எய்திவிட்டன. இப்போது நம் நம்பிக்கை எல்லாம் பிணக்கிற்கான அரசியல் தீர்வுக் குரியதோர் மிகச் சாதகமான இராணுவ நிலைமைகளை உருவாக்குவதேயாகும்.''

வட பகுதி முகத்துவாரத்திலுள்ள வியத்னாம் மக்கள் படையின் அபாயத்தை எதிர்பார்த்த பிரெஞ்சுப் பிரதமர் லேனியல் 1954 மே 18 ம் திகதி ''தற்போது நமது மிக முக்கிய கருமம் ஆக்கிரமிப்புப் படைகளைப் பாதுகாப்பதேயாகும்'' என்ற பணிப்புரையை பிரெஞ்சு ஆக்கிரமிப்புப் படைகளின் கொமாண்டரான ஜெனரல் நவார்ரேக்கு அறிவிப்பதன் பொருட்டு ஜெனரல் எலையை இந்தோசீனத்திற்கனுப்பினார்.

1954 ஜெனீவா மாநாட்டு பிரெஞ்சு பிரதிநிதிக்குழு துணைத் தலைவரான ஸ்தானிகர் சவ்வெல் பிரெஞ்சு அயல்துறை அமைச்சருக்கனுப்பிய அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> ''ஹனோயைப் பாதுகாப்பது இனி முடியாததே. மேலும் இரு படைப் பிரிவுகளை அனுப்பினாலும் கூட ரொன்கின் தலைநகரை நம் கைக்குள் வைத்திருப்பது சாத்தியமல்ல என்று எமக்கு அறிவிக்கப்பட்டு விட்டது . . . . .''

லாவோசிலும் கம்பூச்சியாவிலும் கைவைக்காத விதத்திலும் வியத்னாமிலுள்ள எல்லா நலன்களையும் பாதுகாப்பதற்காகவும் (இது பிரான்சுக்குச் ''சாதகமான'' தீர்வாக ஏற்கப்பட்டது) இராணுவ பலம் மிக்கதோர் நிலைபாட்டிலிருந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள லேனியல் அரசு முன்னர் எண்ணியிருந்தது. ஆனால் தியென் பியென் பஃபூ தோற்கடிக்கப்பட்டபின், முதலில் சர்வநாசமாகக்கூடிய அபாயத்திலிருந்து பிரெஞ்சு ஆக்கிரமிப்புப் படைகளைப் பாதுகாப்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அரசாங்கம் ஆர்வம் காட்டிற்று.

பிரெஞ்சு மக்களின் இயக்கமான பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி இந்தோ சீனாவிலேற்பட்ட ''குரூர யுத்தத்திற் கெதிராக மிகத் தீவிரமாக வளர்ந்துகொண்டிருந்தது. ஏற்கனவே பல பிரச்னைகளினால் வெடிப்புகளைக் கண்டிருந்த பிரெஞ்சு நிர்வாகம் தீவிரமான பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிகளினால் மேலும் வெடிப்புகளைக் கண்டது. இந்தோசீனத்தில் பிரான்ஸ் முறியடிக்கப்பட்டால் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் முழுக் காலனித்துவ அமைப்பின் தகர்வுக்குமே — குறிப்பாக வட ஆபிரிக்காவில் — இட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறானதோர்



நிலைமையிலேயே சோவியத் யூனியன், சீனா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய சாம்ராஜ்யம், இந்தோ சீனாவில் யுத்தத்திலீடுபட்டுள்ள பிரிவுகள் ஆகியோர் பங்குபற்றிய இந்தோசீனா பற்றிய 1954 ஜெனீவா மாநாட்டில் பிரான்சும் டங்குபற்றிற்று.

அரசியல், பொருளாதார இராணுவ ரீதியில் உலகம் எதிரெதிராக இரு கூறான வேளையில் 1949 ல் மக்கள் சீனக் குடியரசு உதயமாயிற்று.

ஐரோப்பாவில் சூழ்ச்சிப் போர் (அல்லது பனிப்போர்) விரிவடைந்தது; ஆசியாவில், கொரியாவிலும் இந்தோ சீனத்திலுமாக இரு பயங்கரப் போர்கள் நடந்துகொண்டிருந்தன. தமது நாட்டில் அப்போதிருந்த சமாதான நிலைமையை சாதகமாக்கி தமது பொருளாதாரத்தைப் புனரமைக்கவும் வளர்ச்சியுறச் செய்யவும் தமது இராணுவ வளத்தைப் பலப்படுத்த விரும்பிய புதிய சீனாவின் தலைமையானது அதைத் தொடர்ந்து தென் கிழக்காசியாவையே தமது முதற் குறியாகக் கொண்டு மாபெரும் - தேச விரிவாக்கம் மற்றும் வல்லரசு மேலாதிக்கம் என்ற நிலைக்கு சீனாவை இட்டுச் செல்ல பேராசை கொண்டது.

கொரிய யுத்தத்தில் சீன இராணுவத்தில் சுமார் பத்து லட்சம் பேருக்கு சேதமேற்பட்டிருப்பினும் வட - கிழக்கில் ஒரு பாதுகாப்புப் பிராந்தியத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக சீனத் தலைமையானது கொரியாவில் யுத்தம் - நிறுத்தம் செய்வதை ஏற்றுக் கொண்டது. இது சம நிலையைப் பாதுகாப்பது, கொரியா பிரிக்கப்படுவதை நீடிப்பதற்குமேயான செயலேயாகும்.

வியத்னாமும் சீனாவும் அண்டை நாடுகளாகும். இரு தேச மக்களும் எப்போதுமே ஒருவர்க்கொருவர் உதவியும், ஒத்துழைப்பும் ஆதரவும் கொண்டு வாழ்ந்திருக்கின்றனர். ஏனெனில் சுதந்திர வியத்னாம் என்றால் ஏகாதிபத்தியமானது தென் பகுதியிலிருந்து சீனாவை அச்சுறுத்த முடியாது, விடுதலையுற்ற சீனா என்றால் ஏகாதிபத்தியமானது வட பகுதியிலிருந்து வியத்னாமை அச்சுறுத்த முடியாது என்பதே இதன் தாற்பரியமாயிருந்தது. 1950 ல் மக்கள் சீனக் குடியரசு, வியத்னாம் ஜனநாயக குடியரசை அங்கீகரித்து இராஜதந்திர உறவுகளையும் ஸ்தாபித்துக் கொண்டது.

வியத்னாம் பிரான்சுக்கெதிரான பாதுகாப்பு யுத்தத்தின் கடைசி ஆண்டுகளில் வியத்னாமுக்கான பிரதான இராணுவ தளபாடங்களை விநியோகித்தது சீனாவே.

1954 ஜெனீவா மாநாட்டில் வியத்னாம் பரந்த விதத்திலானதோர் தீர்மானத்தை முன்வைத்தது: ஒவ்வொரு தேசத்தின் சுதந்திரம், இறைமை, ஐக்கியம், எல்லைப் பூரணத்துவம் என்பவற்றை கௌரவிக்கும் அடிப்படையில் வியத்னாம், லாவோஸ், கம்பூச்சிய பிரச்னைகளுக்கு அரசியல் தீர்வு காண்பதோடு முழு இந்தோசீனா

குடா நாட்டிலும் பகைமையை ஒழிப்பது என்பதே அத்தீர்மான மாகும்.

அந்நேரத்தில் அமெரிக்கா சீனாவுக்குப் பகையாயிருந்தது. பிரான்சுக்குச் சீனாவுடன் இராஜதந்திர உறவுகளிருக்கவில்லை அதே வேளையில் சியாங் கெய் ஷேக் அரசு ஐ. நா. நிரந்தர பாதுகாப்பு கவுன்சிலின் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளிலொன்றாயிருந்தது என்ற உண்மைகளுக்குமப்பால் முக்கியமான சர்வதேச பிரச்னை களுக்கான பேச்சுவார்த்தைகளையும், உடன்பாட்டையும் பெரு வல்லரசுகளுடன் மேற்கொள்ளும் சந்தர்ப்பமாகவே 1954 ஜெனீவா மாநாட்டை சீனத் தலைவர்கள் பாவித்துள்ளனர்.

இந்தோசீனப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர கொரிய பாணியிலானதோர் தீர்வையே சீனத் தலைவர்கள் பிரயோகித் துள்ளனர். அதாவது எவ்வித அரசியல் தீர்வுமின்றி பகைமை தான் இல்லாமலாக்கப்பட்டன. 1953 ஆகஸ்ட் 24 ல், ஏனைய பிணக்குகளுக்கும் ஒரு மாதிரி வடிவமாக கொரிய இடைக்கால நிறுத்தத்தையே கொள்ளலாம் என்று சொன்னவரும் பிரதமர் சௌ என் லாய் தான். அவ்விதமானதோர் தீர்மானத்தினால் அவர்கள் தென்கிழக்காசியாவில் ஒரு பாதுகாப்புப் பிராந்தியத்தை உருவாக்கவும், இந்தோ சீனாவில் பிரெஞ்சுக்காரர்களுக்குப் பதில் அமெரிக்கர் வருவதைத் தவிர்ப்பதும், அமெரிக்கருடன் நேர மோதலைத் தவிர்ப்பதும், தமது தென் பிராந்திய எல்லைக்கான த து பாதுகாப்பை உறுதி செய்வதும் அதே வேளையில் வியத் நாமின் வெற்றியைக் கட்டுப்படுத்துவதும் மற்றும் மூன்று இந்தோ சீன நாடுகளின் மக்களையும் பிளவுபடுத்துவதும் இந்நாடுகளை நலி வுறச் செய்து ஈற்றில் இந்நாடுகளைச் சேர்த்து, தென் கிழக்காசி யாவுக்கான தமது விரிவாக்கத்திற்கு ஏறிச் செல்லும்மதிபலகை யாக அவற்றைப் பாவிப்பதுமே அவர்களின்எதிர்பார்ப்பாயிருந் தது.

ஜெனீவா மாநாட்டில் பிரெஞ்சுக்காரர்கள் இந்தோசீனா தனது ஆக்கிரமிப்புப் படைகளைப் பாதுகாப்பதற்காக கோரிய பாணியிலான இடைக்கால போர் நிறுத்தத்தையே (வியத்நாமைப் பிரித்து இந்தோசீனாவில் பிரெஞ்சுக் காலனித்துவத்தைப்பேணு தலையே முன்வைத்தனர்.

## 3. இந்தோசீனா பற்றிய 1954 ஜெனீவா மகாநாடும் சீனத் தலைவர்களின் துரோகமும்

எனவே சீனாவின் நிலைபாடு வியத்நாமினதைவிட முற்றிலும் மாறுபட்டது அதே வேளை பிரான்சுக்குச் சாதகமானது என்பது வெளிப்படையாயிற்று.

இந்தோ சீனா பற்றிய ஜெனீவா மாநாட்டுத் தயாரிப்புகள் சம்பந்தமாக 1954 ஏப்ரலில் நடந்த வியத்நாம், சோவியத், சீன



தூதுக்குழுக்களின் கூட்டமொன்றில் சீனக் குழு ''பிணக்குகளை அங்கு விரிவுபடுத்துவது என்ற நிலைமையில் வியத்நாமை மக்கள் சீனக் குடியரசு பகிரங்கமாகவே ஆதரிக்க முடியாது'' எனக் கூறி ற்று.

வியத்நாமுக்கு இராணுவ சாதன விநியோகிப்பது, வியத் நாமுக்கு உதவி வழங்கும் மார்க்கத்தில் கட்டுப்பாட்டைக் கொண்ட நாடு மற்றும் வியத்நாமுடன் பேச்சுவார்த்தை நடத்த பிரான்சின் விருப்பமின்மை என்பவற்றை யெல்லாம் ஆதாயமாகக் கருதிய சீனத் தலைவர்கள், இந்தோசீன விவகாரத்திற்கானதோர் தீர் விற்கு அடிப்படை கருத்துக்களைப்பற்றி பிரான்சுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்த சம்மதித்தார்கள்.

ஜெனீவா மாநாட்டுப் பேச்சுவார்த்தைகள் இரு நிலைபாடு களில் நடந்தேறிற்று:

முதலாவது நிலை: 1954 மே 8 முதல் ஜூன் 23 வரை வியத்நாமியர்களுடனான சந்திப்பைத் தவிர்த்துவந்த அதே வேளை யில் பிரெஞ்சு குழுவின் தலைவர் சீனக் குழுவுத் தலைவருடன் நான்கு தடவைகள் நேரடி பேச்சுவார்த்தைகளை மேற்கொண் டார். இந்தோசீனாவிற்கு ஒத்த விதத்தில் போர் நிறுத்தத்திற்கான அடிப்படை அம்சங்களில் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தனர்.

பிரான்சிற்கும், சீனாவிற்குமிடையே 1954 ஜூன் 17 ல் நடந்த மூன்றாவது கூட்டத்தில் பிரெஞ்சு தூதுக் குழுத் தலைவர் ஜீத். பிதாவுல்ட்டைச் சந்தித்த சௌ என் லாய், வியத்நாம், லாவோஸ், கம்பூச்சிய மக்களின் நலன்களுக்குத் தீமையான அரசியல் சலுகை களை ஏற்படுத்தினார். வியத்நாமில் இரு நிர்வாகங்களிருப்பதை (வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசும் பவோ தாய் பொம்மை அரசும்) சீனா ஏற்றுக்கொள்வது, கம்பூச்சியாவின் ரோயல் லாவோ அரசையும், ரோயல் அரசாங்கத்தையும் அங்கீகரிப்பது, ஜெனீவா மாநாட்டில் கம்பூச்சியா பங்குபற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வாபஸ் பெறுவது, லாவோஸ் அரசாங்க தூதுக்குழு பங்குபற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வாபஸ் பெறுவது, கம்பூச்சிய அரசு பங்குபற்றுவதை வாபஸ் பெறுவது, லாவோஸ், கம்பூச்சியா விலிருந்து வியத்நாமிய வாலன்டியர்களுட்பட அந்நிய துருப்புக்களை வாபஸ் பெறுவது பற்றிய பிரச்னையை எடுப்பது என்பனவே அவை யாகும். 1954 ஜூன் 23 ல் நடந்த நாலாவது கூட்டத்தில் பிரதமர் சௌ என் லாய் புதிய பிரெஞ்சுப் பிரதமர் மென்டஸ் பிரான்சைச் சந்தித்து மேலும் சில சலுகைகளை ஏற்படுத்தினார். வியத்நாமை இரு பிராந்தியங்களாகப் பிரிப்பது, முதலில் இராணுவப் பிரச்னை களைத் தீர்ப்பது, வியத்நாம், லாவோஸ், கம்பூச்சிய பிரச்னைகளுக்கு தனிப்பட்ட தீர்வு காண்பது என்பனவே அவையாம்: தென் கிழக் காசியாவில் ஒரு புதிய தோற்றத்தோடு இந்தியா, இந்தோனேசியா போல இம் மூன்று நாடுகளையும் பிரெஞ்சு யூனியனின் உறுப்பினர் களாக சீனா அங்கீகரிக்கும், இதற்கு மாறாக சீனா எதிர்பார்த்த

தெல்லாம் இந்தோசீனாவில் அமெரிக்க இராணுவத் தளங்களில்லாமலிருக்க வேண்டுமென்பதையே. இவ்விதத்திலேயே இந்தோசீன பிரச்னை சம்பந்தமானதோர் உடன்பாட்டிற்கு சீனாவும், பிரான்சும் வந்தன. சீனாவுக்கும் பிரான்சிற்கு மிடையிலான ஒப்பந்தமானது சௌ என் லாய், மென்லில் பிரான்ஸ் சந்திப்பு நடந்து ஆறு தினங்களின் பின் 1954 ஜூன் 29 ல் அமெரிக்கா, பிரிட்டனால் முன்வைக்கப்பட்ட 7 அம்ச தீர்வுக்கு ஒத்ததாகவே இருந்தது.

இரண்டாம் நிலை: 1954 ஜூன் 23 - ஜூலை 20 க்குமிடையில் பிரெஞ்சு தூதுக் குழு திட்டமான பிரச்னைகளின் தீர்வுக்காக வியத்னாமிய தூதுக் குழுவுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்திற்று. சீனா தன் பங்கிற்கு சலுகைகளை ஏற்படுத்தும்படி வியத்னாமை கேட்டுக் கொண்டிருந்தது. 1954 ஜூலை 10 ம் திகதியளவில் வியத்னாம், லாவோஸ், கம்பூச்சியப் விவகாரங்களில் தன் கொள்கையில் தொடர்ந்தும் உறுதியாயிருந்த வியத்னாம், ஏனையவர்களுடன் தமக்கும் சம இடம் இருக்க வேண்டுமென்றும் 13 வது சமாந்தர வரையில் வியத்னாமில் ஒரு தற்காலிக இராணுவ எல்லையை ஏற்படுத்துவது மற்றும் தேசிய மீள் இணைவுக்காக ஆறு மாதங்களுக்குள் சுதந்திரமான தேர்தலை நடத்துவது முதலிய கோரிக்கைகளையே முன்வைத்தது. வியத்னாமின் நோக்கின்படி லாவோ, மற்றும் கம்பூச்சிய பிரச்னைக்குத் தீர்வு என்பதில் லாபவா பாதுகாப்புப் போராட்டப் படைகளுக்கு இரு மீள் இணைவுப் பிராந்தியங்களை (ஒன்று வடக்கில் சீன - வியத்னாம் எல்லைகளுக்கருகிலும், மற்றது மத்திய மற்றும் தென் லாவோசிலும்) ஏற்படுத்துவது என்பது இடம் பெற வேண்டுமென்றும், அவ்வாறே கம்பூச்சிய விவகார தீர்வில் பாதுகாப்புப் போராட்டப் படைகளுக்கு இரு மீள் இணைவுக் குழுக்களை ஏற்படுத்துவதும் (ஒன்று மீகொங் ஆற்றின் கிழக்கு மற்றும் வட கிழக்கிலும் மற்றது ஆற்றின் தென் மேற்கிலும்), மற்றும் லாவோஸிலும் கம்பூச்சியாவிலும் ஆறு மாதங்களுக்குள் பொதுத் தேர்தல் இடம் பெற வேண்டுமென்பதும் குறிப்பிடப்பட்டன.

1954 மே மாத ஆரம்பத்தில் 16 வது சமாந்தர வரையை வியத்னாமின் இரு பிராந்தியங்களுக்குமிடையிலான எல்லைக்கோடாக இருக்க வேண்டுமென கோரிய சீன தூதுக் குழு, ஹபனாய் ஹய் பொங், தேசிய நெடுஞ்சாலை இல 5 (ஹனோயை றை பொங் குடனிணைப்பது) என்பவற்றையும் வியத்னாம் கைதுறக்க வேண்டுமென்றும் கூட கோரின:

"இத் திட்டம் (16 வது சமாந்தர வரை) ஏற்றுக்கொள்ளப்பட முடியாவிட்டால், இன்னொரு தீர்வைக் காணலாம்: அருகிலேயே குறிப்பிட்டளவு பிரெஞ்சுத் துருப்புகள் நிலை கொண்டிருக்கக் கூடியதாக ஹை பொங் சுதந்திர துறைமுகமாக்கப்படலாம். இதையும் ஏற்க முடியாவிடில், "கூட்டிணைவான கட்டுப்பாட்டின்"1

உள

! சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிக்கு 1954 மே 30 திகதியிட்டு சௌ என் லாய் அனுப்பிய செய்தி ( தன் ஒரு நகல் வியத்னாம் தொழிலாளர் கட்சியின் மத்திய கமிட்டிக்கு அனுப்பப்பட்டது).



கீழ் நெடுஞ்சாலை இல. 5, ஹனோய், ஹை பொங் என்பவற்றை இராணுவமகற்றப்பட்ட பிராந்தியமாக்கலாம். அதன்பின் 1954 ஜூலை 10 முதல் ஹ ஜெனீவா மாநாடு முடிவதற்கு பத்து தினங்களுக்கு முன்னர் ஹ வியத்னாமிலிருந்து சலுகை பெறும் பொருட்டு சீனா மேலும் நிர்ப்பந்தத்தைத் தந்தது:

"பிரெஞ்சு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக சரியானதும் நியாயமானதுமாகவே நிபந்தனைகள் இருத்தல் வேண்டும், அப்படியானால் பத்துத் தினங்களுக்குள் ஒரு ஒப்பந்தத்திற்கு வரலாம். மாநாட்டை அமெரிக்கா சீர்குலைக்க அனுமதியாத விதத்தில் விவகாரங்களைச் சிக்கலாக்காமலும் விவாதங்கள், நீண்ட பேச்சுவார்த்தைகளில் காலத்தை விரயமாக்காமலுமிருக்க வேண்டும்."!

சீனாவின் பந்தோபஸ்திற்கு அச்சுறுத்தலாயிருக்கக்கூடிய இந்தோ சீனத்தில் அமெரிக்க இராணுவம் தலையிடக்கூடிய சாத்தியமானது பிறகு சீனாவை கிலேசமடையச் செய்தது. எனினும் வியத்னாம் மீது நெருக்கடியை ஏற்படுத்தவல்ல அமெரிக்க யுத்த ஆக்கிரமிப்பின் சாத்தியமிருந்ததை சீனா தனக்குத் சாதகமாக்கிக் கொண்டது என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

உண்மையில் கொரிய யுத்தத்தின் பின் இந்தோ சீனத்தில் நேரடியான இராணுவ தலையீட்டைச் செய்யஅமெரிக்காவால்முடியவில்லை. ஜெனீவா மாநாட்டில் அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட தீவிரப் போக்கானது யுத்த முனையில் பிரான்ஸ் முறியடிக்கப்பட்டால் இந்தோ சீனத்தில் அமெரிக்கா தலையிடுவதற்கு சாதகமற்றதோர் உடன்பாட்டை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தைப் பிரதிபலிப்பதாகவே இருந்தது. இந்தோ சீன விவகாரத்திற்கு ஒரு தீர்வு காண்பதற்கு பிரான்சும் சீனாவும் சம்மதித்த பின் அமெரிக்க பொம்மையான நிகோதின் தியென், சைகோன் பொம்மை அரசாங்கத்தின் பிரதமரானபின் (1954 ஜூன் 13) வியத்னாம், லாவோஸ், கம்பூச்சியா என்பவற்றின் மூன்று பிரதான பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு பிரான்சினாலும் சீனாவினாலும் தயாரிக்கப்பட்டதோர் ஒப்பந்தத்தை தானும் ஏற்றுக்கொள்ளலாம் என அமெரிக்கா தீர்மானித்தது. எவ்வாறாயினும் மாநாட்டின் ஈற்றுத் தஸ்தாவேஜில் அமெரிக்கா கைச்சாத்திடவில்லை. ஏனெனில் பின்னர் நிகோ தின் தியென் நிர்வாகத்தின் மூலம் ஜெனீவா ஒப்பந்தங்களை மீறவும், அமெரிக்கா நுழைவதற்காக இந்தோசீனத்தை விட்டு பிரான்ஸ் வெளியேற வேண்டுமென நிர்ப்பந்திக்கவும் அமெரிக்கா எதிர்பார்த்தது.

தியென் பியென் பஃபூவின் பின், சோஷலிஸ முகாமின் — விசேடமாக சீனாவின் — ஒத்துழைப்போடு வியத்னாம் இராணுவமும் மக்களும் தமது முழு நாட்டையும் விடுவிக்க முடிந்ததெனினும்

! 1954 ஜூலை 10 திகதியிட்டு சௌ என் லாய் வியத்னாம் தொழிலாளர் கட்சியின் மத்திய கமிட்டிக்கனுப்பிய செய்தி.

ஜெனீவாவில் பிரான்ஸ், சீனத் தூதுக் குழுக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வு யுத்த முனையின் சக்திச் சமநிலையைப் பிரதிபலிக்கவுமில்லை வியத்னாம் தூதுக்குழுவினால் முன்வைக்கப்பட்ட அரசியல் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றவுமில்லை.

தனது சமாதானம் விழையும் பாரம்பரியத்தினாலும் பேச்சாவார்த்தைகளின் மூலம் பிணக்குகளை தீர்க்கின்ற பொதுப் போக்கினாலும், சீனாவின் நெருக்குதல்களினாலும் பின்வரும் கோட்பாடுகளை முன்வைத்து ஒரு தீர்வை வியத்னாம் ஏற்றுக்கொண்டது: வியத்னாம், லாவோஸ், கம்பூச்சிய மக்களின் அடிப்படை தேசிய உரிமைகளைக் கௌரவித்தல்; வியத்னாமிலும் முழு இந்தோ சீனப் போர்முனையிலும் யுத்த நிறுத்தம்; பிரெஞ்சுத் துருப்புகளை வாபஸ் பெறுதல்; வியத்னாமை இரு பிராந்தியங்களாகப் பிரிக்கும் 17 வது சமாந்தர வரையில் தற்காலிக இராணுவ எல்லையை ஏற்படுத்துவது தேசிய மீள் இணைவுக்காக இரண்டாண்டுகளுக்குள் பொதுத் தேர்தல் நடத்துவது, காம்நியூ, பொன்ங்சாலி ஆகிய இரு மாகாணங்களைச் சேர்த்து ஒரே பிராந்தியத்தை லாவோ போராட்டப் படைகளுக்காக உருவாக்குதல்; எவ்வித மீள் இணைப்பு பிராந்தியங்களையும் ஏற்படுத்தலும் கம்பூச்சிய போராட்டப் படைகளை கலைத்துவிடுதல் என்பனவே அக் கோரிக்கைகளாகும்.

தியென் பியென் பூ வெற்றியும் 1754 ஜெனீவா ஒப்பந்தங்களும் இந்தோ சீனத்தில் புரட்சிப்படைகளின் மாபெரும் ஜெயத்தைக் குறித்ததோடு பிரெஞ்சு காலனி ஆதிக்கத்தின் அழிவுக்கும் பெரும் பங்களிப்பைச் செய்தன. மறுபுறத்தில் சீனாவுக்கும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு மிடையிலான பட்சபாதத்தினால் ஏற்பட்ட ஜெனீவா தீர்வானது வியத்னாம், லாாவாஸ், கம்பூச்சிய மக்கள் முழுமையான வெற்றியீட்டுவது தவிர்க்கப்பட்டது.

எல்லோரையும் விட சீனத் தலைவர்கள் சிறப்பாக அறிந்திருந்தது இதைத்தான். வியத்னாம், லாவோஸ், கம்பூச்சிய மக்கள் தம் புரட்சிகர போராட்டத்தை சீனத் தலைவர்கள் முதற் தடவையாகக் காட்டிக் கொடுத்ததும் அப்போதுதான்.



## மூன்றும் பகுதி

# சீனாவும் தென் வியத்னாம் விமோசனத்திற்கும் தேசத்தின் மீள் ஒன்றிணைப்பிற்குமான வியத்னாம் மக்களின் போராட்டமும் (1954-1975)

வியத்னாம் பற்றிய 1954 ஜெனீவா ஒப்பந்தங்களைச் சிறுமைப்படுத்திய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வியத்னாம் மக்களின் தேசபக்த இயக்கத்தை ஒழிப்பது, தென் வியத்னாமை சேர்த்துக் கொள்வது, நிரந்தரமாகவே வியத்னாமைப் பிரித்துவிடுவது அதன் மூலம் தென் வியத்னாமை அமெரிக்காவின் புதிய ரக காலனியாகவும் இராணுவத் தளமாகவும் மாற்றுவது, தென்கிழக்கு ஆசியாவிற்குள் சோஷலிஸம் முன்னேறுவதைத் தவிர்க்க ஒரு பாதுகாப்பு அரணை ஏற்படுத்துவது, தென் கிழக்காசியாவில் சோஷலிஸ அமைப்பின் காவல் முகாமான வட வியத்னாமைத் தாக்கும் தளமாக தென் வியத்னாமைப் பாவிப்பது, ஏனைய சோஷலிஸ நாடுகளை சுற்றுவளைக்கும் அச்சுறுத்தும் முகமாக அப் பிராந்தியத்திலிருந்தே சோஷலிஸத்தைத் தகர்த்துவிடுவது போன்ற அந்தரங்கத் திட்டங்களுடனேயே அமெரிக்கா தென் வியத்னாமில் நுழைந்தது. நிகோ தின் தியென் நிர்வாகத்தை ஒரு கருவியாகப் பாவிப்பதில் தோல்வி கண்ட, தென் வியத்னாமில் தனது ''விசேட யுத்தத்தில் முறியடிக்கப்பட்ட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வியத்னாம் மக்களுக்கெதிரான போரை இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் மாபெருமளவில், நீண்டகாலமாக, குரூரமாகவும் ஆக்கிரமிப்பின் கேடுகெட்டவிதமாகவும் கட்டவிழ்த்து விட்டனர்.

ஜனாதிபதி ஹோ சி மின்னின் புனிதமான ''சுதந்திரம், விமோசனத்தைவிட மதிப்பார்ப்பது வேறெதுமில்லை'' என்ற வேண்டுகோளுக்குச் செவிமடுத்த வியத்னாம் மக்கள் அமெரிக்க ஏகாதி

பத்தியத்திற்கெதிராக தனியொரு மனிதனைப் போல விசுவரூப மெடுத்தனர். இந்தப் போரில் அவர்கள் சுதந்திரம் சோஷலிஸம் என்ற பதாகையைத் தூக்கிப் பிடித்ததோடு தமது நாட்டின் பலத்தை தமது சகாப்தத்திலேயே உயர்வாக ஒன்றிணைத்தார்கள், தமது தேசத்தின் சக்தியை உலகிலேயே உன்னதமாக ஒன்றிணைத் தார்கள். அப்படிச் செய்ததன் மூலமே ஆக்கிரமிப்பாளனைப் பொருதவும் முறியடிக்கவுமான பொதுப் ஆற்றலை அவர்களை உருவாக்க முடிந்தது. இப் போரில் வியத்னாம் மக்கள் முன்தாக்கு தல் மிக்கதோர் போர்த் தந்திரத்தை மேற்கொண்டதோடு இரா ணுவ, அரசியல், இராஜ தந்திர மும் முனைகளிலும் மூர்க்கமான போராட்டத்தை நடத்தினர். அதே வேளையில் யுத்தத்தில் பகை வனை அடிஅடியாக பின்தள்ளி ஒருபக்க வெற்றிகளை ஈட்டி ஈற்றில் முழு ஜெயத்தையுமே தமதாக்கிக் கொண்டனர்.

20 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவின் தலையீட்டு மற் றும் ஆக்கிரமிப்புக் கொள்கைக் கெதிராகப் போராடி வந்த வியத் னாம் மக்கள்; வியத்னாம் புரட்சியை வேரறுக்கவும், வியத்னாமை கீழ்ப்படுத்தி படிப்படியாக இந்தோ சீனத்திலும், மற்றும் தென் கிழக்காசியாவிலும் தனது விஸ்தரிப்புக் கொள்கையை மேற்கொள் ளவுமாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு விட்டுக்கொடுத்து இணைவாகிப்போன சீனத் தலைவர்களின் அந்தரங்கமானதும் பகி ரங்கமானதுமான பல நடவடிக்கைகள் திட்டங்களுக் கெதிராகவும் கூட மிகக் கஷ்டமானதோர் போராட்டத்தையே மேற்கொள்ள வேண்டியிருந்தது.

## 1. 1954—1964 காலகட்டம்: தேசிய மீள் ஒன்றிணைவுக்கான வியத்னாம் மக்கள் போராட்டத்தை சீனத் தலைவர்கள் சீர்குலைத்தனர்

1954 ஜெனீவா உடன்பாட்டின்போது ஏகாதிபத்தியவாதி களுடன் விட்டுக்கொடுப்பிற்குவந்து தமது நாட்டின் தென்புலத் தின் ஒரு பாதுகாப்புப் பிராந்தியத்தை உருவாக்கிய சீனத்தலை வர்களால் தமது முதலாவது(1955—1957) ஐந்தாண்டுத் திட்ட துரிதப்படுத்த தம்மை ஈடுபடுத்தவும் சாத்தியமாயிற்று. அத்துடன் 1958 முதல் தமது ''மாபெ ரும் முன்பாய்ச்சல்'' திட்டத்தைத் தொடங்கினர் இதன் நோக்கம் மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே பொருளாதாரத்தில் முன் னேறிய வல்லரசுகளை எட்டிப் பிடிப்பதும் ஒரு அணு வல்லராகத் தானும் ஆவதுமேயாகும்.

வெளிநாட்டு விவகாரங்களில், 1955 ஆகஸ்ட் ஆரம்பத்தில் ஜனீவாவில் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் முடிவமைதிக்கு வந்ததோடு, அதே வேளையில் ஆசியாவில் - விசேடமாக தென் கிழக்காசியாவிலும், தென் ஆசியாவிலும் தமது செல்வாக்கை விரிவுபடுத்தவும் முனைந்தனர்.



இவ்விதமாக உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளிலிருந்து ஆரம்பித்த பீகிங் ஆட்சியாளர்கள் வியத்னாம் மக்கள் நலன்களுக்கு விரோதமாகவும், இந்தோசீனத்தில் குறிப்பாக வியத்னாமில் அமெ ரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களுக்கு உடந்தையாகவுமே செயலாற்றினர்.

### 1. ''நீண்ட காலம் பதுங்கிப் பாய்தல்'' கொள்கையை ஏற்பதற்கு வியத்னாம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர் தம் கையாட்களும் 1954 ஜெனீவா உடன்பாட்டில் குறிப்பிட்ட வியத்னாமை மீள் இணைப்பதற்காக இரண்டாண்டுகளுக்குள் பொதுத் தேர்தலை நடத் துவது என்றதை முரட்டுத்தனமாக மறுதலித்தனர், அதே வேளை யில் குரூரமான மிலேச்சனத்தனத்தோடு தென் வியத்னாமில் அவர் கள் தேசபக்த இயக்கத்தையும் நசுக்கலாயினர்.

நாட்டை மீண்டும் ஐக்கியப்படுத்துதென்பது ஒரு நீண்ட போராட்டம் என்றும் ஆயுதப் படைகளைப் பயன்படுத்தி இதைச் சாதிக்க முடியாதென்றும் வியத்நாமுக்கு அறிவுறுத்த சீன ஆட்சி யாளர் முயன்று கொண்டிருந்தனர்.

1956 நவம்பரில் தலைவர் மா-ஸேதுங் வியத்நாமிய தலைவர் களுக்கு பின்வருமாறு கூறினார்:

'-குறுகிய காலத்தில் வியத்நாமின் பிரிவினைக்குத் தீர்வுகாண முடியாது. அது நீண்ட காலம் எடுக்கலாம். 10 வருடங்கள் கூடப் போதாது. 100 வருடங்களுக்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.''

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகவியத்நாமிய மக்கள்நீண்ட காலமாகப் போராடினர் என்பது வாஸ்தவம். ஆனால் தலைவர் மாஸே துங் கூறியது போல் அப் போராட்டம் ஒரு வரையற்றதாக இருக்கவில்லை.

1957 ஜுலையில் தலைவர் மா-ஸே துங் மீண்டும் கூறினார்:

''இப்போதுள்ள எல்லைகளை, 17 வது சமாந்தர வரையைப் பாதுகாப்பதுதான் பிரச்சினை . . . அது நீண்டகாலம் எடுக்க லாம். ஆனால் நீண்ட காலம் நல்ல விளைவுகளைக் கொண்டு வரும் என்று நான் நம்புகிறேன்.''

1955 ஜுலையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் நாயகம் தெங் ஸியோபிங் பின்வருமாறு எச்சரித்தார்:

''நாட்டை மீண்டும் ஐக்கியப்படுத்துவதற்கு ஆயுதப்படை களைப் பாவிப்பதன் விளைவாக இரண்டு சாத்தியப்பாடுகள் ஏற்படும்: வட வியத்னாமின் வெற்றி அல்லது தோல்விதான் அவை.''

இந்த அறிவிப்புக்கள் யாவும் ஜெனிவா ஒப்பந்தத்துடன்
முரண்பட்டன; இரு நாடுகளுக்குமிடையில் 17 வது சமாந்தர
வரை ஒரு எல்லை அல்ல, ஆனால் வியத்னாமின் இரு பிராந்தியங்
களுக்கும் இடையிலான ஓர் இடைக்கால ராணுவ வரையறைதான்
அது என்று ஜெனிவா ஒப்பந்தம் குறிப்பிட்டது. '-பலத்தைத்
திரட்டுவதற்கும், மக்களு -ன் நெருங்கிய தொடர்புகளைப் பேணு
வதற்கும், ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பதற்கும் தென்
வியத்னாமுக்கு உள்ள ஒரேயொரு சரியான வழி நீண்ட காலம்
பொறுத்திருப்பதாகும்'' என்று சீனத் தலைவர்கள் மீண்டும் போதித்
தார்கள்.

வியத்னாமிய தலைவர்களுடனான பேச்சுக்களின் போது, சீனக்
கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினரும் துணை வெளி
விவகார அமைச்சருமான சாங் வென் தியன், தென் வியத்னாமில்
ஒரு கொரில்லா யுத்தம் நடைபெறவேண்டும் என்று கூறினார்.
ஆனால் பின்னர், ஹானோயிலிருந்த சீனத் தூதர், பீக்கிங்கின் கட்
டளைப்படி, ''இது தனியொருவரது கருத்தே அன்றி சீனக் கம்யூ
னிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கருத்தல்ல'' என்று வியத்
னாமுக்கு அறிவித்தார்.

எனவே, ''நீண்ட காலம் காத்திருப்பது'' என்பது உண்மை
யில், வியத்னாமிய மக்கள் தமது புரட்சிகரப் போராட்டங்களைக்
கைவிட்டு, அமெரிக்க - இயம் கும்பல் தென் வியத்னாம் மக்களை
இஷ்டம் போல் நசுக்குவதற்கு விடவேண்டும் என்றே அர்த்தப்
படுகிறது.

''17 வது சமாந்தர வரையைப் பாதுகாக்க'', ''நீண்ட
காலம் காத்திருக்க'', ''பலத்தைத் திரட்டுவதற்கு'', ''ஒரு சந்
தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்க'' ஆகிய இவை யெல்லாம் வியத்
னாமில் நிலவிய அதே அரசியல் நிலையினை பேணுவதற்கும், வியத்
னாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கத்தையும் சைகோன்
பொம்மை அரசாங்கத்தையும் அங்கீகரிப்பதற்குமான பீக்கிங்கின்
திட்டங்களை மூடிமறைக்கும் ஒரு சுற்றுமாற்று வழியேயன்றி வேறி
ல்லை. 1954 ஜூலை 22 ல் ஜெனிவாவில் நடைபெற்ற இராப்போசன
விருந்தொன்றின்போது, பீகிங்கில் சைகோனின் அலுவலகம்
ஒன்றை ஸ்தாபிப்பது பற்றி என்வோ டின் டியமின் இளைய சகோ
தரரான நுகோ டின் லுயெனிடம் பிரதமர் சௌ என் லாய்
பிரஸ்தாபித்தார். இந்த ஆலோசனையை டின் டியம் நிராகரித்து
விட்டபோதிலும், இது, ஜெனிவா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட
24 மணி நேரத்தில் வியத்னாமை என்றுமே பிரித்து வைத்திருப்ப
தில் தமக்குள்ள ஆர்வத்தை வெளியிட்டு விட்டார்கள் என்பதற்கு
மறுக்க முடியாத ஒரு சான்றாக உள்ளது.

1954 - 1959 ம் காலகட்டத்தில் பாஸிஸ கொள்கையில்
சென்ற அமெரிக்கா டியம் கும்பல் பல்லாயிரக் கணக்கான வியத்
னாமிய தேசபக்தர்களைக் கொன்றொழித்தது; பல்லாயிரக்கணக்கான
வர்களை ரகசிய சித்திரவதை முகாம்களுக்கு அனுப்பிவைத்தது;



இது வியத்னாமிய மக்களுக்கு அவர்களது தேசிய விமோசனப் போராட்டத்தில் பெரும் இழப்புக்களை ஏற்படுத்தியது. வியத்னாம் தேசபக்தர்கள் இந்த விதத்தில் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதை அனுமதித்தால் பலத்தை ''திரட்டுவது'' எவ்வாறு? ''நெருக்கமான தொடர்புகளைப் பேணுவதற்கு'' போதுமான மக்கள் இருப்பது எவ்வாறு? எத்தகைய ''சந்தர்ப்பத்தை'' எதிர்பார்க்கலாம்? இத்தகைய நிலைமைகள் தொடர்ந்து நடைபெற அனுமதித்தால், வியத்னாம் தனது சுதந்திரத்தை இழந்து விடுவதுடன் அது நிரந்தரமாகவே துண்டாடப்பட்டிருக்கும்.

அரசியல் போராட்டத்தைத் தொடர்வது அல்லது ஆயுதப் போராட்டத்துடன் அரசியல் போராட்டத்தை இணைப்பது என்பது தென் வியத்னாமியப் புரட்சியில் போருபாய முக்கியத்துவம் பெற்றிருந்தது.

வியத்னாமிய மக்கள் சுதந்திரமும் சுயாதிபத்தியமும் மிக்க பாதையைப் பின்பற்ற உறுதிபூண்டனர். 1959 ன் முடிவிலும் 1960 இன் தொடக்கத்திலும் தென்குடா, தென் மத்திய வியத்நாமின் பெரும் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் ''ஏககாலத்தில் கிளர்ந்தெழுந்தனர்''; அரசியல், ஆயுதப்போராட்டங்களைஒன்றிணைத்த அவர்கள் நுகோ டின் டியமின் பொம்மை ஆட்சியை அதன் வேரோடு ஆட்டங் காண வைத்தனர்.

## 2. தென் வியத்னாமில் ஆயுதப் போராட்டங்களை அதிகரிப்பதிலிருந்து வியத்னாமிய மக்களைத் தடுப்பதற்கு:

பகுதிபகுதி எழுச்சிகளாக இருந்த இந்த ''ஏக கால எழுச்சிகள்'', அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளது ''விசேஷ யுத்த'' த்துக்கு எதிராக, அரசியல் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் இணைத்த ஒரு புரட்சிகர யுத்தமாக விரைவில் மாறியது.

1960 மே மாதம் வியத்னாமியத் தரப்புடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது அவர்கள் பின்வருமாறு கூறினர்:

> ''அரசியல் போராட்டமா அன்றி ஆயுதப் போராட்டமா, எது அவசியமானது என்பதைத் தீர்மானிக்க நாம் முயற்சி செய்யக் கூடாது. எந்தவொரு போராட்ட முறையும் ஆட்சியை உடனடியாகக் கைப்பற்ற வகை செய்யாது: ஆயினும் போராட்டம் நீண்ட காலத்துக்கு நடைபெற வேண்டும். டியம் ஆட்சி வீழ்ந்தால் கூட நாட்டை உடனடியாக ஐக்கியப் படுத்த முடியாது. ஏனெனில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இதற்கு விட மாட்டார்கள்.
>
> '' . . . . வட வியத்னாம் தென் வியத்னாமுக்கு அரசியல் ஆதரவும் அதன் கொள்கைகளை வகுப்பதற்கு உதவியுமளிக்கிறது. ஆனால் தென் வியத்னாமிய மக்களது தன்னைத்தானே

நம்பியிருக்கும் உணர்வுக்கு ஊக்கமளிப்பதுதான் மிகப் பிரதானமானது. வெற்றி நிச்சயமாகும் போது, வடக்கு தெற்குக்கு ராணுவ உதவியையளிக்கலாம்; அதாவது கெடுதி ஒன்றும் நிகழாது என்பது நிச்சயமாகும் போது ஓர் அளவான ஆயுதங்களை ரகசியமாக விநியோகிக்கலாம். ஆனால் பொதுவில் அதிகம் செய்யக் கூடாது.''

தென் வியத்னாமிய மக்களது ''ஏககால எழுச்சி''களைத் தடுப்பதில் தோல்வி கண்ட சீனத் தலைவர்கள், தென் வியத்னாம் தேசபக்தர்களை அவர்களது போராட்டத்தில் தனியே விடுவதற்காக, வட வியத்னாமிய மக்கள் தென் வியத்னாமிய மக்களுக்களிக்கக்கூடிய கடப்பாடுகளைக் கைதுறந்து விடவேண்டுமென விரும்பினர்.

வியத்னாமிய மக்களுக்கு அவர்களது ராணுவத்தைக் கட்டியெழுப்ப உதவுவதற்கு மறுத்த அவர்கள், வியத்னாமுக்கு மென்ரக ஆயுதங்களை அளிக்க மட்டும் ஒப்புக்கொண்டனர். தென் வியத்னாம் மக்களுடைய ஏககால எழுச்சிகளைத் தடுப்பதில் தோல்வி கண்ட அவர்கள் தென் வியத்னாம் கொரில்லா யுத்தங்களையும், சிறு யூனிட்டுக்களைப் பயன்படுத்தி சிறிய போர்களையும் மட்டும் நடத்த வேண்டுமெனக் கூறினர்.

தமது எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் தாமே எஜமானர்களாகவிருந்த வியத்னாமிய மக்கள் தென் வியத்னாமில் தமது புரட்சிகரப் போராட்டத்தை முனைப்படுத்தினார்கள். *1963* ல் நுகோடின் டியமின் பாஸிஸ சர்வாதிகாரம் தூக்கியெறியப்பட்டது; அமெரிக்காவின் ''விசேஷ யுத்தம்'' வங்குரோத்தாகியது.

**சோவியத் யூனியனுக்கு எதிராக வியத்னாமைத் தூண்டுவதற்கு:**

*1960* க்களின் தொடக்கத்தில், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குஎதிரானபோராட்டத்தை அதிகரிப்பதிலிருந்து வியத்னாமிய மக்களைத் தடுக்க முனைந்த அதே வேளையில் பீகிங்தலைவர்கள் அமெரிக்க - விரோத, சோவியத் - விரோத விளம்பரங்களையும் பெரிது படுத்தினர். ஆனால் உண்மையில் அவர்கள் ஆசியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் தொடர்ந்து கைகோர்த்து நின்றார்கள்; சோவியத் யூனியனை எதிர்த்த தமது சூழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கெதிரான உலக மக்களது போராட்டத்தைத் தவறான பாதையில் இட்டுச் சென்றனர்; ''உலகப் புரட்சியின் தலைமை'' யைத் தாம் எடுப்பதற்காக சோஷலிஸ முகாமைத் தகர்க்க முயன்றனர்; அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் மேலும் சமரசம் செய்து கொள்ளவும் ஒன்றிணைந்து நடக்கவுமான தயாரிப்புக்களைத் தீவிரமாக மேற்கொண்டனர்.

*1963* ல் வியத்னாமிய தரப்புடன் நடத்திய தமது பேச்சுவார்த்தைகளின்போது, சோஷலிஸ முகாம் ஒன்றிருப்பதை மறுப்பது, தென்கிழக்காசியாவில் சீன விஸ்தரிப்புக்கு வழிதேடுவது



ஆகிய தமது கருத்துக்களை வியத்னாம் ஏற்றுக்கொள்வதற்காக அதை இணங்க வைக்கப் பெரிதும் முயன்றார்கள். அத்துடன் *1963* ல், உலக கம்யூனிஸ இயக்கத்தின் பொதுவான பாதைக்கான பெயரலவிலான 25 அம்ச வேலைத்திட்டத்தை முன்வைத்த சீனத் தலைவர்கள், ''உலகப் புரட்சியின் தலைமை'' யைக் கைப்பற்றவும், பீகிங்கின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு புதிய கம்யூனிஸ சர்வதேசியத்தை அமைக்கவும் எத்தனிக்கும் வகையில் பதினொரு கம்யூனிஸ்ட் கட்சிகளது மகாநாட்டைக் கூட்டுவதற்குத் தீர்மானித்தார்கள். இக் கருத்துக்கு வியத்னாமின் ஆதரவைப் பெற ஆர்வம் கொண்ட அவர்கள் உலக கம்யூனிஸ, தேசிய விமோசன இயக்கங்களில் வியத்னாமுக்கிருந்த கீர்த்தியையும் பாத்திரத்தையும் பயன்படுத்த முயன்றார்கள். இதற்காக பிரமாண்டமான உதவிகளை அளித்து வியத்னாமை விலைக்கு வா கவும் முன்னின்றனர். வியத்னாமுக்கு உதவியாக,*100* கோடி சீன யுவானைத் தருவதற்கு சீனத் தலைவர்கள் முன்வந்துள்ளது பற்றி தெங் சியே - பிங் வியத்னாமியத் தலைவர்களுக்கு அறிவித்தார்.

சோஷலிஸ முகாமைப் பாதுகாப்பதற்குத் தன் திடசங்கற்பத்தை மீண்டும் உறுதி செய்து கொண்ட வியத்னாமிய தரப்பு, *11* கட்சிகளது மகாநாட்டைக் கூட்டும் கருத்தை நிராகரித்தது. அத்துடன் சீனத் தலைவர்களது விஸ்தரிப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்கள் ஒரு கருவியாக வியத்னாமைப் பயன்படுத்துவதற்கும் அனுமதியளிக்கவில்லை. வியத்னாமின் இந்த உறுதியான போக்கின் காரணமாக 25 அம்ச வேலைத் திட்டத்திற்கு எந்தவித வரவேற்பும் கிடைக்காது போனதுடன் புதிய கம்யூனிஸ சர்வதேசியத்தை உருவாக்கும் திட்டமும் செயல்படவில்லை.

இக்கால கட்டத்தில், சீன ஆட்சியாளர், வியத்னாம் மீது பிரயோகித்த அதே கொள்கைகளையே, லாவோஸ் புரட்சியினைப் பொறுத்தும் பின்பற்றினர். '-நீண்டகாலம் காத்திருக்கும்'' கொள்கையைப் பின்பற்றுமாறு அவர்கள் லாவோஸ் புரட்சிகரப் படைகளை நிர்ப்பந்தித்தனர். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது அடிவருடிகளும் லாவோஸின் கூட்டரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு ஒரு ''விசேஷ யுத்தத்'' தை நடாத்தியபோது, லாவோஸ் புரட்சியில் ஆயுதப் போராட்டமும் அரசியல் போராட்டமும் ஒன்றிணைவதை சீனத் தலைவர்கள் தடுத்தனர். அத்துடன், சம்நுவா, பொங் சாலியில் எழும்பும் தீ வியத்னாமிலும் தென் சீனாவிலும் பரவக்கூடாது என்ற முன்னெண்ணத்துடன், ''விரைவில் கூட்டரசாங்கத்தை மீண்டும் ஸ்தாபிப்பதற்காக'' லாவோஸ் புரட்சிகர மக்கள் கட்சி மீது நிர்ப்பந்தம் கொண்டுவர முயன்றனர்.

லாவோஸ் சம்பந்தமாக *1961* ஆகஸ்டில் வியத்னாம் தரப்புடன் நடாத்திய பேச்சுக்களின் போது சீனத்தரப்பு வருமாறு கூறியது:

''யுத்தத்தில் நேரடியாக சம்பந்தப்படுவதைத் தவிர்ப்பதற்கு மிகப் பெரும் கவனமெடுக்கப்படல் வேண்டும். அமெரிக்கா லாவோஸுக்குள் குதிக்குமானால் வட வியத்னாமிலும் யுன்னான்

க்வாங் சிலும் என்ன நடக்கும்? அமெரிக்காவின் அதிதீர வீரத்தின் சாத்தியப்பாடுகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.''

1961 - 1962 ல் ஜெனிவா மகாநாட்டில் லாவோஸ் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக சீனத் தலைவர்கள் லாவோஸை இரண்டாகப் பிரிக்கும் எண்ணத்துடன் செயல்பட்டார்கள். ஒன்று வட பகுதியில் விமோசனப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதி, மற்றது தெற்கிலிருந்த வியன்டியன் பொம்மை நிர்வாகக் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்த பகுதி. இது லாவோ புரட்சிகரச் சக்திகள் சீனா மீது தங்கியிருப்பதையும் தென் வியத்னாம் புரட்சியிலிருந்து அவற்றைத் தனிமைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு கேடுகெட்ட திட்டமாகும்.

ஆயினும் லாவோ புரட்சியின் தலைவர்கள் தமது சொந்தப் பாதையைத் தொடர்ந்து பின்பற்ற உறுதிகொண்டனர். லாவோஸ் விடுதலைப் படைகள் ஒன்றன் பின் ஒன்றாக வெற்றியடைந்ததினால் 1962 ல் ஜெனிவா ஒப்பந்தங்களில் கையெழுத்திட வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கும் அதன் அடிவருடிகளுக்கும் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தங்களின்படி லாவோஸின் நடுநிலைமை அங்கீகரிக்கப்பட்டதுடன், லாவோஸின் இரண்டாவது கூட்டரசாங்கத்தில் லாவோ தேசபக்த முன்னணியின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 2 1965—1967 காலகட்டம் வியத்னாமிய மக்களது விடுதலை யுத்தத்துக்குக் குழிபறிப்பும் அதை நீடிப்பதும்:

இக்கால கட்டத்தில் தான் அந்த ''மாபெரும் தொழிலாள வர்க்க கலாசாரப் புரட்சி'' சீனாவில் நடைபெற்றது. அது உண்மையில், சீன சமுதாயம் முழுவதிலும் கொந்தளிப்பை ஏற்படுத்திய ஒரு கொடிய, கேடுகெட்ட உள்நாட்டு யுத்தம். மார்க்ஸிய - லெனினிஸத்தை அழித்தொழிப்பதும், சீன கம்யூனிஸ்ட் கட்சியையும் அரச யந்திரங்களையும் தகர்ப்பதும், தலைவர் மா-ஸே துங்கின் ஏகத் தலைமைத்துவத்தையும் அவரது கொள்கைகளையும் நாட்டில் ஸ்தாபிப்பதும், சோவியத் யூனியனை எதிர்ப்பதும், உலகப் புரட்சிக்குக் குழிபறிப்பதும், வெளி விவகாரங்களில் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுடன் ஒன்றிணைவதும், மேலாதிக்கவாத, பெருந்தேச விஸ்தரிப்புக் கொள்கையை செயல்படுத்த விழைவதையும் நோக்கமாகக் கொண்ட நடத்தை அது. தமது [illegible] நலன்களை கருத்தில் கொண்டிருந்த சீனத் தலைவர்கள் இக்கால கட்டத்தில் வியத்னாமிய மக்களுக்குத் துரோகமிழைக்கும் பாதையில் இறங்கினர்.

### 1. வியத்னாமில் நேரடியாக இறங்க அமெரிக்காவுக்குக் காட்டப்பட்ட பச்சை விளக்கு

ஆசிய நாடுகளில் குறிப்பாக சீனாவை அடுத்துள்ள நாடுகளில் தாம் யுத்தத்தை நடத்தக் கூடாது; சீனாவுடன் நேரடி மோதல் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். என்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கொரிய யுத்தத்திலிருந்து பாடம் கற்றிருந்தனர். ஆனால் பத்து வருடங்களுக்குப் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் வியத்னாமில் ராணுவ நடவடிக்கைகளில் துணிச்சலுடன் இறங்கினர். இதற்கான பிரதான காரணங்களில் ஒன்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் சீன ஆட்சியாளரது பிரதிபலிப்புகள் குறித்துக் கவலைப்படாதிருந்ததே. 1965 ஜனவரியில் இ. ஸ்னோ எனும் அமெரிக்கப் பத்திரிகையாளரினூடாக தலைவர் மா-ஸே துங் வாஷிங்டனுக்குப் பின்வருமாறு தெரியப்படுத்தினார்:

> ''சீன ராணுவம் தனது எல்லைகளுக்கப்பால் போராடமாட்டாது. அமெரிக்கா சீனாவைத்தாக்கினால் மட்டுமே சீனா போராடும். இது தெளிவாக இல்லையா? சீனர்கள் தமது உள்நாட்டலுவல்களில் ஆழ்ந்துள்ளனர். ஒரு நாட்டின் எல்லைக்கப்பால் சென்று போரிடுவது என்பது ஒரு குற்றமாகும். சீனர்கள் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? தென் வியத்னாமியர்களால் அவர்களுடைய நிலைமைகளுக்கு ஈடு கொடுக்க முடியும் (1)''

பின்னர், வார்ஸாவில் நடைபெற்ற சீன - அமெரிக்க தூதரக மட்டத்திலான சந்திப்பு உள்ளிட்ட பல்வேறு வழிகளில் சீனத் தரப்பு மாவோவின் வாசகங்களைத் தெளிவுபடுத்துயது; நீங்கள் எமக்குத் தீங்கு செய்யாதிருந்தால் நாங்களும் உங்களுக்குத் தீங்கு செய்ய மாட்டோம்'' என்று சீனத் தரப்பு உறுதி தெரிவித்தது.

1965 பெப்ரவரி முதல் ஜோன்சன்நிர்வாகம் வியட்னாமிய யுத்தக் களத்தில் தனது பிரமாண்டமான ராணுவ யந்திரத்தை சுதந்திரமாக அமைத்தது. ஒரு பிராந்திய யுத்தம் ஒன்றை நடத்துவதற்காக தென் வியத்னாமுக்கு அமெரிக்கத் துருப்புக்களை அனுப்பியது. அதே வேளையில் வட வியத்னாமுக்கெதிராக ஒரு ஆகாய யுத்தத்தைத் தொடங்கியது. இதன் காரணமாக வியத்னாமிய மக்கள் அனைவருமே சொல்லொணாக் கஷ்டங்களுக்கும் இழப்புக்களுக்குமாளாயினர்.

இதன் வழியே சீன ஆட்சியாளர்கள் தமது சூழ்ச்சித் திட்டங்களையும் கெடுநோக்கங்களையும் வெளிப்படுத்தினர். வியத்னாமுக்கெதிரான ஆக்கிரமிப்பு யுத்தத்தில் அமெரிக்காவை அமிழ்த்திவிட இவர்கள் காரணமாயினர்; இதன் மூலம் இவர்கள் தமது ''கலாசாரப் புரட்சி'' யில் கவலையின்றித் தம்மை அர்ப்பணிக்கலாமல்லவா! வியத்னாமில் ராணுவ நடவடிக்கைகளில் அமெரிக்கா சம்பந்தப்பட்டுள்ளதனால், அமெரிக்காவும் வியத்னாமும் பலவீனமடைந்துவிடும் என்று அவர்கள் நம்பினர்.

1965 ஜூன் 23 ல் எகிப்திய ஜனாதிபதி ஏ. நாஸருடன் நடாத்திய பேச்சுக்களின் போதும் பின்னர் நாஸரது நெருங்கிய நண்பரும் பிரத்தியேக ஆலோசகருமான மொஹமத் ஹஸனியின் ஹெய்க்கலிடமும் பிரதமர் செள என்-லாய் வருமாறு கூறினார்:

---

(1) இ. ஸ்னோ: நீண்ட புரட்சி. ஹட்சின்ஸன் பதிப்பு. லண்டன் 1973 ப. 216,

''அமெரிக்கா எவ்வளவுக்கெவ்வளவு துருப்புக்களை வியத்னாமுக்கு அனுப்புகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சீனா மகிழ்ச்சியடையும். நாங்கள் அவர்களை எமது கரங்களில் வைத்திருக்கிறோம் என்பதை நாமறிவோம். அவர்களை எம்மால் சிதற வைக்க முடியும். வியத்னாமுக்கு நீங்கள் உதவி செய்ய விரும்பினால் அந்த நாட்டுக்கு அதிகம் துருப்புக்களை அமெரிக்கா அனுப்புவதை நீங்கள் உற்சாகப்படுத்த வேண்டும் எவ்வளவு அதிகமோ அவ்வளவு நல்லது'' (1).

காலம் கடத்தும் யுத்தம், கொரில்லா யுத்தம், சிறு சண்டைகள்; இவ்வாறே வியத்னாமிய மக்களைச் சீன ஆட்சியாளர் வலியுறுத்திக் கொண்டிருந்தனர். மென்ரக ஆயுதங்களையும், வெடிகலங்களையும், சிறு சிறு வினியோகங்களையுமே அளித்து வியத்னாமிய மக்களுக்கு அவர்கள் உதவினர். வியத்னாமிய யுத்தத்தை விரைவில் முடித்து விடுவது அவர்களுக்கு விருப்பமில்லை. ஏனெனில், வியத்னாமிய புரட்சிகரச் சக்திகளைப் பலவீனப்படுத்துவதற்கு மட்டுமல்ல, எவ்வளவு நீண்டதோ அவ்வளவு நல்லது, ''வியத்னாமுக்கு உதவி'' பற்றிய விளம்பரம், ''முழுமையான புரட்சி'' என்ற பதாகையை மேலும் உயர்த்துவது, ஆசிய, ஆபிரிக்க, லத்தினமெரிக்க சக்திகளை திரட்டுவது என்பவற்றிற்கு லாபங்களைத் தேடவும் சோவியத் - விரோத பிரசாரத்தை முனைப்படுத்தவும் அவர்கள் விரும்பினர்.

வியத்னாமுக்கும் சீனாவுக்குமிடையிலான ஓர் இரகசிய ராணுவ ஒப்பந்தத்தைச் செயல்படுத்த அவர்கள் மறுத்தது ஒன்றும் அதிசயமல்ல. அந்த ஒப்பந்தத்தின்படி சீனத்தரப்பு 1965 ஜூனில் வியத்னாமுக்கு விமானிகளை அனுப்பியிருக்க வேண்டும். ஆனால் 1965 ஜூலை 16 ல் சீன விடுதலை ராணுவத்தின் பிரதம அதிகாரி, வியத்னாம் மக்கள் ராணுவத்தின் பிரதம அதிகாரிக்கு அனுப்பிய செய்தியில் ''நேரம் ஏற்றதாக இல்லாதிருப்பதனால்'' சீனத் தரப்பினால் வியத்னாமுக்கு விமானிகளை அனுப்ப முடியாதுள்ளது; ''அப்படி அனுப்புவதாயின் எதிரி தனது விமானத் தாக்குதல்களை முனைப்படுத்துவதைத் தடுக்க முடியாது போய்விடும்'' என்று குறிப்பிட்டிருந்தார். 1966 ஆகஸ்டில் வியத்னாமியத் தரப்புடன் நடைபெற்ற பேச்சுக்களின் போதும் அவர்கள் ''ஹானோயைப் பாதுகாப்பதற்கு உதவச் சீனாவிடம் போதுமான விமானப் பலமில்லை'' என்று தெரிவித்தனர்.

**2. அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த வியத்னாமின் போராட்டத்துக்கு ஆதரவான ஒவ்வொரு ஐக்கிய நடவடிக்கைக்கும் குழிபறிப்பு:**

வியத்னாம் சீனா மீது தங்கியிருப்பதற்காக, அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த வியத்னாமின் போராட்டத்துக்கு ஆதரவாக உல

(1) மொஹம்மத் எச். ஹெய்க்கல்: டொக்கியுமன்ட்ஸ் டியு கைபர ஃலாபரியன் பதிப்பு. பாரிஸ் 1972 ப. 238.



கின் புரட்சிகர, முற்போக்குச் சக்திகளால் எடுக்கப்பட்ட ஒவ்வொரு ஐக்கிய நடவடிக்கையையும் தடுப்பதற்கு சீன ஆட்சியாளர் தம்மால் முடிந்ததனைத்தையும் செய்தனர்.

தென் வியத்னாமில் தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தை முனைப்படுத்தியதற்காகவும், வியத்னாம் ஜனநாயகக் குடியரசிற்கெதிராக ஒரு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டதற்காகவும் அமெரிக்காவைக் கண்டிக்கும் சோஷலிஸ நாடுகளது கூட்டறிக்கை ஒன்றிற்கான 1965 பெப்ரவரி 22 இன் வியத்னாமிய நகலை 1965 பெப்ரவரி 28 ம் திகதி சீன ஆட்சியாளர்கள் நிராகரித்தனர்.

அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த வியத்னாமிய மக்களது போராட்டத்துக்கு ஆதரவான கூட்டு நடவடிக்கை ஒன்றுபற்றி ஆராய சோவியத் யூனியன், சீன, வியத்னாமிய பிரதிநிதிகள் சந்திக்க வேண்டுமென்ற சோவியத் ஆலோசனையை 1965 மார்ச்சில் அவர்கள் நிராகரித்தனர்.

வியத்னாம் ஜனநாயகக் குடியரசின் பந்தோபஸ்தை உத்தரவாதம் செய்வதற்கான கூட்டு நடவடிக்கைக்கான சோவியத் ஆலோசனையை 1965 ஏப்ரலில் அவர்கள் இரு தடவைகள் நிராகரித்தனர். வியத்னாம் ஜனநாயகக் குடியரசைப் பாதுகாப்பதற்காக சீனாவுக்கூடாக விமானப் போக்குவரத்தையும் சீனப் பிரதேசங்களில் விமானத்திடல்களையும் அமைக்கும் சோவியத் ஆலோசனையை ஏன் அவர்கள் நிராகரித்தனர் என்பதை இது விளக்குகிறது.

உயர் மட்ட சீன - வியத்னாமிய பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டதான, வியத்னாமுக்கு ஆதரவாக ஒரு சர்வதேச ஐக்கிய முன்னணியை உருவாக்கும் கருத்தை 1966 பெப்ரவரியில் தலைவர் மா-ஸே துங் நிராகரித்தார்.

ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் நடாத்திய உயர் மட்ட பேச்சுக்களின் போது, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராக வியத்னாமை ஆதரித்து சர்வதேச ஐக்கிய முன்னணி ஒன்றை ஸ்தாபிப்பது குறித்து ஜப்பானிய தரப்பு கூறிய ஆலோசனையை 1966 மார்ச்சில் தலைவர் மாஸேதுங் மீண்டும் நிராகரித்தார். பின்னர் ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் சீனாவில், பீக்கிங் ஏஜண்டுகளால் முரட்டுத்தனமாகத் நடத்தப்பட்டனர்.

இவைகளுக்குப் பதிலாக, தமது கட்டுப்பாட்டுக்குள் இயங்கக் கூடிய உலக மக்கள் முன்னணியை அமைக்கவே சீன ஆட்சியாளர் விரும்பினர்.

''ஒரு பரந்த சர்வதேச ஐக்கிய முன்னணி ஒன்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களது அடிவருடிகளுக்கும் எதிராக உருவாக்கப்படவேண்டியது அவசியம். இத்தகைய முன்னணி அவர்களை (சோவியத் யூனியனை) உள்ளடக்கியிருக்கக்கூடாது''(1).

(1) சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் (8 வது கூட்டத் தொடரின்) 11 வது பிளீனத்தின் தீர்மானம் 1966 ஆகஸ்ட்.

வியத்னாமுக்கு ஆதரவான ஒவ்வொரு கூட்டு நடவடிக்கையையும் அவர்கள் சீர்குலைத்ததுடன், சீனாவுக் கூடாக சோவியத் யூனியனிலிருந்தும் இதர சோஷலிஸ நாடுகளிலிருந்தும் வந்த உதவி விநியோகங்களின் போக்குவரத்தில் அளப்பரிய கஷ்டங்களை ஏற்படுத்தவும் செய்தனர். பெருமளவிலான இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்குவதில் குறிப்பாக கோடை காலங்களின் வியத்நாமிய மக்களது ஆற்றல்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக இந்த விநியோகங்கள் குறிப்பிட்ட காலத்தில் வந்து சேராமலிருக்க சகல வழிகளிலும் பிரயத்தனப்பட்டனர்.

காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் என்ற பொது எதிரிக்கான தமது போராட்டத்தில் வியத்னாமிய, லாவோஸ், கம்புச்சிய மக்கள் ஒருவரோடொருவர் மிக நெருக்கமாக இணைந்திருந்தனர். இது இம் மூன்று நாடுகளினதும் வெற்றியை நிர்ணயிக்கும் ஒரு காரணியாக, ஓர் அற்புதமான பாரம்பரியமாகத் திகழ்ந்தது. வியத்னாமில் அமெரிக்க யுத்தம் முனைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, லாவோஸினதும் கம்பூச்சியாவினதும் சுதந்திரம், சமாதானம், நடுநிலைமை ஆகியவை அச்சுறுத்தப்பட்டதன் பின்னணியில் 1965 மார்ச்சில் நொம் பென்னில் இந்தோசீன மக்களது மகாநாடொன்று நடைபெற்றது. அதன் விளைவாக அமெரிக்க ஆக்கிரமிப்புக்கெதிராக இந்தோசீன மக்களது ஐக்கிய முன்னணி ஒன்று தோற்றம் பெற்றது. ஆனால் இந்த மகாநாட்டின் விளைவுகளை பகிரங்மாக வரவேற்பதற்கு சீன ஆட்சியாளர்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்ட போதிலும், மூன்று இந்தோசீன மக்களது ஐக்கிய முன்னணியை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் பலவற்றை அவர்கள் மேற்கொண்டனர். ஏகாதிபத்திய, பிற்போக்குச் சக்திகளது பாரம்பரிய ''பிரித்தாளும்'' கொள்கையைப் பிரயோகித்து, இம் மூன்று நாடுகளையும் பலவீனப்படுத்தவும் வியத்னாமைத் தனிமைப்படுத்தவும், இந்நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக சுலபமாக அடிமைப்படுத்தவும், அவற்றிற்கிடையில் அவநம்பிக்கையைத் தூவினர்.

1966 ல், லாவோஸின் விடுவிக்கப்பட்ட பகுதிகள் சீன இனத் தலைவர்களது லாவோ தேசபக்த முன்னணியின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது; சீனா லாவோ மக்களுக்கும் வியத்னாமிய இனத்தவர்களுக்குமிடையில் பகைமையை ஏற்படுத்த முனைந்தது. பொய்ப் பிரச்சார இயக்கத்தை நடாத்தியதுடன் லாவோ மக்களின் புரட்சிக் கட்சியை எதிர்க்கத் தீய சக்திகளைத் தூண்டி விட்டது. மறுபுறத்தில் லாவோஸ் மன்னரது அரசாங்கத்தைத் தன் பக்கம் இருப்பதற்காக, சீனாவின் யுன் - னான் பீட பூமியை நோக்கிச் செல்லக்கூடிய வகையில் லாவோசின் வட பகுதி மாகாணங்கள் ஐந்தில் பின்னல் வலையொத்த வீதி நிர்மாண வேலைத்திட்டத்திற்குத் தனது உதவியை அதிகரித்தது. இத் தெருக்கள் வியத்னாமுக்கும், தாய்லந்துக்கும் கூட கிளை விட்டுச் செல்கின்றன. இது லாவோஸின் உள் விவகாரங்களில் சீனா தலையிடுவதையும், தனது எதிர்கால விஸ்தரிப்புத் திட்டத்திற்குச் சீனாவின் தயாரிப்பு வேலைகளையும் அனுகூலப் படுத்தியது.



1965 க்கு முன்னர் இருந்தே, வியத்னாம் கம்பூச்சிய புரட்சியின் நலன்களை 1954 இன் இந்தோ சீனா குறித்த ஜெனிவா மகாநாட்டில் விற்று விட்டது என்று பொய்யான அவதூறுகளை சீன ஆட்சியாளர் கூறிவந்தனர். ஆனால் உண்மையில் கம்பூச்சியாவை விற்றது சீனாதான் என்பது அனைவருக்கும் தெரியும். 1965 ல், பொல் பொட் கும்பல் மீது தனது கட்டுப்பாட்டை ஏற்படுத்தியவுடன், ஷிஹானுக் நிர்வாகத்துக்கெதிராக ஆயுதப் போராட்டத்தை பொல் பொட் கும்பல் தொடங்குவதற்கும், வியத்னாம் லாவோஸின் விடுதலைப் படைகளுடன் அது கூட்டணி சேர்வதற்கும் சீனா வற்புறுத்தியது. 1969 ன் பிற்பாதியில், லொன் நொல் பிரதமரான பின்னர், கம்பூச்சியாவில் உள்ள தமது தளங்களில் இருந்து தென் வியத்னாம் விடுதலைப் படைகள் வெளியேற வேண்டுமென்றும் ஷிஹானுக்வில்லி துறைமுகத்தை ஒரு விநியோக தளமாகப் பயன்படுத்துவதை அவை கைவிட வேண்டும் என்றும் லொன் நொல் விடுத்த கட்டளையை சீனா ஆதரித்தது. அதே கால கட்டத்தில் பொல் பொட் - இயன் சாரி கும்பலும் கூட, கம்பூச்சியத் தளங்களிலிருந்து தென் வியத்னாமிய விடுதலைப் படைகள் வெளியேற வேண்டுமென்று வலியுறுத்தின.

பீகிங்கின் விருப்பத்துக்கு மாறாக, வியத்னாமுக்கு ஆதரவான உலக மக்களது முன்னணி ஓர் எதார்த்தமாகியது. இந்தோ - சீன மக்கள் மத்தியிலான ஒருமைப்பாடு மேன்மேலும் உரம் பெற்றது. வியத்னாமிய மக்கள் மேலும் வலுப்பெற்றனர்; தமது போராட்டத்தில் மேலும் பல வெற்றிகளைக் கண்டனர்.

## 3 அமெரிக்க யுத்த விஸ்தரிப்பை தவிர்ப்பதற்காக அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளிலிருந்து வியத்நாமை தடைசெய்தல்

அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கெதிரான யுத்தத்தின் ஆரம்பமுதற் கொண்டே வியத்நாம் மூன்று முன்னணிகளில் — இராணுவ, அரசியல், ராஜதந்திர போராட்டத்தை ஆரம்பிப்பதெனத் தீர்மானித்தது.

1968 ன் ஆரம்பத்தில், அமெரிக்க ஆக்கிரமிப்பு யுத்தம் உச்சக் கட்டத்தை அடைந்தபோது, வியத்நாம் மக்கள் தமது மௌ தான் லூனார் புத்தாண்டில் பொதுப் பாதுகாப்பிலும், எழுச்சியிலும் மாபெரும் வெற்றியீட்டினார்கள். அத்துடன் தமது எதிரிக்கு அவர்கள் கொடுத்த இறுதி அடி எதிரியின் தந்ரோபாயங்களை குழப்பமடையச் செய்ததுடன் யுத்த விஸ்தரிப்பைத் தவிர்த்து வியத்நாம் ஜனநாயகக் குடியரசுடன் பாரிஸில் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்துவதற்கும் அமெரிக்க நிர்வாகத்தினை நிர்ப்பந்தித்தது.

1968 ஏப்பிரலில் வியத்நாம் தரப்புடனான பேச்சுவார்த்தையின்பேது ஐக்கிய அமெரிக்காவுடன் நடாத்திய பேச்சுவார்த்தை சம்பந்தமான வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் 1967 ஜனவரி

28 ந் திகதி அரசாங்க அறிக்கை நல்லதொரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக சீனத்தரப்பு அங்கீகரித்து பின்வருமாறு கூறியது: "டீ கோல் உட்பட ஐக்கிய அமெரிக்காவின் நட்புச்சக்திகள் கூட குண்டுவீச்சு நடவடிக்கைகளை நிபந்தனையற்றமுறையில் நிறுத்தி விட வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்துள்ளன." ஆனால் அவர்கள் மேலும் கூறியுள்ளார்கள்: "வியத்நாம் ஐக்கிய அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குப் பொருத்தமான நேரம் இன்னும் வரவில்லை அத்துடன் அதற்குச் சாதகமான சூழ்நிலைகளும் இன்னும் உருவாகவில்லை. இதற்கு இணக்கமானவைகளை நாங்கள் மிக விரைவிற் செய்வோம்."

1968 மே மாதம் 13 ந் திகதியிலிருந்து, 1968 அக்டோபர் நடுப்பகுதியில் பாரிஸ் மகாநாடு ஆரம்பமானபோதுகூட வியத்நாமிற்கும், ஐக்கிய அமெரிக்காவிற்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் பற்றி பீக்கிங் எவ்வித அறிக்கைகளையும் வெளியிடவில்லை, ஆனால் வியத்நாம் மக்கள் தங்கள் போராட்டத்தின் விளைவுகளை "மகாநாட்டு மேசையிலல்ல, யுத்தகளத்திலேயே" தீர்மானிக்க வேண்டுமென தொடர்ந்து வற்புறுத்தி வந்தது. தெற்கு வியத்நாமை வெற்றிகொள்ளத் தவறுவது முழு வியத்நாமையும் இழப்பதற்கு வழிகோலிவிடும்.

வடக்கு வியத்நாம் மீது குண்டுவீசுவதனை ஐக்கிய அமெரிக்கா நிறுத்திவிடுவதற்கான சாத்தியப்பாடுகள் மேலும் தெளிவானபோது பீக்கிங்கின் தாக்கம் மேலும் வலுப்பட்டது.

1968, அக்டோபர் 9 ந் திகதி சீனத் தலைவரொருவர் வியத்நாமிய வெளிநாட்டு வர்த்தக உதவி அமைச்சரொருவரை பீக்கிங்கில் சந்தித்து வியத்நாமியத் தலைமைப்பீடத்திற்கு செய்தியொன்றினைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். வடக்கு வியத்நாம் மீது ஐக்கிய அமெரிக்கக் குண்டுவீச்சு நிறுத்தப்பட்டமை "ஐக்கிய அமெரிக்காவுடன் வியத்நாம் செய்துகொண்ட ஓர் உடன்படிக்கை போன்றதே" என்றும் "1954 ஜெனீவா உடன்படிக்கை போன்ற தவறான செய்கை, வியத்நாம் மக்களின் மாபெரும் இழப்பு, மிகப் பெரிய சீரழிவு" என்றும் சீனா கருதுகிறது.

ஐக்கிய அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளிலிருந்து வியத்நாமைத் தடைசெய்வதும், வட வியத்நாம் மீது முன்னையதன் குண்டுவீச்சு நடவடிக்கையினை ஊக்குவிப்பதும் ஐக்கிய அமெரிக்க ஜெனரலான எம். ரெயிலரை இவ்வாறு கூறவைத்துள்ளது, கடைசி வியத்நாமியனுடன்கூட ஐக்கிய அமெரிக்கா போராட வேண்டுமென்றதும் இதன் மூலம் விஸ்தரிப்புக் கொள்கையின் நலன்களுக்காக வியத்நாமை வலுவிழக்கச் செய்யவேண்டும் என்றதும் சீனத் தலைமையின் தீர்மானமாகும்."

வியத்நாமிய வெளிநாட்டு வர்த்தக உதவி அமைச்சருடன் நடாத்திய மேற்குறிப்பிட்ட பேச்சுவார்த்தையின் போது சீனத் தரப்பு வஞ்சகமிக்க அறிக்கை யொன்றினைத் தயாரித்தது,ஐக்கிய அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையில் "சோவியத் அறிவுரையை" கேட்டுவரும் வியத்நாம் பின்வரும் தெரிவொன்றினை மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்:

> "வியத்நாம் ஐக்கிய அமெரிக்காவினைத் தோற்கடிக்க வேண்டுமானால், சோவியத் ஒன்றியத்துடனான உறவுகளை அது துண்டித்துக் கொள்ளவேண்டும்; அமெரிக்கர்களுக்கு எதிரான யுத்தத்திற்கு சீன உதவியை உபயோகித்துக்கொண்டு, ஐக்கி அமெரிக்காவுடன் உடன்படிக்கை யொன்றினையும் செய்து கொள்வதற்கு வியத்நாம் விரும்பினால் சீன உதவி அதன் முக்கியத்துவம் யாவற்றையுமே இழந்துவிடும்."

1968 அக்டோபர் 17 ந் திகதி, சீன வெளிநாட்டமைச்சர் சென் யீ வியத்நாமிய பிரதிநிதி யொருவரைச் சந்தித்து ஐக்கிய அமெரிக்காவிற்கும், வியத்நாமிற்கு மிடையிலான பேச்சுவார்த்தை பற்றிய சீனத் தலைமையின் நோக்கினைத் தெரிவித்தார்:

> "நான்கு கட்சிப் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கான உங்கள் உடன்படிக்கை ஜோன்சனும், ஹம்பிரியும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கே உதவிசெய்யும், தென் வியத்நாம் மக்களை ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்யின்கீழ், அவர்களுடைய கைப்பொம்மைகளாகவே விட்டு விடுங்கள், தென் வியத்நாமைவிடுதலை செய்யவே முடியாது, அதன் மக்கள் மாபெரும் இழப்புக்களால் மேலும் வருந்துவார்கள். எனவே எமது இரு தரப்புகளுக்கும், நாடுகளுக்கும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு எதுவுமேயில்லை."

இரு தரப்புகளுக்கிடையிலுமுள்ள உறவுகளைத் துண்டித்து விடும் பயமுறுத்தலானது வியத்நாம்மீது பலமான அழுத்தத்தைச் சுமத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட குரூரமான தந்திரமாகும்.

ஒப்பந்தங்களிற்கூட பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. 1968 ல், 1969 ற்கான உதவி வழங்கும் திட்டம் தீட்டப்பட்டபோது சீனா தனது உதவியை, 1968 உடன் ஒப்பிடும்போது 20 சதவீதத்தால் குறைத்துக்கொண்டது. இதற்கும் மேலாக, 1969 ஆகஸ்டில் அவர்கள் வெளிப்படையாகவே கூறினார்கள்:

> "நீங்கள் தொடர்ந்து யுத்தம் செய்ய விரும்புகிறீர்களா அல்லது சமாதானஞ் செய்துகொள்ள விரும்புகிறீர்களா? உதவி பற்றிய பிரச்சினையை ஆராயும்போது இதன் விடையை சீனா கட்டாயம் அறியவேண்டும்."

1970 ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது சீனா 1970 ம் ஆண்டிற்கான தனது உதவியை 50 சதவீதத்தினால் குறைத்துக்கொண்டது.

உண்மை நிலை என்னவென்றால், வியத்நாம் மீது மேலும் அழுத்தத்தினை ஏற்படுத்துவதற்கு "உதவிகளை" உபயோகிப்பதற்கு 1968 வரை பீக்கிங் தலைமைப்பீடம் காத்திருக்கவில்லை. 1966

ஏப்பிரல் முற்பகுதியில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான டெங் சியாவோ பிங் ஒரு வியத்நாமிய தலைவரிடம் பின்வருமாறு கூறினர்: ''1964 ல் தோழர் மா ஸேதுங் வியத்நாம் பிரச்னைகளில் நாம் பெரும் அக்கறை செலுத்திவருவது பற்றி கண்டனம் தெரிவித்தார். அவர் மிகுந்த தொலைநோக்குள்ளவரென்பதை நாம் இப்போது தெளிவாகக் காண்கிறோம்.''

வியத்நாமிய தரப்பு இதற்குப் பதிலளித்தது:

''சீனு சோஷலிஸ நாடு இன்னொரு சோஷலிஸ நாட்டின் மீது அக்கறை செலுத்துவது தொழிலாளர் சர்வதேசியத்தைப் பேணுவதில் ஒன்றாகும். இவ்வாறான அக்கறை ஒருபோதும் ஆபத்தை விளைவிக்காதெதென நாம் எண்ணுகிறோம், நீங்கள் காட்டிவரும் அக்கறை எமது நாட்டின் 20 லட்சம் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதாக இருக்கும்.

தென்வியத்நாமிய மக்கள் இறுதிவரை ஐக்கிய அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுடன் போரிடுவார்கள். அத்துடன் நாங்கள் தொடர்ந்தும் தொழிலாளர் வர்க்க சர்வதேசியத்தை உறுதியாகக் கடைப்பிடிப்போம்.''

வியத்நாம் மீது பெரிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் முயற்சியாக சீனத்தலைமை வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கத்தை எதிர்க்குமாறும், கிளர்ச்சிகளை ஏற்படுத்துமாறும் வியத்நாமிலுள்ள சீன தேசத்தவர்களைத் தூண்டுமாறு ஹனோயிலுள்ள தங்கள் தூதரகத்தைப் பணித்தது. 1965 ம் ஆண்டிலிருந்து 1968 ம் ஆண்டுவரை வடமாகாணத் ஹுள்ள வீதிகளை நிர்மாணிப்பதில் உதவிபுரிவதற்கு வியத்நாமிற்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்களைக்கொண்ட சீன ''சித்தாந்தக் குழுக்களுடன்'' கிளர்ச்சிகளைத் தூண்டிவிடும் சீன தேசியவாதிகள் ''மா ஸே துங் சிந்தனைகளையும்,'' ''கலாசாரப் புரட்சிகளையும்'' பிரச்சாரம் செய்தார்கள், வியத்நாமின் அரசியல் பாதையினை சிதைக்க முயன்றார்கள், உளவுப்படையொன்றினை அமைத்தார்கள். ''கலாசாரப் புரட்சிக்குப் பலியானவர்கள்'' வியத்நாமின் எல்லைப்புற மாகாணங்களுக்குள் ஊடுருவி உளவு வேலைகளிலும், ''இரகசிய இராணுவமொன்றினை'' அமைக்கும் வேலைகளிலும் ஈடுபட்டார்கள்.(1)

ஆனால் வியத்நாம் மக்கள் சுதந்திரம், இறைமை என்பவற்றைப் பெறுவதற்கான தமது மார்க்கத்தினையே உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். மேலும் நிர்ப்பந்தத்தினை அதிகரிக்கச் செய்வதற்கான பீக்கிங்கின் கொடிய முயற்சி

---

(1) உயர்மட்ட வியத்நாம் -சீனப் பேச்சுவார்த்தைகள் 1970 செப்ரம்பரிலும், 1977 நவம்பரிலும் இடம்பெற்றபோது தலைவர் மா ஸேதுங், தலைவர் குவா குவோ பெங் ஆகியோர் அந்த சிநேகபூர்வமற்ற நடவடிக்கைகளுக்பான சீனுவின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்கள்.



களும், அதனுடைய அரசியல் சூழ்ச்சிகளும் படுதோல்வியிலேயே முடிவுற்றன. வட வியத்நாம் மீது குண்டுவீச்சினை நிபந்தனையற்ற முறையில் நிறுத்தி விடுவதற்கு ஐக்கிய அமெரிக்கா 1968 நவம்பர் முற்பகுதியில் நிர்ப்பந்திக்கப்பட்டது. 1969 முற்பகுதியில் தென் வியத்நாம் தேசிய விடுதலை முன்னணியுடன் சேர்ந்து பாரிஸில் நான்கு கட்சிப் பேச்சுவார்த்தைகளை நிகழ்த்தவும் கட்டாயப்படுத்தப்பட்டது.

3. 1969 - 1973 காலப்பகுதி: வியத்நாமின் முதுகின் பின்னுல் ஐக்கிய அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகள்.

1969 ம் ஆண்டில் சீனுவில் ''கலாசாரப் புரட்சி'' பூரணமடைந்தபோது பீக்கிங்கின் ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் தலைவர் மா ஸேதுங்கின் தலைமைப் பீடத்தை வலுவடையச் செய்வதற்கு வேண்டிய ஒவ்வொரு முயற்சிகளையும் உள்ளீடாக மேற்கொண்டார்கள், உள்நாட்டுச் சூழ்நிலைகளை ஸ்திரப்படுத்துவதற்காகவும், ஐக்கிய அமெரிக்காவின் ரகசியக் கூட்டுடன் உற்பத்தி வழிமுறைகளை உயர்வடையச் செய்து சீனுவை ஒரு வல்லரசாக உயர்த்தும் முயற்சிக்காகவும் ஐக்கிய அமெரிக்காவுடனுன உறவுகளை சகஜநிலைப்படுத்தி தாய்வான் பிரச்னைகளைத் தீர்த்துவைத்தனர். வெளிநாட்டு விவகாரங்களில் அவ்வாறான ஸ்தூல நிலையினை வியத்நாம் பிரச்னைகள் வந்தடையச் செய்யும் முயற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டார்கள்.

1969, வெள்ளை மாளிகையில் நிக்ஸனின் முதலாவது ஆண்டாகும். வியத்நாமிய யுத்தத்தால் படுமோசமாக நலிவடைந்துபோன ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச நிலையினை மீண்டும் நிலைநிறுத்துவதற்காக அவர் ''நிக்ஸன் சித்தாந்தத்தினை'' உருவாக்கினுர், யென் வான் தௌவின் பொம்மலாட்ட நிர்வாகத்தினை பராமரிக்கும் அதே வேளையில் தென் வியத்நாமிலிருந்து ஐக்கிய அமெரிக்கத் துருப்புக்களை வாபஸ்பெறும் நோக்குடன் ''யுத்தத்தினை வியத்நாமியப்படுத்தல்'' என்ற தந்ரோபாயத்தினை அவர் நடைமுறைப்படுத்தினுர்.

1969 லிருந்து 1973 வரையிலான காலப்பகுதியில் வியத்நாமிய மக்கள் யுத்த களத்தில் தங்கள் பாதுகாப்பினை மேம்படுத்தும் பணியிலும், பாரிஸ் நான்கு கட்சி மகாநாட்டுப் பேச்சுவார்த்தைகளிலும் உயர்ச்சியடைந்துசென்று பெரும் வெற்றியினையும் அடைந்தார்கள். இதே காலத்திற்தான் பீக்கிங் வாஷிங்டன் தொடர்புகள் அதிகரித்தன, வெளிப்படையாகவே ஒருவருடனொருவர் உறவுகொண்டாடினுர்கள், இருபக்க விவகாரங்கள் மட்டுமின்றி வியத்நாமிய மக்களினதும் ஏனைய இந்தோசீன மக்களினதும் இறைமைகள் தொடர்பான விவகாரங்கள் குறித்தும் அவர்கள் விவாதித்தார்கள்.

1. வியத்நாமிய மக்களை வெளிப்படையாக ஏமாற்றுதல்:

1968 நவம்பர் முற்பகுதியில் சீன வெளிநாட்டமைச்சு விடுத்த ஓர் அறிக்கையில் வார்ஸோவில் நடைபெற்ற சீன - ஐக்கிய அமெரிக்கப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் அதனுடைய விருப்பினையும், சமாதான சகவாழ்விற்கான ஒப்பந்தமொன்றில் ஐக்கிய அமெரிக்காவுடன் கைச்சாத்திடுவதற்கான விருப்பினையும் வெளியிட்டது. இது தொடர்பாக ஐக்கிய அமெரிக்க தரப்பிலிருந்து பெறப்பட்ட சைகைகளுக்குச் சாதகமான முறையிலேயே சீனா செயற்பட்டது. தான் ஜனாதிபதியானதன் பின்னர் ஐக்கிய அமெரிக்காவிற்கும் சீனாவிற்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் சீனாவிலேயே நடைபெறுமென்று நிக்ஸன் சீன அரசாங்கத்திற்கு அறிவித்தார். இதற்குப் பதிலளிக்கும் முகமாக ''நிக்ஸன் நேரிலேயே பீக்கிங்கிற்கு வரலாமென்றும் அல்லது தனது பிரதிநிதி யொருவரை அனுப்பி தாய்வான் பிரச்னைகள்பற்றி விவாதிக்கலாமென்றும்'' (1) சீனா அறிவித்தது.

1970 ஜூன் மாதத்தில், சீனத் தூதுவர் ஹுவாங் சென்னும் கிஸிங்கரும் இரகசியப் பேச்சுவார்த்தைகளை நிகழ்த்துவதற்கு சீனாவும், ஐக்கிய அமெரிக்காவும் ஒப்புதலளித்தன. இதே வேளையில் வியத்நாமுடனான ஒவ்வொரு பேச்சுவார்த்தையின்போதும் கிஸிங்கர் பாரிஸிற்கு வந்து சென்றார்.(1)

1970 டிசம்பர் மாதம் 10 ந் திகதி தனது நெருங்கிய நண்பரான ஈ. ஸ்னோ என்பவருடாக தலைவர் மா ஸேதுங் சீனாவிற்கு விஜயம் செய்யுமாறு நிக்ஸனுக்கு அழைப்பொன்றை அனுப்பினார்:

''அவர் (ஜனாதிபதி) இங்கு வரவேற்கப்படுவார். ஏனெனில் தற்போது சீனாவிற்கும் ஐக்கிய அமெரிக்காவிற்குமிடையிலுள்ள பிரச்னைகள் நிக்ஸனுடன் தீர்த்துவைக்கப்பட வேண்டும்.''(2)

சீன - ஐக்கிய அமெரிக்க உறவுகளில் தீர்க்கமாக ஏற்பட்ட பீக்கிங்கின் முழுத்திருப்பம் இதுதான், இதேபோது வியத்நாமியப் புரட்சி, இந்தோசீனப் புரட்சி, உலகப்புரட்சி என்பவற்றிற்கு நம்பிக்கைத் துரோகம் செய்யும் பீக்கிங்கின் பாதையின் திருப்புமுனையும் இதுதான். ஐக்கிய அமெரிக்காவுடன் தனது பொதுத் தொடர்புகளை பீக்கிங் வளர்த்துச் சென்றது:

---

(1) ''நீண்ட புரட்சியில்'' ஈ. ஸ்னோ. ஹட்சின்சன், லண்டன் 1975 பக். 11, 172.

(1) வி. ஏ. வோல்ரேசின் ''மௌனத்தூதுகோஷடி.'' டபிள்டே பதிப்பு. நியூ யோர்க் 1978, பக். 530-531.

(2) ''நீண்ட புரட்சி'' ஈ. ஸ்னோ, ஹட்சின்சன் பதிப்பு, லண்டன் 1973, பக். 172.



1971 மார்ச் மாதத்தில் ஐக்கிய அமெரிக்க மேசைப் பந்தாட்டக் குழுவினை சீனாவிற்கு விஜயம் செய்யுமாறு சீனா அழைப்பு விடுத்தது. இதனை ''மேசைப் பந்தாட்ட ராஜதந்திரமென்று'' கூறினார்கள்.

1971 ஜூலையிலும், அக்டோபரிலும் நிக்ஸனின் விசேஷ பிரதிநிதியாக கிஸிங்கர் பீகிங்கிங்கிற்கு விஜயம் செய்தார்.

1972 பெப்ருவரியில் நிக்ஸன் சீனாவிற்கு நேரில் விஜயம் செய்தார்.

கிஸிங்கரின் முதலாவது பீக்கிங் விஜயத்தின்போது வியத்நாமிய தரப்பின் நிலையை விவரித்த சீனாவின் உயர்மட்டத் தூதுக்குழுவொன்று 1971 ஜூலை 13 ந் திகதி பின்வருமாறு கூறியது:

'' கிஸிங்கருடனான பேச்சுவார்த்தையின்போது இந்தோசீனா தான் எமது முக்கிய பிரச்னையாக இருந்தது. இந்தோசீனப் பிரச்னைக்கான தீர்வினை தாய்வான் பிரச்னைக்கான தீர்வுடன் ஐக்கிய அமெரிக்கா பிணைத்துள்ளதென கிஸிங்கர் கூறினார். இந்தோசீனாவிலிருந்து தனது துருப்புக்களை வாபஸ்பெற முடிந்தால் மட்டுமே தாய்வானிலிருந்தும் துருப்புக்களை வாபஸ் பெறலாமென்று அமெரிக்கர்கள் கூறினார்கள. சீனாவைப் பொறுத்தமட்டில் தென் வியத்நாமிலிருந்து ஐக்கிய அமெரிக்கத் துருப்புக்கள் வாபஸ் பெறப்படுவது முதலாவது பிரச்னையாகும், ஐக்கிய நாடுகள் சபையில் சீனா சேர்ந்துகொள்வது இரண்டாவது பிரச்னையாகும்.''

நிக்ஸன் தனது சீன விஜயத்தை முடிக்கும்தறுவாயில்இரு தரப்புகளும் ஷங்ஹாய் அறிக்கையில் கைச்சாத்திட்டன, அதன் ஒரு பகுதி:

தாய்வானிலிருந்து ஐக்கிய அமெரிக்கப் படைகளையும், இராணுவத் தளங்களையும் வாபஸ் பெறுவதனை ஐக்கிய அமெரிக்கா தெளிவாக உறுதி செய்கிறது. அதே வேளையில், தாய்வானிலுள்ள பதட்ட நிலை முற்றாக இல்லாதொழியும் வரை அது தனது படைகளையும், இராணுவத் தளங்களையும் படிப்படியாகவே குறைத்துச் செல்லும்.''

1972 மார்ச் முற்பகுதியில், நிக்ஸனுடன் நிகழ்த்திய பேச்சுவார்த்தைகளைப் பற்றி விவரிப்பதற்காக வியத்நாமுக்கு விஜயம் செய்த சீனத் தலைமையின் பிரதிநிதி அறிக்கையின் மேற்சொன்ன பகுதியினை பின்வருமாறு விளக்கினார்:

''சீனாவிற்கும், ஐக்கிய அமெரிக்காவிற்கு மிடையிலான உறவுகளை சகஜநிலைக்குக் கொண்டுவருவது, முக்கியமாக தூர கிழக்கிலுள்ள பதட்ட நிலையினைத் தளர்த்துவதற்கும் இதைவிட

முக்கியமாக வியத்நாம், இந்தோசீனப் பிரச்னைகள் கட்டாயம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்குமேயாகும். தாய்வான் பிரச்னைதான் முதலில் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கோரவில்லை. தாய்வான் பிரச்னை பின்னர் ஒரு கட்டத்தில் தீர்க்கப்பட வேண்டியதாகும்.''

தாய்வான் பிரச்னைக்கு முதலில் தீர்வு காண்பதற்காக வியத்நாமியப் பிரச்னையை உபயோகிக்கவே பீக்கிங் உண்மையில் விரும்பியது. ஆனால் வியத்நாமோ சுதந்திரக் கொள்கையொன்றையும், இறைமைக்கான கொள்கையொன்றையும் உறுதியாகக் கடைப்பிடிப்பதெனத் தீர்மானித்துவிட்டது. இதன் தொடர்ச்சியாக, சீனத் தலைவர்களும், நிக்ஸனும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தார்கள்: ''அதே வேளையில், இப் பிரதேசத்திலுள்ள பதட்டநிலை முற்றாக இல்லாதொழியும்வரை அது தனது படைகளையும், இராணுவ தளங்களையும் படிப்படியாகவே குறைத்துச் செல்லும்.''

இதன் பொருள், தாய்வானிலிருந்து ஐக்கிய அமெரிக்கப் படைகள் துரிதமாக வெளியேற்றப்பட வேண்டுமென சீனா விரும்பினால் அது செய்ய வேண்டியிருந்ததெல்லாம் ஐக்கிய அமெரிக்காவுடன் சமாதான உடன்படிக்கையொன்றினைச் செய்யுமாறு ஹனோயை வற்புறுத்துவதே.

இதற்கமைவாகவே சீனா உதவியென்ற ''முள்ளங்கியினை'' உபயோகித்தது: 1968 ல் வியத்நாமிற்கு அது வழங்கிய உதவித் தொகையினைக் குறைத்துக்கொண்டது. ஐக்கிய அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு வியத்நாம் தீர்மானித்தமையை அது எதிர்த்ததே இதற்குக் காரணம்.

1971 ம் ஆண்டிலும் 1972 ம் ஆண்டிலும் ஐக்கிய அமெரிக்காவுடன் சமரஸம் செய்துகொள்வதற்கான பீக்கிங்கின் திட்டத்தினுள் வியத்நாமை இழுத்தெடுப்பதற்காக முன்னெப்பொழுதையும்விட மிகப் பெரிய தொகையினை சீனா வியத்நாமிற்கு உதவியாக வழங்கியது. இது தமது நம்பிக்கைத் துரோகத்தை மூடி மறைப்பதற்காகவும், வியத்நாம் மக்களின் ஆத்திரத்தைத் தணிப்பதற்காகவும் செய்யப்பட்ட முயற்சியாகும்.

உதவியினை அதிகரித்துக்கொண்டே சீனா ஐக்கிய அமெரிக்காவின் தீர்வினை ஏற்றுக்கொள்ளுமாறு வியத்நாமை வற்புறுத்தியது. 1971 ஜூலை 18 ந் திகதி சீனத்தரப்பு ஐக்கிய அமெரிக்காவின் நான்கு அம்ச வேலைத்திட்டமொன்றினை வியத்நாமிய தரப்பிற்கு அறிவித்தது. 1971 ஆகஸ்ட்மாதம் 1 ந் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் ஐக்கிய அமெரிக்கா கைதுசெய்தவர்களை விடுவித்தலும் ஐக்கிய அமெரிக்கப் படையினை வாபஸ் பெறுதலும்; இந்தோசீனா முழுவதும் இதனை மேற்கொள்ளுதலும், 1954 ல் ஜெனீவாவில் காணப்பட்டதுபோன்ற தீர்வொன்றைக் காணுதலும் ஐக்கிய அமெரிக்கப் படைகளை வாபஸ் பெறுவது பற்றிக் குறிப்பிடும்போது



''முக்காடிடும்'' தேவைக்காக தொழில்நுட்பவியலாளர்கள் பலரை அங்கேயே விட்டுவைக்க ஐக்கிய அமெரிக்கா விரும்பியது. அரசியல் பிரச்னைகள் பற்றிக் குறிப்பிடும்போது ''ஐக்கிய அமெரிக்கா யென் வான் தியூவையோ அல்லது சிறிக் கத்தாக்கையோ கைவிட்டுவிட விரும்பவில்லை.''

வியத்நாம் தரப்புடன் 1971 நவம்பரில் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின்போது சீனத்தரப்பு பின்வருமாறு கூறியது:

> ''ஐக்கிய அமெரிக்கப் படைகளை வாபஸ் பெறும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பத்தினை முதலில் வியத்நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அடுத்து கைதிகள் பற்றிய பிரச்னைகளை கருத்திற்கொள்ளலாம். சைகோன் பொம்மலாட்ட நிர்வாகத்தினைத் தூக்கிவீசுவது நீண்டகாலப் பிரச்னையாகும்.''

இதே சந்தர்ப்பத்தில் ''ஐக்கிய அமெரிக்காவிற்குப் பழைய நண்பர்கள் பலர் இருக்கிறார்கள் அவர்களை அதால் கைவிட முடியாது'' என்ற ஐக்கிய அமெரிக்காவின் நிலைபற்றிக் குறிப்பிடும்போது தலைவர் மா ஸேதுங் கூறுகிறார்:

> ''தாய்வான் பிரச்னை ஒரு நீண்டகாலப் பிரச்னையாகும். உண்மையாகவே அதனைச் சில ஆண்டுகளுக்குள் தீர்த்துவிட முடியாது. விரைவான தீர்வு, தாமதமான தீர்வு என்பவற்றிற்கிடையில் நான் பின்னையதினையே தெரிவு செய்வேன். தற்போது ஷியாங்கே ஷேக்கிடம் 650,000 துருப்புக்கள் உள்ளன இதன் குறுக்கே எம்மால் செல்ல முடியாது, ஷியாங் கே ஷேக் தொடர்ந்தும் அங்கேதான் இருப்பார். துடைப்பக் கட்டை எங்கு செல்ல முடியாதோ அங்குள்ள தூசி துடைக்கப்படமாட்டாது.''

நிக்ஸன் சீனாவிற்கு விஜயம் செய்ததன் பின்னர் 1972 மார்ச் 1 ந் திகதி கிஸிங்கர் நிருபர்களிடம் தானும் ஜனாதிபதியும் ''இப்போது மாஸ்கோவை - வியத்நாமை அது கெட்டியாகப் பிடித்துள்ளதனை நோக்க ஆரம்பித்துள்ளதாக'' கூறினார்.(1)

1972 ஏப்பிரல் மாதத்திலிருந்து ஐக்கிய அமெரிக்கா வட வியத்நாமின் மீது மீண்டும் குண்டுவீச ஆரம்பித்தது, சகல துறைமுகங்களையும் தகர்த்துவிட்டு யென் வான் தியூவின் அணி தூக்கிவீசப்படாதிருப்பதற்காகவும். அதனைப் பாதுகாப்பதற்காகவும் தென் வியத்நாமிய மக்கள் மீதும் அவர்களை அடக்கும் முயற்சி

---

(1) ''கிஸிங்கர்'' மார்வின் காப், பேனாட் காப். லிற்றில் பிறவுண் அன் கோ. பதிப்பு. பொஸ்ரன் - ரொறன்ரோ, 1974. பக். 283.

யுடன் தாக்குதலைத் தொடுத்தது. ஐக்கிய அமெரிக்காவின் இந்தப் புதிய இராணுவ வெறி சீன ஆட்சியாளர்களுக்கும், நிக்ஸனுக்குமிடையேயுள்ள கூட்டின் விளைவேயாகும்.

1972 அக்டோபரின் இறுதிப்பகுதியில் நிக்ஸன் - கிஸிங்கர் ஆடிய நாடகத்தின் காரணமாக பாரிஸ்உடன்படிக்கையின் ஆரம்பமே தோல்வியில் முடிந்தமை பொதுவாக அறிந்துகொள்ளக் கூடியதே. ஆனால் சீன ஆட்சியாளர்கள் மீண்டும் ஐக்கிய அமெரிக்காவின் கருத்து நிலையை எடுத்துக்கொண்டு வியத்நாம் மீது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தத் தொடங்கினார்கள். 1972 நவம்பர் 1 ந் திகதி, வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் வெளிநாட்டு வர்த்தக உதவி அமைச்சர் ஒருவரினூடாக வட வியத்நாமிய படைகள் வாபஸ் பெறுவது சம்பந்தமான பிரச்சினைகளில் சலுகை காட்ட வேண்டுமென்றும், வட வியத்நாமிய இராணுவ உதவியினைக் கைவிட வேண்டுமென்றும் அவ்வாறு செய்தாற்றான் உடன்படிக்கை கைச்சாத்திட முடியுமென்றும் வியத்நாமிய தலைமைப்பீடத்திற்கு சீனா அறிவித்தது.

1972 டிசம்பர் 5 ந் திகதி சீனத் தூதுவர் ஹுவா சென் கிஸிங்கரிடமிருந்து ஓர் எச்சரிக்கையினை வியத்நாம் தரப்பிற்கு விடுத்தார்:

''பேச்சுவார்த்தைகள் ஒரு சிக்கலான இடத்துக்கு வந்துவிட்டன. ஐக்கிய அமெரிக்கா பழைய உடன்படிக்கைக்கே திரும்பிச் செல்லவேண்டுமென்றும் அல்லது மோசமான நிலையொன்றினை ஏற்கவேண்டுமென்றும் வட வியத்நாம் கோரிக்கை விடுத்துள்ளது. இவை இரண்டையுமே ஐக்கிய அமெரிக்கா ஏற்றுக்கொள்ளமாட்டாது. வியத்நாம் தொடர்ந்தும் இந்நிலைபாட்டினையே கொண்டிருக்குமானால் முன்னைய பேச்சுவார்த்தைகளெல்லாம் நிராகரிக்கப்பட்டு தனது கொள்கைகளைப் பாதுகாப்பதற்கு வேண்டிய எந்தவொரு நடவடிக்கையையும் ஐக்கிய அமெரிக்கா எடுக்கும்.''

ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால் திணிக்கப்பட்ட தீர்வினை வியத்நாமிய மக்கள் ஏற்றுக்கொள்வதனை வற்புறுத்தும் முயற்சியின் தயாரிப்பு நடவடிக்கையாக ஹனோய், ஹாய் பொங் என்பவற்றிற்கெதிராக 1972 ன் இறுதியில் பீ. 52 குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் தொடுத்தன.

வியத்நாமிற்கு எதிராக வாஷிங்டனுடன் கூட்டுச்சேர்ந்த பீக்கிங்கின் முகத்தில் கரிபூசும் வண்ணம் இறுதி வெற்றியில் திட நம்பிக்கைகொண்டு ஐக்கிய அமெரிக்காவிற்கு எதிராக தமது தேச பக்த யுத்தத்தினை மேலும் முனைப்பாக்குவதற்கு வியத்நாம் மக்கள் தீர்மானித்தார்கள்.

தனது சீன விஜயத்தின்போது சீனத் தலைவர்களுடன் வியத்நாம் பிரச்சினை பற்றிய விவாதங்களை நிக்ஸன் மேற்கொண்டாரென்ற செய்தியினை வியத்நாம் தரப்பிற்கு சீனத்தரப்பு தெரிவித்த



போது வியத்நாமியத் தலைவர்கள் நேரடியான பதில் கொடுத்தார்கள்:

''வியத்நாம் எங்களுடைய நாடு, வியத்நாம் பற்றிய பிரச்னைகளை ஐக்கிய அமெரிக்காவுடன் விவாதிப்பதற்கு உங்களை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். நீங்கள் ஏற்கனவே உங்கள் 1954 ம் ஆண்டின் தவறை ஏற்றுக்கொண்டுள்ளீர்கள், எனவே இன்னொரு தவறையும் நீங்கள் புரியவேண்டாம்.''

சீனத்தரப்பு நிக்ஸனின் சீன விஜயத்தை வியத்நாமிற்கு அறிவித்தபோது வியத்நாமியத் தலைவர்கள் கூறினார்கள்:

''ஐக்கிய அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரான தேச பக்த யுத்தத்தில் வியத்நாமிய மக்களே நிட்சயம் வெற்றி பெறுவார்கள். ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மீண்டும் தமது தாக்குதல்களைத் தொடரக்கூடும், வட வியத்நாமிற்கு எதிராகக்கூட அவர்கள் ஆகாய யுத்தத்தினை மேற்கொள்ளக்கூடும். ஆனால் இவற்றிற்கெல்லாம் வியத்நாமிய மக்கள் அஞ்சப்போவதில்லை, அவர்கள் நிட்சயம் வெற்றி பெற்றே தீருவார்கள்.''

பீக்கிங், வாஷிங்டன் என்பவை தோற்றுவித்த சகலவிதமான நெருக்கடியினுள்ளும் தங்கள் கொள்கைபற்றிய விவகாரங்களில் வியத்நாமியர்கள் எந்த விட்டுக்கொடுப்புகளையும் செய்யவில்லை. இதற்குப் பதிலாக ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு அவர்கள் தண்டனை வழங்கினார்கள், இதன் காரணமாக 1973 ஜனவரி 27ந் திகதி பாரிஸில் வியத்நாமுடனான உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

## 2. கம்பூச்சிப் பிரச்னையின் பூரண கட்டுப்பாடு.

தங்களுடைய சமரஸக் கொள்கையை நடைமுறைப்படுத்திக்கொண்டும் ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டும் தென்கிழக்கு ஆசியாவில் தனது எதிர்கால விஸ்தரிப்பிற்கான பாதையை வகுக்க முயற்சித்துக்கொண்டும், இதே வேளையில் இந்தோசீன மக்களின் ஒற்றுமையினைக் குழிதோண்டிப் புதைக்க முயற்சித்துக்கொண்டும், வியத்நாம் மீது மேலும் நெருக்கடியைத் தோற்றுவித்துக்கொண்டும், 1970ஆம் ஆண்டிலிருந்து கம்பூச்சிய படைகளை கட்டுப்படுத்த முனைந்துகொண்டும், தமது சொந்த நலன்களின் திருப்தியேயன்றி வேறெந்த இலக்குகளும் இல்லாது கம்பூச்சியா மீது மிகச் சிக்கலான கொள்கையொன்றினைச் சுமத்திக்கொண்டும் பீக்கிங் கபட நாடகமாடி வருகிறது.

1970 மார்ச் மாதம் 18 ந் திகதி ஏகாதிபத்தியப்படைகளும், கிளர்ச்சிச் சக்திகளும் இளவரசர்ஷிஹானூக்கின் அரசாங்கத்தைத் தூக்கி வீசிவிட்டு லொன் நொல்லை அதிகாரத்திற்குக் கொண்டு வரும் சதியினை மேற்கொண்டார்கள்.

லொன் நொல் சீன மூலாதாரத்திலிருந்து தோன்றிய கம்பூச்சியனென்ற முறையிலும், அமெரிக்க உளவாளியென்ற முறையிலும் ஷிஹானூக்கைவிட அதிகமான அளவிற்கு இவனே உபயோகிக்க சீனத் தலைவர்கள் விரும்பினார்கள். பீக்கிங்கில் சீன வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதி ஒருவர் வியத்நாமியத் தூதுவரிடம் பின்வருமாறு கூறினார்:

> ''ஷிஹானூக்கிடம் படைகள் எதுவும் இல்லை, வியத்நாம் லொன் நொல்லிற்கே ஆதரவளிக்கவேண்டும். சீனா ஷிஹானூக்கை வரவேற்கிறது(1)ஆனால் நாம் பென் தூதுவராலயத்துடன் இன்னும் நல்லுறவினைப் பேணிவருகிறோம்.''

நாம் பென்னில், சீனத்தூதுவர் வியத்நாமியத் தூதுவரிடம் இதனையே கூறினார். லொன் நொல்லிற்கு எதிரான வியத்நாம் மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை சீனா நிராகரிக்கிறதென்றும் சீன வெளிவிவகார அமைச்சர் வியத்நாமிய தூதுவரிடம் கூறினார்.

டி 'எராற் சதி நாம் பென்னில் நடைபெற்று முடிந்ததும், ஷிஹானூக் பீக்கிங்கிற்கு வந்திறங்கியபோது பிரதம மந்திரி பாம் வான் டொங் சீனாவிற்கு விஜயமொன்றினை மேற்கொண்டு ஷிஹானூக்கிற்கு ஆதரவு வழங்குமாறு சீனத் தலைவர்களை வேண்டிக் கொண்டார், அத்துடன் வியத்நாமின் பலமான ஆதரவும் கிமிர் பாதுகாப்புப்படையின் ஆதரவும் ஷிஹானூக்கிற்கு இருப்பதாக எடுத்துரைத்தார்.

1970 மார்ச் 23 ந் திகதி லொன் நொல்லால் அரங்கேற்றப்பட்ட டி' எராற் சதியினைக் கண்டித்தும், லொன் நொல்லின் குழுவினருக்கும்,ஐக்கிய அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கும் எதிராகப் போராடுவதற்கு ஒன்றுதிரண்டு வருமாறும் கோரி ஐந்து - அம்ச அறிக்கை யொன்றினை ஷிஹானூக் வெளியிட்டார்.

1970 மார்ச் 25 ந் திகதி வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கம் ஷிஹானூக்கின் அறிக்கைக்கு முழு ஆதரவினைத் தெரிவித்து ஓர் அறிக்கையினை வெளியிட்டது.

1970 ஏப்பிரல் 7 ந் திகதிக்கு முன்பே சீன அரசாங்கம் ஷிஹானூக்கை ஆதரித்து அறிக்கை யொன்றினை வெளியிட்டது. எவ்வாறிருப்பினும் அது லொன் நொல் நிர்வாகத்துடன் இரகசியத் தொடர்புகளை தொடர்ந்தும் வைத்திருந்தது. இதே நேரத்தில் வியத்நாமிய ஆயுதப்படையின் உதவியுடன் கிமிர் பாதுகாப்புப் படையினர் புதிய வெற்றிகளை ஈட்டி நாட்டின் நான்கிலொரு பகுதியினை விடுதலை செய்தார்கள். கம்பூச்சிய யுத்தம் உலக முழுவதிலும், ஐக்கிய அமெரிக்காவிற்கூட பலமான எதிர்ப்பு இயக்கமொன்றினைத் தூண்டிவிட்டுள்ளதாக நிக்ஸன் கூறியதன் பின்னரே சீன அரசாங்கம் லொன் நொல் நிர்வாகத்துடன் தனக்கிருந்த உறவுகளைத் துண்டித்துக் கொண்டது (1970, மே மாதம் 5 ந் திகதி).

---

(1) இந்நேரத்தில் ஷிஹானூக் மாஸ்கோவிலிருந்து பீக்கிங்கிற்கு வந்துகொண்டிருந்தார்



கம்போடிய இடைக்காலப் புரட்சி அரசாங்கத்துக்கு வியத்நாமின் உறுதிமிக்க ஆதரவு கிடைத்ததைத் தொடர்ந்தும், போர்க்களத்தில் கிளர்ச்சிச் சக்திகளுக்குச் சாதகமான முறையில் நிகழ்வுப் போக்கு மாற்றமடையத் தலைப்பட்டதைத் தொடர்ந்துமே அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஹமர் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் ஷிஹானூக்கிற்கு ஆதரவு வழங்க பீகிங் ஆட்சியாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அத் தருணம் முதற்கொண்டு ஷிஹானூக்கினைத் தம் கைப்பிடியினுள் வைத்துக் கொள்ளுவதற்கும், அமெரிக்காவுடன் பேரம் பேசுவதில் ஷிஹானூக் துரும்புச் சீட்டினை மூலாதாரமாகக் கொள்ளுவதற்கும் அவர்கள் முயன்று வந்தனர். ஒருபுறத்தில், ஷிஹானூக்கிற்கும், கிளர்ச்சி அரசாங்கத்துக்கும் அவர்கள் ஆதரவு வழங்கி வந்த பொழுதிலும், மறுபுறத்தே, லொன் நொல்—ஸிறிக் மதாக் கோஷ்டியுடன் இரகஸிய தொடர்புகளைப் பேணிவந்ததுடன், தென் கிழக்காசியாவிலும் உலகின் இதர பகுதிகளிலுமுள்ள மாஓவாத கோஷ்டிகளைப் போலவே, ஹமர் கட்சியினையும் சீனாவினைச் சார்ந்துநிற்கும் ஒரு கட்சியாகப் படிப்படியாக மாற்றுவதற்கு பொல் பொட்—இயாங்ஸாரி கோஷ்டியினரையும் தீவிரமாகப் பயன்படுத்தி வந்தனர்.

1970 ஏட்ரலில் நடைபெற்ற முதலாவது இந்தோ—சீன மக்களின் உச்சி மகாநாட்டினைத் தமது நலன் பொருட்டுப் பயன்படுத்த முனைந்த சீனத் தலைவர்கள், இம் மகாநாட்டினுக்குத் தாம் ஏதோ பெரும் பங்களிப்பினைச் செய்தனர் என்ற ரீதியில் பம்மாத்துச் செய்யவும் எத்தனித்தனர். இந்தோ—சீனப் பிரச்னைக்குத் தீர்வுகாணுவதில் துணை செய்யக்கூடிய ஒரு நிலையில் தாம் இருப்பதாகவும், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளில் வியத்நாமினையும் இதர இந்தோ—சீன நாடுகளையும் ''பிரதிநிதித்துவப்படுத்த'' தம்மால் முடியும் என்பதாகவும் அமெரிக்காவுக்கு தம்மைக் காட்டிக்கொள்ள அவர்கள் முயன்றனர்.

வியத்நாம், லாவோஸ், கம்போடியா ஆகியன நிக்ஸனது புதிய இராணுவ அதிகூரத்தனங்களுக்கு மீண்டும் மீண்டும் தகுந்த பதிலடி கொடுத்து வந்த ஒரு வேளையில், அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான இந்தோ சீன மக்களின் போராட்டத்தில் மேலும் வெற்றிகள் ஈட்டப்படுவதைக் துரிதப்படுத்தும் பொருட்டு 1971 இறுதிப் பகுதியில் இந்தோ சீன மக்களின் இரண்டாவது உச்சி மகாநாடு கூட்டப்படவேண்டும் என ஷிஹானூக் யோசனை கூறினார். இந்த யோசனையைத் தாம் வரவேற்பதாகச் சீனத் தலைவர்கள் உதட்டளவில் கூறிக்கொண்ட பொழுதிலும், நிஜத்தில் இந்த யோசனையை நிராகரிக்குமாறு பொல்பொட்—இயாங்ஸாரி கோஷ்டியினை அவர்கள் நிர்ப்பந்தித்தனர். 1971 மார்ச்சில் வியத்நாமுக்கு விஜயஞ் செய்த சீனப் பிரதிநிதிகள் குழுவொன்று ஜப்பானுக்கு எதிராக ஐந்து நாடுகளினதும் (வட வியத்நாம், தென்வியத்நாம், லாவோஸ், கம்போடியா, சீனா, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு) பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மகாநாடொன்று சீனாவில் நடாத்தப்

பட வேண்டுமென யோசனை கூறியது. இந்தோ—சீன மக்கள் மத்தியிலான ஒருமைப்பாட்டினுக்குக் குழிபறிக்கவும், இவர்களின் போராட்டத்தினைத் திசைதிருப்பவும், அமெரிக்காவுடனான பேரத்தில் சீனாவின் நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு பீக்கிங் தலைமைப்பீடத்தின் கீழ் மேலும் பல சக்திகளை அணி திரட்டிக் கொள்ளவுமான கபட நோக்கங்களுடனேயே மேற்படி யோசனை முன்வைக்கப்பட்டது. ஷிஹானூக்கின் யோசனையை ஆதரித்த வியத்நாமிய தரப்பு மேற்படி சீனப் பிரதிநிதிகளின் யோசனையை மறுத்தொதுக்கியது. இந்தோ—சீன மக்களின் பிரதான சத்துராதியாக அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ந்து இருக்கும் வரை ஜப்பானிடமிருந்து அச்சுறுத்தல் வரும் என்ற கருத்தினை விலக்க வேண்டியவர்களாக நாம் இருந்தோம். இதனால் தான் ஐந்து நாடுகளின் மகாநாட்டினைத் கூட்டும் சீனாவின் கபடத்திட்டம் மறுத்தொதுக்கப்பட்டது.

கம்போடியப் பிரச்னையைப் பின்நின்று கையாளுவதற்கு முடிந்த ஒவ்வொரு வாய்ப்பினையும் பயன்படுத்த முயன்ற சீனத் தலைவர்கள் மூன்று இந்தோ சீன நாடுகளினதும் இராணுவ தளவாட விநியோக மார்க்கங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவும் முயன்றனர். இதைத் தொடர்ந்து 1972ம் ஆண்டு வரை வடவியத்நாமிலிருந்து ஹோ சீ மின் மார்க்கத்துக் கூடாக தென்வியத்நாமிய யுத்தமுனை, லாவோஸ், கம்போடியா ஆகியவற்றுக்கு நெடுஞ்சாலைகளையும் இராணுவ, தளவாட விநியோகப் பாதைகளையும் நிர்மாணிப்பதில் உதவி செய்ய தாம் தயாராகவிருப்பதாகக் கூறிய சீனத் தலைவர்கள், இப்பணிகளை நிறைவேற்றும் பொருட்டு 200,000 சீனப் போர்வீரர்களையும் போதுமானளவு வாகனங்களையும் தந்துதவுவதாகவும் வாக்களித்தனர். இந் நிர்மாணத்திட்ட வேலைகள், இந்தோ—சீன நிலவரத்தின் மீது தாம் பூரண செல்வாக்கினைப் பிரயோகிப்பதற்கான வாய்ப்பினை வழங்கும் எனவும், தென்கிழக்காசியாவில் தமது பிராந்திய விஸ்தரிப்பு முயற்சிகளுக்கான தளமாக இப்பிரதேசத்தைப் பயன்படுத்த முடியும் எனவும் சீனத் தலைவர்கள் நம்பினர். ஆனால், இவற்றையும் வியத்நாம் மறுத்தொதுக்கி விட்டது.

கடந்த காலங்களில் வியத்நாமிய மக்களின் தேசபக்தப் போராட்டத்தினுக்கு மறைமுகமாகக் குழிபறித்து வந்த சீனத் தலைவர்கள் 1969-1973 காலப்பகுதியில், குறிப்பாக, 1971 லிருந்து அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுடன் பகிரங்கமாகவே சோரம் போகத் தலைப்பட்டனர்; வியத்நாமிய மக்களின் புதிய தாக்குதல்களிலிருந்து அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களைப்பாதுகாக்க முயன்ற சீனத்தலைவர்கள் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளில் வியத்நாம் துருப்புச் சீட்டினையே பயன்படுத்தி வந்தனர். வியத்நாமினைத் தனிமைப்படுத்தும் நோக்குடன் இந்தோ—சீன மக்கள் மத்தியில் அதிருப்



நிலைமை உருவாக்க இரகசியமாக முயன்று வந்த சீனத் தலைவர்கள், குறிப்பிட்ட இக்கால கட்டத்தில் இந்த மூன்று இந்தோ சீன நாடுகளில் புரட்சிக்குக் குழிபறிப்பதற்கு பொல் பொட்—இயாங் ஸாரி கோஷ்டியினரைப் பயன்படுத்த ஆரம்பித்ததுடன் இந்தோ—சீன தீபகற்பத்தின் மீதான சீனாவின் செல்வாக்கினை நிலைநிறுத்தவும், தென்கிழக்காசியாவில் தனது விஸ்தரிப்புவாத முயற்சிகளை சாத்தியப்படுத்தவுமான நோக்குடன், வியத்நாமுக்கு எதிரான தாக்குதல்களுக்கு ஏற்றதொரு உந்து தளமாகக் கம்போடியாவினை மாற்றியமைக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர்.

இவ்வாறுதான், தாம் வியத்நாமிய, லாவோஸ், கம்போடிய மக்களின் துரோகிகள் என்ற சுயரூபத்தினை சீனத் தலைவர்கள் இனங்காட்டிக் கொண்டனர்.

## 1973-1975 காலகட்டம்: தென்வியத்நாமினைப் பூரணமாக விமோசனப்படுத்தும் வியத்நாமிய மக்களின் பிரயத்தனங்களுக்கு முட்டுக் கட்டையிடுதல்

பாரிஸ் உடன்படிக்கைகளுக்கு அமைய தென்வியத்நாமிலிருந்து தனது துருப்புக்களனைத்தையும் அமெரிக்கா வாபஸ்பெற வேண்டும்; வியத்நாமிய மக்களின் அடிப்படைத் தேசிய உரிமைகளை அங்கீகரித்தாக வேண்டும்; தென்வியத்நாமில் இரு கட்டுப்பாட்டு மண்டலங்கள், இரு நிர்வாகங்கள், மூன்று அரசியல் சக்திகள் ஆகியன இருப்பதையும் சம்பந்தப்பட்ட தரப்புகள் தென் வியத்நாமில் முக்கூட்டு அரசாங்கம் அமைப்பதையும் அங்கீகரித்தாகவேண்டும். சுயாதீனத்துக்கும், சுயாதிபத்தியத்துக்குமாக வியத்நாமிய மக்களின் வீறுமிக்க போராட்டத்தின் அரசியல் மார்க்கத்தில் இது ஒரு வெற்றியாகும். இது வியத்நாமுடன் ஒருமைப்பட்டு நின்ற உலகமக்களின் பேரியக்கத்துக்கும் கிடைத்த வெற்றியுமாகும். அதே வேளையில், இது ஷஸ்காஸ் கூட்டுப் பிரகடனத்தின் அடிப்படையில் வியத்நாமிய மக்களின் முதுகுக்குப் பின்னால் நிக்ஸன் நிர்வாகமும் சீனத் தலைவர்களும் செய்து கொள்ள முயன்ற கடைகெட்ட சமரசப் பிரயத்தனங்களுக்குக் கிடைத்த தோல்வியுமாகும்.

பாரிஸ் உடன்படிக்கைகள் கண்டிப்பாக, அமுல்படுத்த வேண்டுமென்பதும், அமெரிக்காவும், தியூ ஆட்சியும் இதை யொட்டியே நடந்து கொள்ள வேண்டு மென்பதுமே வியத்நாம் மக்கள், ஜனநாயகக் குடியரசினதும் தென் வியத்நாம் இடைக்கால புரட்சி அரசாங்கத்தினதும் இடையறாத கொள்கையாகவும், கோரிக்கையாகவுமிருந்துவந்தது.

ஆனால், அமெரிக்காவும் தியூ ஆட்சியும் இவ்வுடன்படிக்கைகளின் அமுலாக்கத்தினுக்குக் குழிபறிக்கவே முயன்று வந்தன. அமெரிக்க நலன்களுக்குத் துணை செய்யும் காரியங்களை மட்டுமே

அவை கவனித்து வந்தன. உடன்படிக்கைகளின் இதரஏற்பாடுகளைப் பொறுத்தளவில், ஆரம்பம் முதற்கொண்டே அவை அவற்றினை மீறி வந்தன உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பிக்கப் பட்டதுமே விமோசனப்படுத்தப்பட்ட குவாய் திரி மாகாணத்தின் வட பகுதியை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன். குவாவியத்துக்கு எதிராக போர் விமோனங்கள், டாங்கிகள் ஆகியவற்றின் துணையும் ஆயிரக்கணக்கான துருப்புக்களை அமெரிக்காவும் தியூ ஆட்சியும் சண்டையில் படுபடுத்தின. பின்னர் தென்வியத்நாம் முழுவதிலுமே ஆங்காங்கு தாக்குதல்களை நடத்த ஆரம்பித்த தியூயின் துருப்புக்கள் தென் வியத்நாம் இடைக்காலப் புரட்சி அரசாங்கத்தினது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பல விமோசனப்படுத்தப் பட்ட பகுதிகளை மீண்டும் அபகரித்துக் கொண்டன. தென் வியத்நாமில் இருகட்டுப்பாட்டு மண்டலங்களும் இரு நிர்வாகங்களும் இருக்கும் யதார்த்தத்தை மறுத்த அமெரிக்காவும், அதனது கைப்பொம்மை ஆட்சியும் தென் வியத்நாம் முழுவதிலும் நவ-கலோனியலிஸ ஆட்சியினைப் புனர் நிறுவுவதற்கும் வியத்நாமினைத் துண்டு போடும் பிரயத்தனங்களைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் முயன்றன.

வியத்நாம் பற்றிய பாரிஸ் உடன்படிக்கைகளை வரவேற்பது போல சீனத் தலைவர்கள் பாசாங்கு பண்ணினாலும், நிஜத்தில், அமெரிக்காவுடன் ஏற்படுத்திக் கொண்ட இரகஸிய உடன்பாட்டினை நடைமுறைப்படுத்திக் கொண்டு அதனுடன் மேலும் கூட்டுச் சேருவதற்கும் வியத்நாமினைப் பலஹீனப்படுத்தி அதனை அடிமைப்படுத்தவுமான நோக்கங்களுடன் பாரிஸ் உடன்படிக்கைகளுக்குக் குழிபறிப்பதற்கு அமெரிக்காவும் தியூ ஆட்சியும் போட்ட கபடத்திட்டங்களை முறியடிக்கவும்தென்வியத்நாமினைபூரணமான விமோசனப் படுத்தி நாட்டினை மீண்டும் ஐக்கியப்படுத்தவும்வியத்நாமிய மக்கள் நடத்திய போராட்டத்துக்கு முட்டுக்கட்டையிடுவதற்குத் தம்மாலான ஒவ்வொரு முயற்சிகளையும் மேற்கொண்டனர்.

### 1. அமெரிக்காவும், தியூ ஆட்சியும் பாரிஸ் உடன்படிக்கைகளுக்குக் குழிபறிப்புச் செய்யும் முயற்சிகளுக்கு எதிரான வியத்நாமிய மக்களின் போராட்டத்துக்கு முட்டுக்கட்டையிடுதல்—

1973 ல் பொதுச் செயலாளர் லீ துவானுடனும், பிரதமர் ஃபாம் வான் தொங்குடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது தலைவர் மா சே-துங் பின்வருமாறு கூறினார்.

**''தென் வியத்நாமில் அரையாண்டு காலத்துக்கோ அல்லது ஓராண்டு காலத்துக்கோ, அல்லது வேண்டுமாயின் ஈராண்டு காலத்துக்கோ யுத்த நடவடிக்கைகளை நிறுத்துவது அவசியமானதாகும்'' தென் வியத்நாமில் புரட்சியானது ''இரு கட்டங்களில் நிறைவேற்றப்பட வேண்டும் இவ்விரு கட்டப்பணிகளையும் ஒரு கட்டத்திலேயே நிறைவேற்ற நீங்கள் முயலுவீர்களேயானால் அதைப்பார்த்துக் கொண்டு அமெரிக்கா வாளாவிருக்காது நுகேயன் வான் தியூ ஆட்சியாளர் வசம் இன்னும் பல்லாயிரக்கணக்கான துருப்புக்கள் உள்ளன என்பது இங்குள்ள பிரச்னையாகும்''**



இது பற்றி, சீனத் பிரதமர் செள என்-லாய கூறியதாவது

**''ஐந்தாண்டு அல்லது பத்தாண்டு காலத்துக்கு வியத்நாமும் முழு இந்தோ சீனாவும் சற்று ஓய்ந்திருப்பது நன்மைபயக்கக் கூடியது. இந்த ஓய்வுக் காலகட்டாத்தில் வியத்நாமிய லாவோஸ், கம்போடிய மக்கள் சமாதான நடுநிலைக் கொள்கையினைப் பின்பற்ற வேண்டும்''**

தமது ''நல்லெண்ணத்தை'' வெளிப்படுத்தும் பொருட்டு. 1973ம் ஆண்டு வழங்கிய உதவிகளையொத்த உதவிகளை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு வியத்நாமுக்கு வழங்குவதாக சீனா வாக்குறுதியளித்தது. நிஜத்தில், சீனத் தலைவர்கள் ஏற்கனவே எல்லாவிதமான இராணுவ உதவிகளையும் நிறுத்தியிருந்தனர். பொருளாதார உதவியைப் பொறுத்தளவில் சீன உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டமையும் பின்னர் அமெரிக்கத் தாக்குதலால் சேதமடைந்தவையுமான தொழிலகங்களைப் புனரமைத்துத் தரும் பொறுப்பினை மட்டுமே சீனத்தலைவர்கள் ஒப்புக்கொண்டிருந்தனர், ஆனால் இப்புனரமைப்பு வேலைகளைக் கூடச் சில இடங்களில் அவர்கள் தாமதப்படுத்தினர். சில இடங்களில் அவர்கள் ஒரு துரும்பைத்தானும் அசைக்கவில்லை.

விமோசனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் சைகோன் நிர்வாகம் நில அபகரிப்பு முஸ்தீபுகளை மேற்கொண்டிருந்த தருணத்தில் கூட இது தொடர்பாக வியத்நாம் எதுவித நடவடிக்கைகளையும் மேற் கொள்ளுவதைச் சீன ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.

சைகோன் துருப்புக்களின் நில அபகரிப்பு நடவடிக்கைகள் அதிகரித்து வந்த தசையில், 1973 அக்டோபரில், தென்வியத்நாம் விமோசன ஆயுதப்படைகளின் உயர் பீடமானது எதிர்த்தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டது. ஒரு மாதத்தின் பின்னர், கீஸிங்கர் பீகிங்குக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வேளையில், இருதரப்புகளும் வெளியிட்ட அறிக்கையொன்று பின்வருமாறு கூறியது. ''இன்றைய மிக நெருக்கடியான கட்டத்தில் பரஸ்பரம் ஆர்வமுள்ள விஷயங்கள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் பொருட்டு சீனாவும் அமெரிக்காவும் அடிக்கடி பேச்சுவார்த்தைகளை நடந்துவது அத்தியாவசிமானதககும். ''நிஜத்தில் தென் வியத்நாமிய ஆயுதப்படைகளின் போராட்டத்துக்கு முட்டுக்கட்டையிடுவதே அமெரிக்காவினதும் சீன ஆட்சியாளர்களினதும் பொதுப்பட்ட ஆர்வமுள்ள விஷயங்களாக இருந்தன.

**''நீங்கள் வியத்நாமில் தோல்வியடைவதற்கு இடங்கொடுக்காதீர்கள், தென் கிழக்காசியாவிலிருந்து உங்கள் துருப்புக்களை வாபஸ் பெறுதீர்கள்''**[1] என்ற ரீதியில் அமெரிக்காவுக்குசீனத் தலைவர்கள் அறிவுரை கூட வழங்கினார்கள்.

இதில், மேலும் விவஸ்தை கெட்ட சங்கதி என்னவெனில், சைகோன் கைப்பொம்மை ஆட்சியின் பல ஜெனரல்களையும் அதி

---

1. ஏ.க்ஷய்க், கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிட்டர் ஜூன் 20,1979

காரிகளையும் தம்மோடு ஒத்துழைக்க வசப்படுத்தும் முயற்சிகளிலும்
சீனத் தலைவர்கள் இறங்கியமைதான் தென் வியத்நாமிய மக்களின்
கிளர்ச்சிக்கு எதிரான தாக்குதல்களைப் பீகிங்கின் ஆதரவுடன்
தொடர்ந்தும் நடத்துமாறு கோரும் செய்தியுடன் ஒரு தூது
வரைக் கூட சைகோன் ஆட்சி முதல்வர் ஜெனரல் துலாங்வான்
மின்னடம் சீனத்தலைவர்கள் அனுப்பியிருந்தார்கள்.

## 2. வியத்நாமிய பிராந்தியத்தினுள் ஊடுருவலும், எல்லைப் புறத்தில் பதட்டநிலையை உருவாக்குதலும்

1873ம் ஆண்டு முதல், தென்வியத்நாமினை முழுமையாக
விமோசனப்படுத்தும் பிரயத்தனங்களைப் பலஹீனப்படுத்
தும் நோக்குடன், வட எல்லைப்புற மாகாணங்களில் பிராந்திய
ஊடுருவல் மற்றும் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளைச் சீன அதி
காரிகள் தீவிரப்படுத்தினர்.

மறுபுறத்தில், தனது பொருளாதாரப் புனருத்தாரணப்
பணிகளையும் மற்றும் அபிவிருத்தி நிர்மாணப்பணிகளையும் துரி
தப்படுத்துவதற்காக வியத்நாம் அதனது தேசியவளங்களை கண்
டறிந்து, பயன்படுத்த மேற்கொண்ட முயற்சிகளுக்கும் அவர்
கள் முட்டுக்கட்டையிட்டனர். 1973 டிசம்பர் 26ல பக்போ
(தொன்கின்) வளைகுடாப் பிரதேசத்தில் சீன—வியத்நாமிய எல்
லையை உத்தியோகபூர்வமாக நிர்ணயிப்பது பற்றிய பேச்சுவார்
த்தைகள் நடாத்தப்படவேண்டும் என வியத்நாமியத் தரப்பு
பிரேரித்தது. 1964, ஜனவரி 18ல் தான் இந்தப் பிரேரணையை
ஏற்றுக் கொண்டதாகவும் பக்போ பிரதேசத்தில் தம்மால் குறிக்
கப்படும் 20,000 சதுர கிலோமீட்டர் வியத்நாம் எதுவித
வள ஆராய்ச்சி வேலைகளைச் செய்யக்கூடாது என்றும் சீனத்
தரப்பு பதில் அனுப்பியது. ''பக் போ வளைகுடாப் பிரதேசத்தில்
ஆய்வு வேலைகளை நடாத்த எந்த ஒரு மூன்றும் நாட்டினையும் அனு
மதிக்கக் கூடாது. இது இரு நாடுகளினதும பந்தோபஸ்தினுக்கும
பொருளாதார வளர்ச்சிக்கும் ஹானியை ஏற்படுத்துவதாக இருககும''
என்று சீனத் தரப்பு கோரியிருந்தது. ஆனால், சீனாவின் கபடத்
திட்டங்களை மூடிமறைப்பதற்கான ஒரு போர்வையாகவே இந்த
கோரிக்கை முனவைக்கப்பட்டது. இதனால் தான், 1974 ஆகஸ்
டிலிருந்து நவம்பர் வரை பக் போ பிரதேசத்தில் சீன—வியத்
நாமிய எல்லையை நிர்ணயிப்பது தொடர்பாக நடைபெற்ற
பேச்சுவார்த்தைகள் எந்த வித நல்ல பெறுபேறுகளையும் தராது
இழுபறி நிலையிலிருந்தன. இதே விவகாரம் தொடர்பாக
மீணடும் 1977 அக்டோபர் 7ந் திகதி ஆரம்பிக்கப்பட்ட பேச்
சுவார்த்தைகளும் சீனாவின் பேரரசுவாதவெறிப் போக்கினால்
இடை நிறுத்தப்பட்டன. இந்த 'இழுபறி' நிலவரத்தைப் பயன்
படுத்தி சீனத்தரப்பு வியத்நாமிய பிராந்தியங்களை அபகரித்துக்
கைப்பற்றிக் கொண்டும் சீன வியத்நாம் எல்லைப்புற பிரதே
சங்களில் தொடர்ந்து பதட்ட நிலையைப் பேணியும் வந்தது.

1974 ஜனவரி 19ல், பக் போ வளைகுடாப் பிரச்னைபற்
றிப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குச் சீனத் தரப்பு இணக்



ங்கள் தெரிவித்த தினத்துக்கு மறுதினம், நீண்ட நெடுங்கால
மாக வியத்நாமிய பிராந்தியத்தின் ஒரு பகுதியாக இருந்து
வந்ததும், அவ்வேளையில் சைகோன் துருப்புக்கள் வசமிருந்த
துமான ஹொவாங்ஸா (பரஸல்ஸ்) தீவுக் கூட்டத்தைத்தாக்கவும்,
கைப்பற்றவுமென சீன ஆட்சியாளர் தமது கடற்படையையும்,
விமானப்படையையும் பயன்படுத்தினர். பரஸல்ஷ் தீவுக் கூட்
டத்தை கைப்பற்றிக் கொண்டதைப்போல ஒரு தற்பாதுகாப்பு
நடவடிக்கையல்ல; அது கடற்படு பிரதேசத்தில் வியத்நாமினைச்
சீனாவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதையும் கிழக்கத்
தைய கடல் (தென் சீனக் கடல்) பிரதேசத்தைப் படிப்படியாக
கைப்பற்றிக் கொள்ளுவதையும் நோக்காகக் கொண்ட ஒரு அப்
பட்டமான ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும். இந்த திட்டமிடப்
பட்ட நடவடிக்கைக்கு அமெரிக்காவின் அங்கீகாரமும் கிடைத்
தது. இதனால் தான், இக்கட்டத்தில் நுகேயன் வான் தியூ
ஆட்சி உதவி கோரி விடுத்த வேண்டுகோளை சைகோனிலுள்ள
அமெரிக்க ஸ்தானிகர் ஜி. மார்ட்டின் நிராகரித்ததுடன், பர
ஸல் தீவுப் பிரதேசத்தை அண்மிக்க வேண்டாமென பஸிபிக்
சமுத்திரத்தில் நிலைகொண்டிருந்த அமெரிக்க 7வது கடற்படைக்
கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

1975ல் சீன உதவி-பிரதமர் டெங் ஸியாஓ-பிங் வியத்நாமிய
தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் போது, ஹோ
வாஸ் ஸா, துருவோங் ஸா ஆகிய தீவுக் கூட்டங்கள் மீது வியத்
நாமும் சீனாவும் பாத்தியதைக் கோரிக்கைகளை முன்வைத்திருப்ப
தால், இப் பிரச்னையை தீர்ப்பது குறித்துப் பேச்சுவார்த்தைகள்
நடாத்தப்படுவது அவசியம் என்பதை ஒப்புக்கொண்டார். இது
ஹோவங் ஸாவினுள் சீனா மேற்கொண்ட ஊடுருவல் சர்வதேச
சட்டவிதிகளை மீறுகின்ற ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்ற
உண்மையினையே ஆதாரப்படுத்துகிறது.[1]

## 3. வியத்நாம் மீது தாக்குதல் தொடுப்பதற்கான ஒரு உந்து தளமாக கம்போடியாவை மாற்றுதல்

வியத்நாம் பற்றிய பாரிஸ் உடன்படிக்கைகள் கைச்சாத்தான
பின்னர் பீகிங்கினது உத்தரவின் பேரில் பொல் பொட்-இயாங்
ஸாரி சோஷடியானது ஒரு புறத்தில் வியத்நாமிய யோசனைகளை
வரவேற்கிறதும் மறுபுறுத்தில், அவற்றினை ஆட்சேபிக்கிறதுமான
இரட்டை வேடக் கொள்கையைப் பின்பற்ற ஆரம்பித்தது.

---

1) ஹோமவாங் ஸா, துருவாங் ஸா தீவுக் கூட்டங்கள் முதலான
எல்லைப் பிரச்னைகள் பற்றிய மேலும் விபாங்களுக்கு 1979 மார்ச்
15ல் வெளியிடப்பட்ட அறிக்கையினையும் 1979 ஆகஸ்ட் 7லும்,
1979 செப்டம்பர் 27லும் வியத்நாம் சோஷலிஸக் குடியரசின்
வெளிநாட்டமைச்சு விடுத்த அறிக்கைகளையும், 1679 செப்டம்பர்
28ல் வெளியிடப்பட்ட ''வெள்ளை புத்தக''த்தையும் படிக்கவும்.

வியத்நாமின் ஆதரவினைப் பெறுவதற்காக அதனுடன் ''நட்புணர்வுள்ளவர்களாக'' ''ஐக்கியப்பட்டவர்களாக'' தம்மை அவர்கள் காட்டிக் கொண்டனர். சீன-அமெரிக்க இரகஸிய ஏற்பாட்டிற்கு அமைய சீன அதிகாரிகள் மூன்று இந்தோ-சீன நாடுகளுக்குமான இராணுவ உதவியை நிறுத்திக் கொண்டனர். மேலும் போராயுதங்களை வழங்குமாறு பொல் பொட்-இயாங்ஸாரி கோஷ்டி விடுத்த வேண்டுகோளை அவர்கள் நிராகரித்தனர். இதற்குப் பதிலாக கம்போடியாவுக்கு ஆயுதங்களைக் கடனாக வழங்குமறும்' பின்னர் இதற்கான நஷ்ட ஈட்டினைத் தருவதாகவும் வியத்நாமினைக் கேட்டுக் கொண்டனர். இது பீகிங் பின்பற்றிய ஒரு கபடத் தந்திரமாகும்: கம்போடிய கோரிக்கையை எவர் மூலமாவது திருப்தி செய்தும் அமெரிக்காவுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொண்டும் வருகின்ற அதே வேளையில் 1975ல் வசந்த காலத்தில் வியத்நாம் இறுதித் தாக்குதலுக்குத் தயாராகிக் கொண்டிருந்த சோதனை மிக்க காலகட்டத்தில் அதற்கு மேலும் பல கஸ்டங்களையும் உருவாக்குவதே பீகிங்கின் நோக்கமாக இருந்தது.

மறுபுறத்தில் பொல்பொட்-இயாங்ஸாரி கோஷ்டி வியத்நாமினை எதிர்ப்பதற்குப் பெரும் பிரயத்தனங்களை மேற் கொண்டது பாரிஸ் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதன் மூலம் வியத்நாம் இரண்டாவது தடவையாகவும் கம்போடியாவுக்குத் துரோகமிழைத்து விட்டது என்ற ரீதியில் அது அவதூறு பிரசாரத்தினைக் கட்டவிழ்த்து விட்டது வியத்நாம்-விரோத உணர்வுகளை நாட்டு மக்கள் மத்தியில் உருவாக்குவதும் தனது ஆட்சிப்போக்குடன், ஒத்து வராத கம்போடியர்களைக் களையெடுப்பதுமே இப் பிரசாரத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது பல தடவைகளில் பொல் பொட்-இயாங்ஸாரி கோஸ்டியினர் கம்போடியாவிலிருந்த தென் வியத்நாம் விமோசன இராணுவத்தின் முகாம்களையும், ஆயுதப் பாசறைகளையும் ஆஸ்பத்திரிகளையும் தாக்கியும் சூறையாடியும் வந்தனர்.

உண்மையான புரட்சிகர ஊழியர்களைக் கொன்றொழிப்பது உட்பட பல கடைகெட்ட வழிமார்க்கங்களைப் பின்பற்றிய பொட்-இயாங்ஸாரி கோஸ்டியினர் கட்சியினுள் முக்கிய பல நிலைகளை முடிந்தளவுக்கு தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவும் கம்போடிய கம்யூனிஸ்ட் கட்சியினை பீக்கிங்கின் மீது தங்கியிருக்கும் ஒரு கட்சியாகமாற்றும் பொருட்டு கட்சியினுள் அனைத்து அதிகாரங்களையும் தமது கைகளில் வைத்துக் கொள்ளவும் முயன்றனர்.

பொல்பொட்-இயாங்ஸாரி கோஷ்டியினது ஆட்சியின் கீழிருந்த கம்போடியாவின்மீதான தமது பிடியை இறுக்கிக் கொள்ளுவதிலும் தென் வியத்நாம் பூரணமாக விமோசனப்படுத்தப்பட்ட பின்னர் தென்-மேற்கு எல்லையிலிருந்து வியத்நாமினைத் தாக்குவதற்கான ஒரு உந்துதளமாக கம்போடியாவை மாற்றுவதிலும் சீனத் தலைவர்கள் ஒரு படி முன்னேறியிருந்தது தெளிவாகவே தெரிந்தது.

தமது நாடு முழுவதையும் விமோசனப்படுத்துவதற்கு வியத்நாமிய மக்கள் நடாத்திய போராட்டத்துக்கு முட்டுக்கட்டையிட



சீனத் தலைவர்கள் தம்மாலானதனைத்தையுஞ் செய்த பொழுதிலும் பாரிஸ் உடன்படிக்கைகளை அமெரிக்காவும் கியூ ஆட்சியும் மீறுவதற்கு எதிராக வியத்நாமிய மக்கள் இராணுவ, அரசியல், ராஜதந்திர ரீதிகளில் நடாத்திய விட்டுக் கொடுக்காத போராட்டம் இறுதியில் வெற்றி வாகை சூடியது. 1975 வசந்த காலத்தில் மேற் கொள்ளப்பட்ட இறுதித்தாக்குதலில் கிடைத்த வெற்றியுடன் வியத்நாமிய மக்கள் நுகேயன்வான் தியூவின் நிர்வாகத்தை இல்லாதொழித்ததுடன் தென்வியத்நாமினை பூரணமாக விமோசனப்படுத்தி தமது நாட்டினை மீண்டும் ஐக்கியப்படுத்திக் கொண்டனர்.

★

முன்னர், பிரெஞ்சு கலோனியலிஸ்டுகளுக்கு எதிரான எமது போராட்டம் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த தருணத்தில், சீன ஆட்சியாளர்கள் தலையீடு செய்து தமக்கு இசைத்த வகையிலான ஒரு தீர்வினை வியத்நாமிய, லாவோஸ், கம்போடிய மக்கள் மீது திணிக்க முயன்றனர்.

ஆனால், அமெரிக்க ஆக்கிரமிப்பினை எதிர்த்த எமது விடுதலைப் போராட்டத்தில், அவர்கள் ஆரம்பம் முதற்கொண்டே தலையிடத் தொடங்கினர்; அமெரிக்கா தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தை வியத்நாமின் எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கவும், வட வியத்நாம் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடாத்தவுமான சூழ்நிலைமைகளை உருவாக்கினர்; வியத்நாமுக்கான ''தீவிர ஆதரவு'', ''முழுமையான புரட்சி'' ஆசிய சுலோகங்களை இடையறாது கோஷித்து வந்த அதே வேளையில், அமெரிக்காவுடனான தமது பேரங்களில் வியத்நாமிய பிரச்னையை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி வந்தனர்.

**வியத்நாமிய மக்களுக்குச் சீனத் தலைவர்கள் துரோக மிழைத்தது இது இரண்டாவது தடவையாகும்.**

அத்தியாயம் 4

# விடுதலை பெற்ற, ஐக்கியப்பட்ட வியத்நாமின் பாலான சீனக் கொள்கை

(1975 மே முதல் இன்று வரை)

## I. வியத்நாமில் அமெரிக்க பெற்ற தோல்விக்குப்பின் சீனா

வியத்நாமில் அமெரிக்கா தழுவிக்கொண்ட தோல்வி உலக நிலவரத்தின் மீது பிரத்தியட்சமான பாதிப்பினை ஏற்படுத்தியது என்பதை உலக மக்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஆகஸ்ட் புரட்சியிலும், பிரெஞ்சு கலோனியலிஸ்டுகளுக்கு எதிரான விடுதலை யுத்தத்திலும் வியத்நாமிய மக்கள் பெற்ற வெற்றி மாமூல்—பாணி கலோனியலிஸத்தின் தகர்வுக்கு ஒரு ஆரம்பமாக அமைந்தது எனில், அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான விடுதலைப் போரில் அவர்கள் பெற்ற வெற்றி நவ-காலோனியலிஸத்தின் வங்குரோத்துத்தனத்தை உலகுக்கு ருஜுபித்துள்ளது எனலாம். இன்று புரட்சிகர சக்திகள் வளர்ச்சி பெற்றுள்ளன; அவற்றுக்குச் சாதகமான சூழ்நிலைமைகள் நிலவுகின்றன. உலகின் எப்பகுதியிலும் அச்சமின்றி சர்வதேச பொலிஸ்காரன் என்ற பாத்திரத்தை வகிக்கும் ஆற்றல் இன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு இல்லை. எந்த ஒரு சோஷலிஸ நாட்டின் ஒரு அங்குல நிலத்தைக் கைப்பற்றிக் கொள்ளவோ அல்லது தேசிய விமோசன இயக்கத்தைத் திசை திருப்பவோ சோஷலிஸத்தை நோக்கிய இதர நாடுகளின் பயணத்தைத் தடுத்து நிறுத்தவோ கூடிய நிலையில் இன்று அது இல்லை. பன்முகப்பட்ட மீட்சி பெறமுடியாத நெருக்கடிச் சக்தியினுள் ஏகாதிபத்தியம் மேலும் ஆழ்ந்து அமிழ்ந்து வருகின்றது உலகின் முப்பெரும் புரட்சிப் பேரலைகளினதும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றில் தனது கோட்டைகள் எனக் கருதிய அரண்களிலிருந்து கூட வரக்கூடிய உறுதிமிக்க தாக்குதல்களுக்கு முகம் கொடுத்த நிலையிலுள்ள ஏகாதிபத்தியம் பல இடர்பாடுகளுக்குள்ளாகியுள்ளது.



அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் வியத்நாமுக்கு பத்துலட்சம் வீரர்களைக் கொண்ட கைப்பொம்மை ஆட்சிக்கு துணை செய்யவென தனது 600,000 துருப்புக்களை அனுப்பியுங்கூட, வியத்நாமிய மண்ணில் 7,850,000 தொன்கள் குண்டுகளை மாரியாய்ப் பொழிந்தும் கூட, 352,0000 லட்சம் டாலர்களைச் செலவிட்டும் கூட, வியத்நாமிய மக்களை அடிபணிய வைக்க முடியவில்லை. அமெரிக்க வரலாற்றில் அது பெற்ற மாபெரும தோல்வி இது; அமெரிக்க வாழ்வின் எல்லாத் துறைகளையும் இது வெகுவாகப் பாதித்தது. இதனால் தான், வியத்நாமில் பெற்ற தோல்விக்குப் பின்னர், தமது உலகளாவிய உபாய மார்க்கத்தை—குறிப்பாக ஆசியாவில் விசேஷமாக தென்கிழக்காசியவில் புதிய சூழ் நிலைமைகளுக்கனமய மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது. சோஷலிஸ அமைப்பிலும், உலகப் புரட்சிகர இயக்கத்திலும் பிளவுகளை ஏற்படுத்தவும், குழிபறிப்புகளைச் செய்யவுமான நோக்குடன் இன்று அவர்கள் இதர பிற்போக்குவாதிகளுடன், குறிப்பாக, சர்வதேச கம்யூனிஸ்ட், தொழிலாகள் இயக்கத்தின் துரோகிகளுடன், முக்கியமாக, பீகிங் பிற்போக்குவாதக் கோஷ்டியுடன் கூட்டுச் சேர்ந்து இயங்குவதைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

சீன ஆட்சியாளரைப் பொறுத்தளவில், அமெரிக்காவை எதிர்த்த வியத்நாமிய மக்களினது போராட்டத்தின் போது தமது தேசிய நலன்களைக்கருத்திற் கொண்டே வியத்நாமுக்கு அவர்கள் உதவி வழங்கினர், ஆனல், வியத்நாம் அமெரிக்காவைத் தோற்கடித்து, பலம்மிக்க நாடாக மலருவதைத் தடை செய்ய அவர்கள் முயன்றதுக்கும் அவர்களது தேசிய நலன்களே காரணம் என்பதும் உண்மையாகும்.

இரு வேறுகத் துண்டாடப்பட்ட இரண்டு வியத்நாம்களை தொடர்ந்து பேணுவதே சீன ஆட்சியாளரின் பேராசையாக இருந்தது. ஆனல், ''அமெரிக்கர்கள் வெளியேறும் வரை அவர்களது கைப்பொம்மைகள் கவிழ்க்கப்படும் வரை'' வியத்நாமிய மக்கள் வீறுடன் போராடி தென் வியத்நாமினை விமோசனப்படுத்தியதுடன் நாட்டினை மீண்டும் ஐக்கியப்படுத்தினர்.

அமெரிக்கர்களுடனை தமது பேரங்களுக்காக சீன ஆட்சியாளர் வியத்நாமிய மக்களின் பச்சை ரத்தத்தைப் பயன்படுத்தினர். ஆனல் அமெரிக்காவுடன் அவர்கள் சோரம் போனதால் வியத்நாமிய மக்கள் முழுவெற்றி பெறுவதனையோ, வியத்நாம் சோஷலிஸக் குடியரசுக்கான அடித்தளத்தை அமைப்பதையோ தடுத்து நிறுத்த முடியவில்லை.

வியத்நாமுக்கும் சோவியத் யூனியன் முதலான சோஷலிஸ நாடுகளுக்கு மிடையில் பிளவுகளை ஏற்படுத்த சீன ஆட்சியாளர் முயன்றனர், ஆனல் தமது சுயாதீனமான கொள்கையை உறுதி

யாகப் பற்றிப்பிடித்த வியத்நாமிய மக்கள் சோவியத் யூனியனுடனும் மற்றும் சகோதார சோஷலிஸ நாடுகளுடனுமான ஒருமைப்பாட்டினை மேலும் வலுப்படுத்திக் கொண்டனர்.

சீன ஆட்சியாளர்களுக்கும் நிக்ஸனுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையுஞ் சரி, அவர்களின் கபடத்திட்டங்களுஞ் சரி சாத்தியமாகிவிடவில்லை. ஒரு உண்மையான மார்க்ஸிய—லெனினிய வழிப்பட்ட சுயாதீனமான மார்க்கத்தைப் பின்பற்றுகின்றதும். உலக அரங்கில் பெரும் அரசியல் அந்தஸ்தினைப் பெற்றுள்ளதுமான ஐக்கியப்பட்ட, சோஷலிஸட் வியத்நாமானது இந்தோ சீனுவிலும் தென்கிழக்காசியாவிலும் சீன ஆட்சியாளர் நடைமுறைப்படுத்த முயலும் விஸ்தரிப்புவாத மேலாதிக்கவாதத் திட்டங்களுக்குப் பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது. வியத்நாம் மக்களின் வரலாற்று பூர்வமான பெரு வெற்றி அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு மட்டுமன்றி பீகிங் விஸ்தரிப்புவாதிகளுக்கும் கிடைத்த பெருந் தோல்வியாகும்.

மாஓ சே—துங்கினது ஆட்சியின்கடைசி ஆண்டுகளின் போதும் அவரது மரணத்தின் பின்னரும், அதிகாரத்தைக் கைப்பற்றும் பேராசைப் போட்டியினால் சீனுவில் தீவிர உள் போராட்டங்களும் களையெடுப்புகளும் நடைபெற்றன ''மாபெரும் பாய்ச்சல்'' ''மாபெரும் கலாசாரப் புரட்சி'' ஆகியவற்றின் பெறுபேருக கடந்த இருபதாண்டு காலமாக சீரழித்த, பின்னடைந்த நிலையிலுள்ள சீனுவின் பொருளாதார, அரசியல் நிலவரத்தை துரிதமாக ஸ்திரப்படுத்தவும், சீர்ப்படுத்தவும் வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. இதனால் தான் உள்நாட்டில் ''நான்கு நவீனமயத் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக வேறுபட்ட கோஷ்டிகளை ஓர் அணியில் சேர்க்கவும் சீன மக்களை ஒன்று திரட்டவும் அவர்கள் முயன்று வருகின்றனர். ஏகாதிபத்தியத்தின் மூளைப்பான பொருளாதார, அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி தனது உலகளாவிய உபாய மார்க்கத்தை மாற்றியமைத்துக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள ஏகாதிபத்தியத்துடன் நெருங்கி அணுகி ஆதாயம் பெறவும் தமது ''நான்கு நவீனமயத் திட்டங்களுக்கான மூலதனத்தையும் தொழில் நுட்ப நிபுணத்துவத்தையும் மேற்று நாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளவும் சோவியத் யூனியனுக்கும் உலகப் புரட்சிகர இயக்கத்தினுக்கு எதிரான தமது பிரசார இயக்கத்தினைத் தீவிரப்படுத்தவும் சீனத் தலைவர்கள் தலைப்பட்டுள்ளனர். தமது எதிர்—புரட்சி தந்திரோபாயத்தையும் தமது விஸ்தரிப்புவாத பேரினவாத மேலாதிக்கவாதக் கொள்கைகளையும் மூடிமறைக்கும் போர்வையாகவே அவர்கள் ''மேலாதிக்க எதிர்ப்பு'' பதாகையை உயர்த்தியுள்ளனர்.

வியத்நாமிய மக்கள் ஈட்டிய வெற்றிகளையிட்டு சீனத்தலைவர்கள் அழுக்காறு கொண்டுள்ளனர். இதனால்தான் வியத்நாமிய மக்கள் பூரண வெற்றினை ஈட்டியதன் பின்னர் வியத்நாம் சோஷலிஸக் குடியரசினைப் பொறுத்து ஒருவிரோதப்பாங்குள்ள கொள்கையினை சீனத் தலைவர்கள் பகிரங்கமாகவும் தீவிரமாகவும் பின்பற்றி வருகின்றனர்.



## II தீவிரமான வியத்நாம் விரோத நடவடிக்கைகள்

### 1. தென் வியத்நாமின் மேற்குப் புறத்தில் பொல் பொட்—இயாங் ஸாரி கோஷ்டி மூலமாக எல்லை யுத்தமொன்றினைத் தொடுத்தல்.

1960-ம் ஆண்டுகளின் நடுப்பகுதிகளிலிருந்து, இந்தோசீன மக்களின் ஐக்கிய முன்னணிக்குக் குழிபறிப்பது, வியத்நாமிய மக்களின் விடுதலைப் போராட்டத்தினைப் பலஹீனப்படுத்துவது, அமெரிக்கர்களுடனான பேரத்தில் அனுகூலமான ஸ்தானத்தை வகிப்பது இந்தோ சீனுவிலும் தென் கிழக்காசியாவிலும் சீன விஸ்தரிப்புவாத நடவடிக்கைகளுக்கான ஒரு உந்துதளமாகக் கம்போடியாவினை மாற்றியமைப்பது முதலான நோக்கங்களுடன் சீனத் தலைவர்கள் கம்போடியப் பிரச்னையை அணுகியும் கையாண்டும் வந்தனர். 1675 ஏப்ரல் 17ல் அமெரிக் கஅடிவருடிகளான லொன் நொல் கோஷ்டியினரது ஆட்சியிலிருந்து கம்போடியா விமோசனப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சீனத்தலைவர்கள் கம்போடிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப்பீடத்தினை கைப்பற்றுவதற்கும், ஸிஹானூக்கையும் அவரது ஆதரவாளர்களையும் ஒதுக்கித் தள்ளுவதற்கும், மனித வரலாறு முன்னெப் போதும் கண்டிராத வாறுன ஒரு இனச் சங்கார பாசிஸ்ட் ஆட்சியினை அமைப்பதற்கும் தமது கையாட்களான பொல்பொட்—இயாங் ஸாரி கோஷ்டியினருக்கு உதவி செய்தனர். இந்த ஆட்சியின் வாயிலாக கம்போடியா முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவும், தென் மேற்கு புறத்திலிருந்து வியத்நாம்மீது தாக்குதல் தொடுப்பதற்கான ஒரு இராணுவத்தளமாகக் கம்போடியாவினை மாற்றுவதற்கும் அவர்கள் முயன்றனர்.

புதிய ஆட்சியாளருக்கு பணத்தையும், ஆயுதங்களையும், இதர இராணுவத் தளவாடங்களையும் வாரியிறைத்த சீனத் தலைவர்கள், பல இராணுவப் பிரிவுகளை அமைக்கும் பொருட்டு ஆயிரக்கணக்கான சீன இராணுவ ஆலோசகர்களையும் கம்போடியாவுக்கு அனுப்பி வைத்தனர், அங்கு பல கடற்படை விமானப்படைத் தளங்களை நிர்மாணித்தனர்.

பீகிங்கினது கணிப்பின் பேரில் பென் பிற்போக்கு ஆளும் வட்டாரம் வியத்நாமுக்கு எதிரான பாரிய அவாதூறுப் பிரசாரத்தில் இறங்கியது. வியத்நாம் ''கம்போடியாமீது தாக்குதல் தொடுத்தது'' ''வியத்நாமினது கட்டுப்பாட்டின் கீழான ஒரு இந்தோ:சீன சமஷ்டியில் இணையுமாறு கம்போடியாவை வியத்நாம் நிர்ப்பந்தித்தது'' என்ற சுலோகங்களை முன்வைத்து வியத்நாமுக்கு எதிராக யுத்தம் தொடுக்கப்பட வேண்டுமென்று அது வலியுறுத்தியது. வியத்நாமிய—கம்போடிய, எல்லைப் பிரதேசத்தில் மேலும் பதட்ட நிலையை அதிகரிக்கும் நோக்குடன் இருநாடுகளுக்குமிடையில் நடைபெற்றஎல்லைப் பிரச்னைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்குக் குழிபறித்தது: 1975 ஏப்ரல் முதல் நிலை அபகரிப்பு நடவடிக்கைகளில் தனது துருப்புக்களை ஈடுபடுத்தியதுடன், வியத்நாமிய பிராந்

தியங்களில் பல இடங்கள் மீது தாக்குதல்களையும் அது நடாத்தியது. எல்லைப் புறப்பிரதேசத்தில் பல ஆத்திரமூட்டல்களை மேற்கொண்ட அவர்கள் எல்லைப்புறத்திலுள்ள பல வியத்நாமிய கிராமங்கள் காவல் நிலையங்கள் முதலானவற்றின் மீது தாக்குதல்களை நடத்தியதன்மூலம் வியத்நாமின்பொருளாதாரப் புனருத்தாரண, அபிவிருத்தி முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையிட்டனர். பின்னர் 1977 ஏப்ரலில், 1,000கிலோ மீட்டருக்கும் அதிகமான நீளமுள்ள எல்லையோர ஸ்தலங்களிலிருந்து வியத்நாமுக்கு எதிரான முழு அளவிலான யுத்தத்தினைத் தொடுக்க ஆரம்பித்தனர். டாங்கிகள் முதலான ஆயுத தளவாடங்களின் துணையோடு பல்லாயிரக் கணக்கான துருப்புக்கள் இந்தப் பாரிய அளவிலான தாக்குதலினை நடாத்தின. இத்தாக்குதலின் போது சில சமயங்களில் 30கிலோமீட்டர் தூரத்துக்கு வியத்நாமிய பிராந்தியத்தினுள் ஊடுருவிய கம்போடியத் துருப்புக்கள் பல சிவிலியன்களைக் கொன்று குவித்தன. வீடுகளையும் வயல்களையும் நாசஞ் செய்தன இந்த ரீதியில் வியத்நாமிய மக்களுக்கு எதிராக மன்னிக்கப்பட முடியாத எண்ணிறந்த கொடுமைகளை அவை செய்தன.

## 2. வியத்நாமுச்கு உள்ளிருந்தே குழிபறிப்பதில் ஹீவா (சீன) வம்சாவழிப் பிரஜைகளைப் பயன்படுத்துதல்

வியத்நாமில் ஏறத்தாழ1,200,000 ஹீவாவம்சாவழிப் பிரஜைகள் இருந்தனர்: இவர்களில் ஏறத்தாழ 10லட்சம் பேர் வியத்நாமின் தென் பகுதியிலும் 200,000க்கும் அதிகமானோர் வடபகுதியிலும் இருந்தனர். வடவியத்நாமிலுள்ள ஹீவா வம்சாவழி மக்களை வியத்நாம் தொழிலாளர் கட்சியின் தலைமையின் கீழ் வைத்திருப்பதென்றும், அவர்களைப் படிப்படியாக வியந்நாமியப் பிரஜைகளாக மாற்றிக் கொள்ளுவதென்றும் 1955 ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் வியத்நாமிய தொழிலாளர் கட்சியும் இணங்கின. நிஜத்தில், கடந்த இருபது ஆண்டுகளாக வட வியத்நாமிலுள்ள ஹுவா வம்சாவழிப் பிரஜைகள் வியத்நாமில் பிரஜைகளைப் போல சம உரிமைகளை அனுபவித்து வந்தனர்; வியத்நாமிய பிரஜைகளுக்கிருந்த கடமைகள் அவர்களுக்குமிருந்தன. தென் வியத்நாமில், நுயோ தின் டியெம் ஆட்சியின் கீழ் ஹுவா வம்சாவழிப்பிரஜைகள் தமது வாழ்விலும் பணியிலும் மேலும் சாதகமான நிலைமைகளை எய்தும் பொருட்டு 1956ம் ஆண்டு முதல் வியத்நாமிய பிரஜா உரிமையினையும் பெற்று வந்தனர்.

தென் வியத்நாம் பூரணமாக விமோசனப்படுத்தப்பட்ட பின்னர், வியத்நாமிய அரசும் மக்களும் வடக்கிலுள்ள ஹுவா வம்சாவழிப் பிரஜைகளைப் பொறுத்து இரு கட்சிகளுக்குமிடையில் 1955ல் செய்து கொண்ட உடன்படிக்கையை தொடர்ந்தும் அனுசரித்து நடந்து வந்தனர். தென் பகுதியிலுள்ள சீன வம்சாவழி வியத்நாமியர்களின் வரலாற்று வழிப்பட்ட எதார்த்தத்தைத் கருத்திற் கொண்டு இவர்களையும் வியத்நாமிய சமுதாயத்தின் ஒரு பகுதியாகவே அவர்கள் கருதினர். தைவான், ஹொங்கொங் மற்றும் வெளிநாட்டு கடவைச் சீட்டுக்களைக் கொண்டவர்களும் பொல்



பொட்- இயாங்ஸாரி கோஷ்டியினர் ஆட்சிக்காலத்தில் வெளிவேற்றப்பட்டு வியத்நாமில் புகலிடம் தேடிய ஹுவா பிரஜைகளுமாக ஒரு சிறு தொகையினதாவர்கள் அந்நியப் பிரஜைகள் என்றே கருதப்பட்டு வந்தனர்.

ஆனாலும், 1955ல் இரு கட்சிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையைத் திரித்துக் காட்டிய சீனத் தலைவர்கள் தென் வியத்நாமிலுள்ள சீன வம்சாவழி வியத்நாமியர்களின் வரலாற்று வழிப்பட்ட எதார்த்தத்தினை ஏற்றுக் கொள்ள மறுத்ததுடன் நாட்டின் இரு பகுதிகளிலுமுள்ள ஹுவர் வம்சாவழிப் பிரஜைகள் சீனப் பிரஜைகளே என்று வாதித்ததுடன், அவர்களுக்கான தலைவர்கள் தாமே என்றும் கூறிக்கொண்டனர். உண்மையில், வியத்நாமில் ஹுவர் வம்சாவழிப் பிரஜைகளைக் கொண்ட உணவுக் குழுக்களையும், பிற்போக்கு ஸ்தாபனங்களையும் அவர்கள் அமைத்திருந்தனர். ''சமாதானத்துக்கான சீனவாசிகள் சங்கம்'', ''முற்போக்கு சீனச் சங்கம்'', ''விமோசனத்துக்கான சீன வாசிகள் சங்கம்'', ''மார்க்ஸிஸ—லெனினிய வாலிபர் கழகம்'', ''தேசபக்த சீனப்பள்ளி மாணவர் சங்கம்'', ''சீன வாசிகளின் ஐக்கிய முன்னணி'' முதலான ஸ்தாபனங்கள் பீகிங்கின் ஆதரவுடன் வியத்நாமிய அமைக்கப்பட்டிருந்தன. வியத்நாமிய அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்த்த இந்த ஸ்தாபனங்கள் இராணுவ சேவையிலும், புதிய பொருளாதார அபிவிருத்திப் பணிகளிலும் பங்கெடுக்க மறுப்புத் தெரிவித்ததுடன். ஹுவா வம்சாவழிப் பிரஜைகள் மத்தியில் இனவாத உணர்வுகளைக் கிளப்பி, சீனத் தேசிய இனத்தை மீண்டும் உருவாக்கக் கோரி இயக்கம் நடாத்தின தென் வியத்நாமில், பொருளாதார அபிவிருத்திக்கான அரசாங்கத் திட்டத்துக்குக் குழிபறிக்கும் நோக்குடன் அவை கள்ள நோட்டுக் கரன்ஸிகளை அச்சடித்து விட்டன; பொருட்களின் விலைகளை தம்மிச்சைப்படி உயர்த்தின. அமெரிக்க ஆக்கிரமிப்பு யுத்தத்தின் விளைவாக ஏற்கனவே பல இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்திருந்த தென் வியத்நாமிய மக்களுக்கு இவ்வாறான சூழ்ச்சி நடவடிக்கை கஷ்டங்களை உருவாக்கினர். இது, நல்லதொரு வாழ்க்கை நிலைமையைத் தேடி நாட்டை விட்டுப் பல மக்கள் வெளியேறுகின்ற நிர்ப்பந்தமொன்றினை ஏற்படுத்தியது. தென் ஆசியாவிலும், தென்கிழக்காசியாவிலுமுள்ள இதர நாடுகளில் செய்ததைப் போலவே, வியத்நாமிலும அரசியல், பொருளாதார, சமூக ரீதிகளில் அமைதியின்மையினையும், அதிருப்தியையும் ஏற்படுத்துவதில் பீகிங் ஹுவா வம்சாவழிப் பிரஜைகளை ஒரு கருவியாகப் பாவித்தது,

## 3. நெருக்கடியை அதிகரிப்பதற்கு 'உதவி'என்ற கருவியைப் பயன்படுத்தல்

1973ல், முன்னர் வழங்கிய அளவு உதவியினை தொடர்ந்தும் மேலும் ஐந்தாண்டு காலத்துக்கு வியத்நாமுக்கு வழங்குவதென சீனத் தலைவர்கள் வாக்குறுதியளித்தனர்.

1975ல் தென் வியத்நாமினைப் பூரணமாக விமோசனப்படுத்தியமை குறித்து வியத்நாமிய மக்களுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலும் சீனத் தலைவர்கள் மீண்டும் இந்த வாக்குறுதியினை வலியுறுத்தினர்: ''சீனா தொடர்ந்தும் தனது சர்வதேயக் கடப்பாடுகளை நிறைவேற்றி வரும்: தாம் பெற்ற வெற்றியின் ஆதாயங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கும், நாட்டினை மீண்டும் ஐக்கியப்படுத்துவதற்கும் தமது தாயகத்தைக் கட்டிவளர்ப்பதற்குமான வியத்நாமிய மக்களின் நியாயமான இலட்சியங்களுக்கு சீனா உறுதியான ஆதரவினை வழங்கும்'' உலகின் அனைத்தும் புரட்சிகர, முற்போக்கு சக்திகளுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உண்டு பண்ணிய வியத்நாமிய மக்களின் வரலாற்றுபூர்வமான வெற்றியைப் பொறுத்து தமக்குள்ள பொச்சரிப்பினை மூடிமறைப்பதற்கும் வியத்நாமிய சோஷலிஸக் குடியரசுக்கு எதிரான தமது கபடத்திட்டங்களை மூடிமறைப்பதற்குமாகவே சீனத் தலைவர்கள் உதட்டளவில் இந்த உறுதிமொழிகளை வழங்கினர்.

நிஜத்தில், தமது நாட்டினைப் புனர்நிர்மாணிப்பதற்கு வியத்நாமிய மக்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்குச் சீனத் தலைவர்கள் துணை நிற்கவில்லை.

1969-1970 காலகட்டத்தில், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது பற்றி வியத்நாம் அமெரிக்காவுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளைத் தாம் விரும்பாத காரணத்தினால், சீனத் தலைவர்கள் வியத்நாமுக்கான தமது உதவியைக் குறைத்துக் கொண்டனர். 1971-1972 காலகட்டத்தில், அமெரிக்காவுடனான தமது பேச்சுவார்த்தைகளில் வியத்நாம் பிரச்னையை ஒரு முகாந்திரமாகக் கொண்டு ஆதாயம் பெறும் நோக்குடன், முன்னெப்போதும் வழங்கியிருக்காத அளவுக்கு வியத்நாமுக்குக்கான உதவிகளை அவர்கள் அதிகரித்தனர். ஆனால், 1975ல், தென் வியத்நாமில் தமது திட்டங்கள் கைகூடிவராத காரணத்தினால், வியத்நாம் மீது நிர்ப்பந்தம் கொண்டு வருவதற்கு மீண்டும் வழங்கும் 'உதவி' என்ற கருவியை அவர்கள் பயன்படுத்தினர். முன்னர் வழங்குவதாக வாக்குறுதியளித்த உதவிகளை வழங்குவதில் பல்வேறு சாக்குப் போக்குக் கூறி தாமதம் காட்டி. வந்தனர் வியத்நாமின் புனர் நிர்மாணப் பணிகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பல பூர்த்தியடையாத அபிவிருத்தித் திட்டங்களும் இவற்றுள் அடங்கும். நிஜத்தில், சீனத் தலைவர்கள் பெருமை பீற்றிக்கொள்ளுவது போல அவர்கள் வழங்கும் உதவிகள் ''தன்னலமற்றவை''யாக இருக்கவில்லை; மாறாக, பேரின் மேலாதிக்கவாதத் திட்டங்களைச் செயல்படுவதற்கான கருவிகளாகவே அவை இருந்தன.

வியத்நாமுக்கு எதிரான மேற்கூறிய பீகிங்கின் ஈவிரக்கமற்ற அப்பட்டமான சூழ்ச்சிகள் யாவும் தோல்வியையே தழுவிக் கொண்டன. பொல் பொட்—இயாங் ஸாரி கோஷ்டியினரால் இழைக்கப்பட்ட பாசிஸ, இனச்சங்கார அட்டூழியங்களை கம்போடிய மக்களும் முழு மனித குலமுமே வன்மையாகக் கண்



டித்தனர். வியத்நாமுக்கு உள்ளிருந்தே குழிபறிப்பதற்கு ஹீவா பிரஜைகளை பயன்படுத்தவென்று போட்ட திட்டங்கள் பகற்கனவுகளாகப் போயின. நாம் வழங்கும் உதவிகளை நிறுத்திக் கொள்ளுவதன் மூலமும், மற்றும் சூழ்ச்சிகள் மூலமும், வியத்நாம் மீது நிர்ப்பந்தம் கொண்டுவர மேற்கொள்ளப்பட்ட எத்தனிப்புகளால் வியத்நாம் மக்களை அடிமைப்படுத்தவோ அல்லது வியத்நாமினை அதனது சுயாதீன, சுயாதிபத்திய கொள்கைப் பாதையிலிருந்து திசை திருப்புவதோ சாத்தியமாகிவிடவில்லை.

**3. திட்டமிட்ட ரீதியிலும் வெட்ட வெளிச்சமாகவும் வியத்நாமுக்கு எதிராகச் செயல்படுதல்:**

வியத்நாமுக்கு எதிராக மறைமுகமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் எதிர்பார்த்த பெறுபேறுகள் எதனையும் அளிக்காததைக் கண்ட சீனத் தலைவர்கள், பலாத்கார பிரயோக அச்சுறுத்தல் உட்பட முடிந்த எல்லா வழிகளிலும் வியத்நாமுக்கு எதிரான நடவடிக்கைகளில் பகிரங்கமாகவே இறங்கத் தலைப்பட்டனர்.

**1. ''பழிவாங்கப்பட்ட பிரஜைகள்'' பற்றிய பிரச்னை.**

1978 ஆரம்பத்தில், வியத்நாம் சோஷலிஸக் குடியரசுக்கு எதிரான பாரிய அளவிலான அவதூறுப் பிரசாரத்தைப் பகிரங்கமாகவே கட்டவிழ்த்து விடும் நோக்குடன் ''பழிவாங்கப்பட்ட பிரஜைகள்'' என்ற ஒரு இல்லாத பிரச்னை பற்றி புரளிப் பிரசாரஞ் செய்ய சீன ஆட்சியாளர்கள் ஆரம்பித்தனர்.

பீகிங் பிரசார எந்திரத்தின் வழிநடத்துதலின் கீழ்இரஸி ஹுவா ஸ்தாபனங்களும் ஹனோயிலுள்ள சீனத் தூதுவராலயத்தின் உளவு அமைப்புகளும் மேற்கொண்ட நடவடிக்கைகள், அச்சுறுத்தல், பலவந்தம் முதலாவற்றின் மூலம் ''ஹுவா மக்கள் வெளியேற்றப்பட்டும் துன்புறுத்தப்பட்டும் வருகின்றனர்'' என்ற ரீதியில் வியத்நாமுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆகியன அச்ச உணர்வினையும், யுத்தம் ஏற்படும் பீதியினையும் உருவாக்கியதுடன் வியத்நாமியர்கள் பால் ஹுவா மக்களுக்கு அவநம்பிக்கைஉணர்வும் குரோத விரோத உணர்வும் ஏற்படவும், வியத்நாமிலிருந்து ஹுவா மக்கள் பெருமளவில் வெளியேறவும் காரணமாக இருந்தன. ஹுவா மக்கள் சட்ட விரோதமான முறையில் எல்லையைக் கடப்பதற்கு உதவிய சீன ஏஜண்டுகள், இவர்களை வியத்நாமிய - சீன எல்லையில் பலவந்தமாக நிறுத்தி வைத்தது மட்டுமன்றி, வியத்நாமிய அதிகாரிகளுக்கு எதிரான ஆத்திரமூட்டல்களிலும் ஈடுபடுத்தினர். ஹுவா மக்கள் வியத்நாமிலிந்து வெளியேறி சீனாவுக்கு செல்ல ஆரம்பித்ததும், பீகிங் ''பழிவாங்கப்பட்ட பிரஜை''களைக் கொண்டு செல்லவென இரண்டு கப்பங்களை வியத்நாமுக்கு அனுப்பி வைத்தது. ஆனால், இப் பிரச்னை குறித்து சீனத் தலைவர்கள் வியத்நாம் அரசாங்கத்துடன் ஒரு வார்த்தை தானும் பேசவில்லை. ஒரு சில மாதங்களினுள் மட்டும் 170,000 ஹுவா மக்கள் வியத்நாமிலிருந்து வெளியேறிச் சீனாவுக்குச் சென்றனர். ''பழிவாங்கப்பட்ட பிரஜைகள்'' பிரச்னையை ஒரு முகாந்திரமாகப் பயன்படுத்தி, ஹுவா மக்கள் பெருமளவில்

சீனாவுக்குச் சென்றனர். வியத்நாமில் அரசியல், பொருளாதார, சமூக ரீதிகளில் அமைதியின்மையை ஏற்படுத்தவும், வியத்நாம் மக்களை அடிமை கொள்ளவும், அதே வேளையில் சீனாவில் பொது மக்கள் மத்தியில் வியத்நாம் - விரோத உணர்வுகளை உருவாக்கவும், வியத்நாமுக்கு எதிரான எதிர்கால ஆக்கிரமிப்புக்கான ஒரு ''ஐந்தாம் படை'' யைத் தயார் செய்து கொள்ளவும் முயன்ற பிற்போக்கு பீகிங் தலைமைப்பீடமே இந் நிகழ்வுகள் அனைத்துக்குமான ஜவாப்தாரியாகும்.

வியத்நாமில் நீண்ட நெடுங்காலமாக குடியேறி வாழ்ந்த ஹுவா மக்கள் வியத்நாமிய மரபுகள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் முதலானவற்றுடன் நன்கு பரிச்சயமானவர்களாயிருந்ததுடன், பல்வேறு தொடர்புகளால் பலப்பல தகவல்களைச் சேகரிக்கக் கூடியவர்ர்களாயிருந்தனர். இதனால் தான் ஹுவா மக்களில் பலர் மலைப் பிரதேசங்களில் சண்டையிலீடுபடுத்தக்கூடிய ''மலையேறுபவர்கள் பிரிவு'' களில் பீகிங் விஸ்தரிப்புவாதிகளால் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; வேறு பல ஹுவாக்கள் சாரணர் படைப் பிரிவுகளிலும், வியத்நாமில் வேவு பார்த்தல், ஆள்கடத்தல், கொலை செய்தல், பாலங்களையும் களஞ்சிய சாலைகளையும் அழித்தல் ஆகிய வேலைகளை நிறைவேற்றும் பிரிவுகளில் சீன அதிகாரிகளினால் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களிற் பலர் 1979, பெப்ரவரி 17 ல் வியத்நாம் மீது சீனா தொடுத்த ஆக்கிரமிப்பு யுத்த தருணத்தில் கைது செய்யப்பட்டவர்கள்.

தமது சுயாதிபத்தியத்தைப் பாதுகாப்பதற்கு வியத்நாமிய மக்கள் பூண்டுள்ள உறுதிப்பாட்டினைக் கண்ட பீகிங் ஆட்சியாளர்கள் ''பழிவாங்கப்பட்ட ஹுவா வாசி'' களை தாயகத்துக்கு மீட்டுச் செல்லவென அனுப்பிய இரண்டு கப்பல்களையும் திருப்பியழைக்கவும், ஹுவா பிரச்னை குறித்து வியத்நாமிய தரப்புடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஆனால், இப்பேச்சுவார்த்தைகளின் போது கூட, தமது பேரினவாதப் போக்கினைத் தொடர்ந்தும் கடைப்பிடித்த அவர்கள் வியத்நாம் சோஷலிஸக் குடியரசின் சுயாதிபத்தியத்தையும் சர்வதேச சட்ட விதிகளையும் கருத்திற் கொள்ளாது, அர்த்தமற்ற தமது தீர்மானங்களை வியத்நாமிய தரப்பினர் மீது திணிக்க முயன்றனர். வியத்நாமுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஹுவா பிரச்னையைத் தொடர்ந்தும் பயன்படுத்தும் பொருட்டு மேற்படி பேச்சுவார்த்தைகளைச் சீர்குலைத்தவர்களும் பீகிங் ஆட்சியாளர்களே.

### 3. உதவிகளைக் குறைத்தலும் நிர்புணர்களைத் திருப்பியவைத்தலும்:

வியத்நாமிலிருந்து ஹுவா மக்களை வெளியேற்றுவதற்கு பல்வேறு ஆசை வார்த்தைகளையும் வாக்குறுதிகளையும் வாரி வழங்கி வந்த அதே வேளையில், பீகிங் விஸ்தரிப்புவாதிகள் தாம் வழங்கி வந்த உதவிகளை வெட்டுவதன் மூலம் வியத்நாமுக்குப் பொருளாதார ரீதியில் அடி கொடுக்க முயன்றனர். ஏறத்தாழ ஒரு மாத



காலத்தினுள், வியத்நாமுக்குத் தாம் வழங்கி வந்த பொருளாதார தொழில்நுட்ப உதவிகள் அனைத்தையும் ரத்துச் செய்வதாக ஒருதலைப்பட்சமாக அறிவித்த அவர்கள், சர்வதேச சட்டத்துக்கும் நடைமுறைக்கும் முரணான வகையில், வியத்நாமில் பணியாற்றிய சீன நிபுணர்களையும் தொழில்நுட்ப ஊழியர்களையும் திருப்பியழைத்துக் கொண்டனர். நீண்டகால யுத்தத்தின் உற்பாதங்களைத் துடைத்தெறியவும், நாட்டின் தென் மேற்குப் பகுதியில் எல்லைச் சண்டைக்கு முகம் கொடுக்கவும், ஏறத்தாழ 20,000 ஹுவா மக்களின் திடீர் வெளியேற்றத்தினால் உருவாகியிருந்த பொருளாதார இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்கவும், வெள்ளப் பெருக்கு, சூறாவளி போன்ற இயற்கை அழிவுகளினால் ஏற்பட்ட பல நாசங்களுக்கு முகம் கொடுக்கவும் வியத்நாமிய மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த ஒரு தருணத்தில் பீகிங் ஆட்சியாளர் இவ்வாறானதொரு நடவடிக்கையினை மேற்கொண்டது பெரும் கொடுமையானதாக இருந்தது.

தாம் வழங்கி வந்த உதவிகளை நிறுத்தியும், நிபுணர்களைத் திருப்பியழைத்தும் வந்த அதே வேளையில் சீனத் தலைவர்கள் வியத்நாமின் புனர் நிர்மாணப் பணிகளுக்கு வழங்கி வரும் உதவிகளை நிறுத்துமாறு இதர நாடுகளுக்கும், சர்வதேச ஸ்தாபனங்களுக்கும் பகிரங்கமாகவே வேண்டுகோள் விடுத்தனர். இது எந்தளவு ஈவிரக்கமற்ற, கொடுமையான போக்கு!

தென் கிழக்காசியாவில் தமது விஸ்தரிப்புவாத சூழ்ச்சி நடவடிக்கைகளை மூடி மறைக்கும் நோக்குடன் வியத்நாமுக்கு எதிரான அவதூறுப் பிரசாரத்தைத் தீவிரப்படுத்திய அதே வேளையில், வியத்நாமுக்கும் 'ஏசியன்' ஸ்தாபன நாடுகளுக் மிடையில் உறவுகள் சுமுகமடைவதற்கு முட்டுக்கட்டையிட முயன்றதுடன், சீனாவுடன் ஒரு 'பொது அணி'' யில் சேருமாறு 'ஆஸியன்' நாடுகளுக்கு அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். சில நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகளும் கலோனியலிஸ்டுகளும் செய்ததைப் போலவே, இவ்வாறான ஒரு அவதூறுப் பிரசாரத்துடன் பொருளாதார ரீதியில் வியத்நாமினைப் பலஹீனப்படுத்தி, அரசியல் ரீதியில் அதனைத் தனிமைப்படுத்தி, அதன் மீது இராணுவத் தாக்குதலைத் தொடுக்கும் தமது திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என சீனத் தலைவர்கள் நம்பினர். இவ்வாறான நடவடிக்கை வியத்நாமின் சுயாதீனம், சுயாதிபத்தியம் ஆகியவற்றின் அபகரிக்கிற ஒரு நடவடிக்கையாக மட்டுமன்றி இதர நாடுகளினதும் சர்வதேச ஸ்தாபனங்களினதும் உள் விவகாரங்களில் தலையிடுகின்ற ஒரு நடவடிக்கையாகவுமிருந்தது.

### வியத்நாமிய-சீன எல்லையில் பதட்ட நிலையைப் பேணுதல்.

வியத்நாமுக்கு எதிரான பொருளாதார, அரசியல் குழிபறிப்புகளைச் செய்துவந்த அதே வேளையில், சீன ஆட்சியாளர்கள் பல திசைகளிலிருந்தும் வியத்நாம் சோஷலிஸக் குடியரசின் மீதான இராணுவ வழிப்பட்ட நிர்ப்பந்தத்தினை அதிகரித்தனர்.

வடக்கில், அவர்கள் சீன -வியத்நாம் எல்லைப் புறத்துக்கு மேலும் அதிக அளவு துருப்புக்களை அனுப்பினர். வியத்நாமின் சுயாதிபத்தியத்தையும் பிராந்திய முழுமையினையும் மீறும் வகையிலான ஆத்திரமூட்டல்களையும் சிறு தாக்குதல் நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தினர்; இதன் மூலம், எல்லைப் புறத்தில் இடையறுது ஒரு பதட்ட நிலையை உருவாக்கி வந்தனர். 1975 ல் ஆத்திரமூட்டல்களினதும், நில - அபகரிப்பு நடவடிக்கைகளினதும் எண்ணிக்கை 234 ஆக அதிகரித்தது. 1978 ல் இந்த எண்ணிக்கை 2,175 ஆக, அதாவது, பத்து மடங்குகளால் அதிகரித்தது.

தென் மேற்குப்புறத்தில், எல்லைப்புறத்தில் ஒரு இராணுவ சூன்ய மண்டலத்தை இரு தரப்புகளும் உருவாக்க வேண்டுமென்றும், இராணுவங்கள் இப் பிரதேசத்திலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டுமென்றும், இரு தரப்புகளும் அனுக்கிரமிப்பு - நட்புறவு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட வேண்டுமென்றும் கோரும் வியத்நாமிய பிரேரணையை பிற்போக்கு பொல் பொட் - இயாங் ஸாரி கோஷ்டியினர் நிராகரித்தனர். வியத்நாமுடனை எல்லை யுத்தத்தை நீடிப்பதற்கான சாக்குப் போக்குகளைக் கண்டறிவதில் முனைந்திருந்த அதே வேளையில், அவர்கள் பெருமளவிலான எதிர்கால இராணுவத் தாக்குதலுக்கான தயாரிப்புக்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

மேற்கில், சர்வதேச சட்டத்துக்கு ஒவ்வாத முறையில், சீனுவிலும் பார்க்க மிகச் சிறியதும், அண்டையயல் நாடுகளுடன் எப்போதும் சமாதான, நட்புறவுகளைப் பேணிவந்த நாடாகிய லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசின் மீது சீன ஆட்சியாளர் எல்லா வழிகளிலும் நிர்ப்பந்தம் கொண்டு வந்தனர். முன்னர் சி. ஐ. ஏ. யினுல் உருவாக்கப்பட்டும், அதனது தலைமையின் கீழ் இயங்கியும் வந்த மியோ விசேஷ படைப் பிரிவின் எச்சசொச்சங்களையும், தமது வீதி நிர்மாணத் துருப்பக்களையும் வட லாவோஸ் மாகாணங்களினுள் ஊடுருவல் செய்வதற்கும் பயன்படுத்திய சீன ஆட்சியாளர்கள் லாவோஸை ''கைப்பற்றிக் கொள்ள'' முனைவதாக வியத்நாம் மீது குற்றஞ்சாட்டி, வியத்நாமுக்கும் லாவோஸுக்குமிடையில் பிளவுகளை உருவாக்க முயன்றதுடன், சீன -லாவோஸ் எல்லைக்கு தமது படைப் பிரிவுகள் பலவற்றையும் அனுப்பி வைத்தனர். லாவோஸினைப் படிப்படியாகப் பலஹீனப்படுத்தி அதனைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயன்ற அதே வேளையில், மேற்கிலிருந்து வியத்நாமுக்கு எதிரான இராணுவ அச்சுறுத்தலை அதிகரிப்பதே சீன ஆட்சியாளர்களின் நோக்கமாக இருந்தது.

**4. இரு திசைகளிலிருந்து வியத்நாமினைத் தாக்குதல்.**

மேற்கூறிய சூழ்ச்சி நடவடிக்கைகள் யாவும் வியத்நாமிய மக்களுக்கு பல கஷ்ட நஷ்டங்களை ஏற்படுத்திய பொழுதிலும், அவையெல்லாம் முறியடிக்கப்பட்டன. இதனுல்தான், 1978 ன் இறுதியிலும் 1979 ன் ஆரம்பத்திலும் வியத்நாம் சோஷலிஸக் குடியரசுக்கு எதிராக வேறு இரு திசைகளிலிருந்து இராணுவத் தாக்குதலைத் தொடுக்கும் நிர்ப்பந்தம் சீன ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது.



தென் மேற்கில், பீகிங்கின் திட்டப் பிரகாரம், வியத்நாமுடனை எல்லையில் 19 தரைப்படைப் பிரிவுகளை (மொத்தம் 23 படைப்பிரிவுகளில்) நிறுத்திய பின்னர், தங் நின் மாகாணத்தின் தலைநகரைத் துரிதமாகக் கைப்பற்றும் நோக்குடன் டாங்கிப் படைப் பிரிவுகளின் துணையுடன் 1978 டிஸம்பர் 22 ந் திகதி பொல் பொட் - இயாங் ஸாரி கோஷ்டியின் இராணுவம் பென்ஸோய் நகர் மீது தாக்குதலை நடாத்தியது. இதன் மூலம் தென் வியத்நாமினுள் ஆழமான ஊடுருவலை மேற்கொள்ளுவதற்கு அது வழிகோலியது. வடக்கிலிருந்து சீனு வியத்நாமினைச் சுலபமாகத் தாக்குவதற்கு துணை செய்யும் வகையில் வியத்நாமினைப் பலஹீனப்படுத்துவதும் மேற்படி தாக்குதலின் இன்னுமொரு நோக்கமாகும்.

சுய பாதுகாப்புக்கென தமக்குள்ள சட்டபூர்வமான உரிமையை முழுமையாகப் பயன்படுத்திய வியத்நாமிய மக்கள் இந்த கபடத்தனமான இராணுவத் தாக்குதல் திட்டத்தை முறியடித்தனர். அதே வேளையில், கம்போடிய தேசிய விமோசன ஐக்கிய முன்னணியின் தலைமையின் கீழ் கம்போடிய இராணுவத்தினரும், மக்களும் வியத்நாமிய மக்களின் ஆதரவுடன் பொல் பொட் - இயாங் ஸாரி கோஷ்டியினரின் ஆட்சிக்கு எதிராகத் தீவிரமாகப் போராடினர். இப் போராட்டத்தின் விளைவாக, 1979 ஜனவரி 10 ந் திகதி கம்போடிய மக்களை உண்மையாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் கம்போடிய மக்கள் குடியரசின் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது.

வடக்கில், 1979 பெப்ரவரி 17 ந் திகதி, பல இராணுவப் பிரிவுகள், ஏறத்தாழ 800 டாங்கிகளுடனும் கவச வாகனுதிகளுடனும் கூடிய ஆயுத யூனிட்டுகள், சீனுவின் அனைத்து இராணுவ மண்டலங்களையுஞ் சார்ந்த ஓராயிரம் தரைப்படை வீரர்கள், நூற்றுக்கணக்கான விமானப்படை வீரர்கள் ஆகியோர் உட்பட ஏறத்தாழ 600,000 துருப்புக்களை 1,000 கி. மீட்டர் நீளமான சீன - வியத்நாம் எல்லையில் வியத்நாமுக்கு எதிராக ஆக்கிரமிப்பு யுத்த மொன்றினைத் தொடுக்கும் பொருட்டு சீன ஆட்சியாளர்கள் ஒன்று திரட்டினர். சீனப் பிற்போக்குத் தலைமைப் பீடத்தினுல் ஏவப்பட்ட துருப்புக்கள் தாம் சென்ற இடங்களிலெல்லாம் பெண்கள், குழந்தை குட்டிகள், முதியவர்கள் என்ற பேதமின்றி சிவிலியன்களைக் கொன்று குவித்தனர், கிராமங்கள், மதாலயங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், பண்ணைகள் முதலானவற்றை அழித்து நாசஞ் செய்தனர். நவீன ஏகாதிபத்திய இராணுவங்களின் புதிய முறைகளைக் கையாண்டு காட்டுமிராண்டித்தனமான முறையில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தனர்; குடிமனைகளைத் தீக்கிரையாக்கினர்.

சீன மக்களையும், உலக மக்களையும் ஏமாற்றும் நோக்குடன், தாம் நடாத்திய தாக்குதல், எல்லையோரப் படைப் பிரிவுகளினுல் நடாத்தப்பட்ட ''தற் பாதுகாப்புக்கான பதில் தாக்குதலே'' என்று பீகிங் தலைவர்கள் பிரகடனஞ் செய்தனர். நிஜத்தில், இது சீனுவின் பிரதான இராணுவ மண்டலங்களிலிருந்தும் திரட்டப்பட்ட துருப்

புக்களைக் கொண்டு நடாத்தப்பட்ட ஒரு அப்பட்டமான ஆக்ரமிப்பு யுத்தமே; இராணுவ நிலையங்கள், சாலைகள், பாதுகாப்புக் கிடங்குகள், விமானத் தளங்கள் முதலானவற்றை சீன - வியத்நாமிய எல்லையோரத்தில் நிர்மாணிக்கப்பட்டது முதல் வியத்நாமுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அவதூறுப் பிரசாரம், வியத்நாமிய - சீன நட்புறவுக்குச் செய்யப்பட்ட குழிபறிப்பு வேலைகள் ஆகியன வரை இது எல்லா வகையிலும் நன்கு திட்டமிடப்பட்ட ஒரு யுத்தமே. ராஜதந்திரத் துறையில் மிகக் கவனமான முறையில் இதற்கான தயாரிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சீன உதவிப் பிரதமர் டெங் ஸியாஓ - பிங் அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் மேற்கொண்ட விஜயங்களைப் பூர்த்தி செய்து மீண்டு வரும் தறுவாயிலேயே சீனு இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தினைத் தொடுத்தது; நிஜத்தில், இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு சீன உதவிப் பிரதமருக்கு அமெரிக்காவினதும் ஜப்பானினதும் அங்கீகாரம் கிடைத்திருந்தது. வியத்நாமிய ஆயுதப்படைகளின் ஒரு பகுதியை நிர்மூலமாக்குவதும், வியத்நாமின் பொருளாதார, இராணுவ ஆற்றலை இல்லாதொழிப்பதும், வியத்நாமிய பிராந்தியங்களைக் கைப்பற்றி அங்கிருந்து கலகங்களை உண்டு பண்ணுவதுமே சீன ஆட்சியாளர்களின் பிரதான நோக்கங்களாக இருந்தன.

வியத்நாமினை அடிமை கொண்டு, அதனைத் தனது ஆள்புலத்தினுள் உள்ளடக்கும் நோக்குடன் சீன ஆட்சியாளர்கள் வியத்நாமிய மக்களின் சுயாதீனம், சுயாதிபத்தியம், ஐக்கியம், பிராந்திய முழுமை ஆகியவற்றுக்கு எதிராகப் பின்பற்றிய கொள்கையின் இறுதிக் கட்டமாக அமைந்தது இந்த இரு முனை ஆக்கிரமிப்பு யுத்த நடவடிக்கைகளேயாகும். ஆனுல் பீகிங் எதிர்பார்த்ததற்கு மாருக, அதனது ஆக்கிரமிப்பு யுத்தம் பரிதாபகரமான முறையில் தோல்வியைத் தழுவிக் கொண்டதுடன், சீன மக்களின் ஒரு பகுதியினர் உட்பட முழு உலக மக்களினதும் வன்மையான கண்டனத்துக்கு இலக்காகியது. 1979மே 5 ந் திகதி தமது துருப்புக்களைத் தாம் வாபஸ் பெறுவதாகப் பிரகடனஞ் செய்யச் சீன ஆட்சியாளர் நிர்ப்பந்திக்கப்பட்டதுடன், வியத்நாமிய தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தவும் இணங்கினர்.

### 5. வியத்நாமுக்கு எதிராக அனைத்து வழிகளிலும் செயற்படுதல்

எல்லைக்கு அப்பால் தமது துருப்புக்களை வாபஸ் பெறுவதாக சீன ஆட்சியாளர்கள் பிரகடனஞ் செய்த பொழுதிலும், நிஜத்தில், அவர்களது துருப்புக்கள் வியத்நாமிய பிராந்தியங்களின் சில பகுதிகளில் இன்றும் நிலைகொண்டுள்ளன; மேலும் மேலும் துருப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்து வருகின்றன; இரு தரப்புக்களும் கௌரவிக்க வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்ட வரலாற்று ரீதியான எல்லைப் பிரமாணங்களை மீறி வருகின்றன.

சீன - வியத்நாம் எல்லையோரம் நெடுகிலும் சீன ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் ஆயுதங்களையும் துருப்புக்களையும் குவித்து வந்தனர். வியத்நாமிய பிராந்தியத்தின் பல பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். வியத்நாமிய வாசிகளுக்கு எதிரான ஆத்திரமூட்டல்கள், துப்பாக்கித் தாக்குதல்கள், கண்ணி வைத்தல் முதலான நடவடிக்கைகளில் அவர்கள் நாள்தோறும் ஈடுபட்டு வந்தனர்; ஒரு தடவை, 4 கிலோமீட்டர் தூரத்துக்கு வியத்நாமிய பிராந்தியத்தினுள் ஊடுருவிய சீனத் துருப்புக்கள் சிவிலியன்களை கொன்று குவித்ததுடன் குடிமனைகளைத் தீக்கிரையாக்கினர்; தானிய வயல்களை நாசஞ் செய்தனர். சில தடவைகளில், சீன விமானப்படை விமானங்கள் வியத்நாம் ஆகாய எல்லையையும் மீறி 8 - 10 கிலோ மீட்டர் தூரத்துக்கு வியத்நாமிய ஆகாய பிராந்தியத்தினுள் பிரவேசித்தன. வியத்நாமுக்கு ''இரண்டாவது பாடத்தையும்'', முடிந்தால் ''இன்னும் பல பாடங்களையும்'' தாம் புகட்டப் போவதாக சீன ஆட்சியாளர்கள் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தி வருகின்றனர். எதன் பேரில் அல்லது எந்த சட்டத்தின் கீழ் வியத்நாமியர்களுக்குப் பாடம் புகட்டும் உரிமை சீன ஆட்சியாளர்களுக்கு இருக்கிறது? சீனுவைப் போலவே, வியத்நாமும் சுயாதீனமும் சுயாதிபத்தியமும் கொண்ட ஒரு நாடு. வியத்நாமினதோ அல்லது வேறெந்த நாட்டினதோ சுயாதீனம், சுயாதிபத்தியம், பிராந்திய முழுமை ஆகியவற்றுக்கு அபாயத்தை ஏற்படுத்தும் எதையும் செய்வதற்கு ஐ. நா. சாஸனமும், சர்வதேச சட்ட விதிகளும் சீனுவை அனுமதிக்கவில்லை. தமது நாடு கூடுதலான ஜனத் தொகையைக் கொண்ட பெரிய நாடு என்பதனுல் தானு சீன விஸ்தரிப்புவாதிகள் சட்டத்தினை தமது கைகளில் எடுத்துக் கொண்டு, தம்மைக் காட்டிலும் விஸ்தீரண அளவிலும் ஜனத்தொகை அளவிலும் சிறியதான நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு, அவற்றினை அடிமை கொள்ள முயலுகின்றனர்?

எல்லைப் பிரதேசத்தில் அமைதியையும் பந்தோபஸ்தினையும் உத்தரவாதப்படுத்தும் பொருட்டு வியத்நாமிய தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கும், இரு நாடுகள் தொடர்பான இதர பிரச்னைகள் குறித்து கலந்தாலோசிப்பதற்கும் சீன அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தனர். ஆனுல், ஹனுேயில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போதும், பீகிங்கில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போதும் வியத்நாமிய தரப்பு முன்வைத்த நியாயபூர்வமானதும், தர்க்கரீதியானதுமான பிரேரணைகளைப் பரிசீலனை செய்வதைச் சீனத் தரப்பு தவிர்த்துக் கொண்டதுடன், இரு நாடுகளுக்குமிடையிலான இதர பிரச்னைகளின் தீர்வுக்கு முக்கிய முன்தேவையாகவுள்ள எல்லைப் பிரச்னையின் தீர்வு காணவும், எல்லைப் பிரதேசத்தில் ஆயுத ஆத்திர மூட்டல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் அங்கு சமாதானத்தையும் ஸ்திரப்பாட்டினையும் உத்தரவாதப்படுத்துவதற்கும் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் பற்றி வியத்நாமிய தரப்பு முன்வைத்த ஆலோசனைகளையும் ஒரேயடியாக நிராகரித்தது. ஹொவாங் ஸா (பரஸல்ஸ்), துருவோங் ஸா ஆகிய தீவுக் கூட்டங்களைப் பொறுத்த தனது சுயாதீனத்தையும் சுயாதிபத்தியத்தையும் வியத்நாம் கைதுறக்க வேண்டுமென்பதே சீனத்

தரப்பு விதித்த மூன் நிபந்தனைகளில் ஒன்றாக இருந்தது. இது பேரினவாத மேலாதிக்கவாதிகளின் 'தலை வீங்கிய' போக்காகும். அவர்கள் சமதையான அடிப்படையில் பேச்சுவார்த்தை நடாத்தவும், சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளைக் காணுவதற்கும் வரவில்லை; மாறாக, தமது நிலைபாட்டினை மற்றைய தரப்பின்மீது திணிப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. கம்போடியாவிலிருந்தும் லாவோஸிலிருந்தும் வியத்நாமிய துருப்புக்கள் வெளியேற வேண்டுமென்று சீன ஆட்சியாளர்கள் கோரிக்கை விடுப்பதனதும், ''மேலாதிக்கவாத - எதிர்ப்பு கோட்பாடு'' பற்றி அவர்கள் அடிக்கடி பிரஸ்தாபிப்பதனதும் முக்கிய நோக்கம் வியத்நாமுக்கு எதிரான சீன ஆக்கிரமிப்பினை மூடி மறைப்பதும், லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசின் உள் விவகாரங்களில் தலையீடு செய்வதும், மூன்று இந்தோ - சீன நாடுகளையும் அடிமை கொள்ளுவதற்கான தமது கபடத் திட்டங்களை மறைப்பதும், தென் கிழக்காசியாவில் தனது விஸ்தரிப்புவாத நடவடிக்கைகளுக்கு இந்நாடுகளை உந்து தளங்களாகப் பயன்படுத்துவதுமேயாகும்.

அண்மையில், சீன ஆட்சியாளர்கள் ஜனாதிபதி கார்ட்டரின் ''மனித உரிமைகள்'' சுலோக அட்டையை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, வியத்நாமிய அகதிகள் பிரச்னையை வியத்நாமுக்கு எதிரான ஒரு புதிய ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றனர். வியத்நாமிய அகதிகளில் பெரும்பாலானோர் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளினதும், சைகோன் கைப்பொம்மை ஆட்சியாளர்களினதும் தயவில் வாழ்ந்து வந்த செல்வந்த வர்த்தகர்களும், அதிகாரிகளுமே அவர்களில் நாட்டை விட்டு வெளியேறுமாறு இணங்க வைக்கப்பட்ட ஹுவா மக்களும், அமெரிக்க பாணி வாழ்க்கை முறைக்குப் பரிச்சயமாகி, தற்போதைய நிலைமைகளுக்கு முகம் கொடுக்க முடியாதவர்களாயுள்ளவர்களும் அடங்குவர்.

தனது மரபார்ந்த மனிதாபிமான நடைமுறைக்கு இயைய மனித உரிமைகளைக் கௌரவிக்கும் வியத்நாமிய அரசாங்கமானது. யுத்த காலத்தில் எதிரிகளுடன் ஒத்துழைத்த வியத்நாமியர்களுடன் மனிதாபிமான முறையில் நடந்து கொண்டுள்ளது மட்டுமன்றி, கடந்த 30 ஆண்டுகளாக ஆக்கிரமிப்புப் படைகளிலிருந்து கைது செய்யப்பட்ட இராணுவ வீரர்களைப் பொறுத்தளவிலும் பெருமளவும் தயவும் தாராளமும் காட்டி வந்துள்ளது. வியத்நாமிய அகதிகளின் பிரச்னைக்கான காரணங்களையும், இப் பிரச்னையின் விளைவுகளையும் வியத்நாமிய அரசாங்கம் நன்கு அறிந்துள்ள அதே வேளையில், அண்டையயல் நாடுகளுக்கு வியத்நாமிய அகதிகளினால் ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்களையும் தெரிந்து கொண்டுள்ளது. இதனால்தான், 1979 ஜனவரியில், தமது குடும்பத்தாருடன் மீண்டு சேரும் பொருட்டோ அன்றி வேறு காரணங்களுக்காகவோ நாட்டிலிருந்து வெளியேற விரும்புவோர்களை சம்பிரதாய விதிமுறைகளுக்கிணங்க வெளியேற அனுமதிப்பதற்கு தான் தயாராயிருப்பதாக வியத்நாமிய அரசாங்கம் அறிவித்தது. நாட்டிலிருந்து வெளியேற விரும்புவோர் ஒரு ஒழுங்கு முறையுடன் பாதுகாப்பாக வெளி



யேறுவதைச் சாத்தியமாக்கும் பொருட்டும், இதனால் தென் கிழக்காசிய நாடுகளுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை முடிந்தளவு குறைக்கும் நோக்குடனும் 1979 மே 30 ந் திகதியன்று வியத்நாமிய அரசாங்கம் அகதிகளுக்கான ஐ. நா. கமிஷனுடன் 7 - அம்ச அடிப்படையில் ஓர் உடன்பாட்டுக்கு வந்தது.

ஆனாலும், தம் வசமுள்ள பாரிய பிரசார எந்திரத்தையும் அனைத்து அரசியல், பொருளாதார, நிதி சாதனங்களையும் ஒன்று திரட்டிப் பிரயோகித்த பீகிங்கும் வாஷிங்டனும் இப் பிரச்னையின் மனிதாபிமான அம்சத்தை கபடத்தனமாகப் பயன்படுத்தின; சூழ்ச்சி நடவடிக்கைகளிலும், வியத்நாமுக்கு எதிரான பாரிய அளவிலான அவதூறுப் பிரசாரத்திலும் இறங்கின.

ஹுவா மக்கள் பெருமளவில் வியத்நாமிலிருந்து வெளியேறுவதற்கான ஜவாப்தாரி யார்?

வியத்நாமில் ஒரு அழிவுகரமான ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், தாம் அந் நாட்டிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டபோது, ஒரு சீர்குலைந்த தென் வியத்நாமையும், ஸ்தம்பித்த பொருளாதாரத்தையும், வேலையில்லாப் பிரச்னைக்கு முகம் கொடுக்கும் நிலையிலிருந்த 30 லட்சம் பேர்களையும், ஏறத்தாழ 800,000 அனாதைகளையும், 600,000 விபச்சாரிகளையும், போதை வஸ்துப் பாவனைக்கு அடிமையாகப் போயிருந்த ஏறத்தாழ 10 லட்சம் இளைஞர்களையும் தம் பின்னால் விட்டேகிச் சென்றிருந்தனர்.

சீன ஆட்சியாளர்களைப் பொறுத்தளவில், ''பழி வாங்கப்பட்ட பிரஜைகள்'' பற்றிய பிரச்னையை ஜோடித்துப் பரப்பியவர்களும் அவர்களே; வியத்நாமிலுள்ள தமது வீடுவாசல்களையும் வேலை ஸ்தலங்களையும் கைதுறந்துவிட்டு சீனாவுக்கு வருமாறு ஹுவா மக்களுக்கு அழைப்பு விடுத்தவர்களும் அவர்களே; வியத்நாமிய பொருளாதாரத்துக்குக் குழி பறிக்கும் நோக்குடன் ஹுவா நான் (தென் சீன) உளவு ஏஜன்ஸி ஸ்தாபனங்கள் மூலம் கள்ள நோட்டுகளை அச்சடித்து வெளியிட்டவர்களும், பொருட்களின் விலைகளை தாறுமாறாக அதிகரித்தல், பதுக்கல் முதலான நடவடிக்கைகளை மேற்கொண்டு அங்கு அமைதியின்மையை உருவாக்கியவர்களும் அவர்களே. நாட்டினை விட்டு வெளியேற விரும்புவோர் ஒரு ஒழுங்கு முறையின் அடிப்படையிலும் பாதுகாப்பாகவும் வெளியேறுவதைச் சாத்தியமாக்குவதற்கு பொறுப்புள்ள வியத்நாமிய அதிகாரிகள் அகதிகள் தொடர்பான ஐ. நா. கமிஷனுடன் இணைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த அதே வேளையில், பீகிங் ஏஜண்டுகள் சட்ட விரோதமான முறையில் ஹுவா மக்களை நாட்டிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது மட்டுமன்றி, வியத்நாம் ''அகதிகளை ஏற்றுமதி செய்கின்றது'' என்ற ரீதியில் அவதூறுப் பிரசாரத்தையும் கிளப்பி விட்டனர். இதே சமயத்தில், நாள் தோறும், ஆயிரக்கணக்கான சீனர்கள் தமது

நாட்டிலிருந்து வெளியேறி ஹொங்கொங் மார்க்கமாக பல்வேறு தென்கிழக்காசிய நாடுகளுக்குச் செல்லுவதை சீன அரசாங்கம் அனுமதித்தது. பொல் பொட் - இயாங் ஸாரி ஆட்சியினரால் கம்போடியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட 26,000 ஹுவா மக்கள் பற்றி பீகிங் எதுவித கரிசனையையும் காட்டவில்லை. வியத்நாமின் உண்மையான நிலவரத்தைச் சரிவரப் புரிந்து கொண்டிராத அல்லது தமது சொந்த நலன் பொருட்டு சீன ஆட்சியாளர்களைத் திருப்தி செய்ய முயன்ற சில அரசாங்கங்களும் ஸ்தாபனங்களும் சீனு கட்டவிழ்த்து விட்ட அவதூறுப் பிரசாரத்தில் இணைந்து கொண்டது விசனிக்க வேண்டிய விஷயமாக இருந்தது.

திருடர்களே திருடர்களை பிடிக்குமாறு கூச்சலிட்ட கதையாக விவகாரம் மாறிவிட்டது. மனித உரிமைகளையும் சர்வதேச சட்டங்களையும் தமது காலடியில் போட்டு மிதித்த அதே பேர்வழிகளே தமது கபடத்தனமான அரசியல் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ''மனிதாபிமான'' சுலோகப் பலகையைத் தூக்கிப் பிடிக்க ஆரம்பித்தனர். கம்போடியாவில் தாம் இழைத்த சகிக்க முடியாத கொடுமைகளையும் வியத்நாமுக்கு எதிராகத் தாம் தொடுத்த ஆக்கிரமிப்பு யுத்தத்தினையும் பூசி மெழுகுவதும், வியத்நாமை விட்டு வெளியேறுமாறு ஹுவா மக்களை முடுக்கிவிட்ட தமது கபடத்தனமான முயற்சிகளை மூடிமறைப்பதும், ''ஆஸியன்'' அணி நாடுகளுக்கு கஷ்ட நஷ்டங்களை ஏற்படுத்துவதும், 'ஆஸியன்' நாடுகளுக்கும் வியத்நாமுக்குமிடையே பிளவினை உண்டுபண்ணுவதும், தென் கிழக்காசியாவில் ஹுவா மக்களைக் கொண்ட ஐந்தாம் படையொன்று இயங்கி வருவதை மூடி மறைப்பதும், சீன விஸ்தரிப்புவாத அபாயத்தையிட்டு மக்களுக்குள்ள பீதியை அடக்கி அகற்றுவதுமே பீகிங்கின் முக்கிய நோக்கங்களாக இருந்தன.

ஆனாலும், மனச்சாட்சியுள்ள மனிதர்களிடமிருந்து உண்மைகளை மறைத்து வைக்க முடியவில்லை. தற்சமயம், பீகிங்கு பிற்போக்கு ஆட்சியாளர்களின் சூழ்ச்சிகளை நன்கு உணரத் தலைப்பட்டுள்ள உலக மக்கள் வியத்நாம் சோஷலிஸநாடு முகம் கொடுத்துள்ள இடர்பாடுகளையிட்டு அனுதாபம் தெரிவிப்பதுடன், வியத்நாம் எடுத்துக் கொண்ட சரியான நிலைபாட்டினையும் அங்கீகரிக்கின்றனர்

கடந்த ஜுலையில் ஜெனீவாவில் நடைபெற்ற இந்தோசீன அகதிகள் பற்றிய சர்வதேச மகாநாட்டினை வியத்நாம் மீது சேற்றை அள்ளி வீசுகின்ற ஒரு களமாக மாற்றுவதற்கு ஏகாதிபத்திய, பிற்போக்கு வட்டாரங்கள், குறிப்பாக வாஷிங்டனும் பீகிங்கும் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியையே தழுவிக் கொண்டன. அகதிகள் தொடர்பான பிரச்னைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வினைக் காணுவது குறித்து வியத்நாம் சோஷலிஸக் குடியரசின் தூதுக்குழு முன்வைத்த பிரேரணைகளை உண்மையையும் நியாயத்தையும் கௌரவிக்கும் பல நாடுகளினது தூதுக் குழுக்கள் அங்கீகரித்தன. ஐ. நா. பொதுச் செயலாளர் கே. வால்ஹெய்ம் குறிப்பிட்டது



போல, இப் பிரேரணைகள் மகாநாடு வெற்றிகரமாக நிறைவேறப் பெருமளவில் துணை செய்ததுடன், இந்த முக்கிய பிரச்னை தீர்க்கப்படுவதற்கான நல்லதொரு அத்திவாரமாகவும் அமைந்தன. ஆனால், நிஜத்தில், ஏகாதிபத்திய, பிற்போக்கு சக்திகள், குறிப்பாக, வாஷிங்டனும் பீகிங்கும் தொடர்ந்து குழிபறிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், நிலவரம் இன்னும் சிக்கல்மிக்கதாகவே இருந்து வருகின்றது. இன்று, பீகிங் வியத்நாமுக்கு எதிராக இன்னுமொரு யுத்தத்தினைத் தொடுக்கப் போவதாகப் பயமுறுத்தியும் ஹேவாஸ் ஸா, துருவாங் ஸா ஆகிய தீவுக் கூட்டங்கள் மீது தொடர்ந்தும் பாத்தியதைக் கோரிக்கைகளை முன்வைத்தும் வருகின்ற அதே வேளையில், சட்ட விரோதமாக் மக்கள் வியத்நாமிலிருந்து வெளியேறுவதை ஊக்கப்படுத்தும் நோககுடன் மட்டுமன்றி கிழக்கு கடற் பிராந்தியத்திலும் தென் கிழகாசியாவிலும் பீகிங்கின் கபடத் திட்டங்களுடன் தமது நடவடிக்கைகளையும் ஒருமுனைப்படுத்தும் நோக்குடன் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தமது 7 வது கடற்படையின் போர்க்கப்பல்களை வியத்நாமிய கரையோரங்களில் நடமாட விட்டுள்ளனர்.

கடந்த ஐந்தாண்டுகளில், வியத்நாம் சோஷலிஸக் குடியரசின் தேசிய நிர்மாணப் பணிகளுக்குக் குழிபறிப்பதற்கு சீன ஆட்சியாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு சூழ்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. தமது நடவடிக்கைகள் மேலும் மேலும் தோல்விகளைத் தழுவி வருகின்ற திசையில், வியத்நாமிய மக்களை அடக்கியாண்டு விட முடியும் என்ற நம்பிக்கையில் அவர்கள் வியத்நாம் - விரோத நடவடிக்கைகளில் மேலும் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

வியத்நாமிய மக்களுக்கு சீனத் தலைவர்கள் துரோக மிழைத்தது இது மூன்றுவது தடவையாகும்.

## அத்தியாயம் 5

# பீகிங்கின் விஸ்தரிப்புவாதக் கொள்கை: தென் கிழக்காசியாவில் தேசிய சுயாதீனத்துக்கும் சமாதானத்திற்கும், ஸ்திரப்பாட்டிற்குமான ஓர் அச்சுறுத்தல்

*1*

வியத்நாமும் சீனவும் மிகவும் நெருங்கிய அண்டையயல் நாடுகள்; தமது நாடுகளினது புரட்சி ஆதாயங்களினது நலன்களின் பேரில், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் உதவியும், ஊக்கமும் ஆக்கமும் வழங்கி வந்த நாடுகள்; வியத்நாமிய மக்கள் சீன மக்களுக்கு அரசியல் ரீதியான, தார்மீக ரீதியான ஆதரவினை வழங்கினர்; தேசிய விமோசனத்துக்கான போராட்டத்தில் அவர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து போராடினர். சீன மக்கள், மக்கள் சீனக் குடியரசு உதயமாகிய ஆரம்ப ஆண்டுகளில் பல கஷ்டங்களுக்கு முகம் கொடுத்திருந்த நிலையிலும், வியத்நாம் மக்கள் நடாத்திய இரு விடுதலை யுத்தங்களின் போது அவர்களுக்குப் பேருதவி புரிந்துள்ளனர்.

வியத்நாமிய மக்களுக்கும் சீன மக்களுக்குமிடையிலான நட்புறவினை வியத்நாமிய மக்களை மதித்துப் போற்றி வந்ததுடன், அதை எப்போதும் வளர்த்தும், பேணியும் வந்தனர். சீன மக்களின் சுயாதீனம், சுயாதிபத்தியம், பிராந்திய முழுமை ஆகியவற்றினை மீறும் வகையிலான அல்லது சீனவின் உள் விவகாரங்களில் தலையீடு செய்யும் வகையிலான நடவடிக்கைகளில் வியத்நாமிய மக்கள் எப்போதும் இறங்கியதில்லை. வியத்நாமுக்கு விரோதமான முறையில் சீனத் தலைவர்கள் இழைத்த சில தவறுகள், மற்றும் அபிப்பிராய பேதங்கள் ஆகியவற்றினைப் பொறுத்தளவில், இரு தரப்பினருக்குமிடையிலான தனிப்பட்டபேச்சுவார்த்தைகள் மூலம் இவற்றுக்குத் தீர்வு காண வியத்நாமிய தரப்பு பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டது.



இரு நாடுகளுக்கும், மக்களுக்குமிடையிலான மரபார்ந்த நட்புறவுக்கு சீனத் தலைவர்கள் வேண்டுமென்றேகுழிபறித்தபொழுதிலும், சீன மக்கள் தமக்கு வழங்கிய பேருதவிகளை வியத்நாமிய மக்கள் எப்போதும் மறந்ததில்லை; கூடிய விரைவில் இந்த நட்புறவினை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளுவதையே அவர்கள் மனதார விரும்புகின்றனர். இரு நாடுகளுக்கு மிடையிலான உறவுகள் பற்றிய பிரச்னைகளுக்கு தீர்வு காணுவது குறித்த பேச்சுவார்த்தைகளின் போது, வியத்நாமிய மக்களின் இந்த ஆழ்ந்த அபிலாஷையின் அடிப்படையிலே வியத்நாமிய தரப்பு செயல்பட்டு வந்தது. சுயாதீனம், சுயாதிபத்தியம், பிராந்திய முழுமை ஆகியவற்றினைப் பரஸ்பரம் கௌரவிப்பது, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை, சமத்துவம், பரஸ்பர கௌரவம் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையிலும், இரு நாடுகளினதும் நலன்களின் பேரிலும், தென்கிழக்காசிய சமாதானம், ஸ்திரப்பாடு ஆகியவற்றின் நலன்களின் பேரிலும் வியத்நாம் சோஷலிஸக் குடியரசுக்கும் மக்கள் சீனக் குடியரசுக்கு மிடையிலான உறவுகள் கூடிய விரைவில் சுமூகப்படுத்தப்பட வேண்டுமென்பதே வியத்நாமிய அரசாங்கத்தின் இடையறாத அபிலாஷையாகும்.

2

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்தில், முன்னர் விளக்கிய பிரகாரம், சீன ஆட்சியாளர்கள் வியத்நாமிய மக்களுக்கு மூன்று தடவைகள் துரோகமிழைத்துள்ளனர்.

1. 1754 ஜெனீவா மகாநாட்டில், தெற்கில் தமது நாட்டின் பந்தோபஸ்தினை உத்தரவாதப்படுத்துவதற்கு மட்டுமன்றி, இந்தோ சீனவிலும் தென் கிழக்காசியாவிலும் தமது விஸ்தரிப்புவாதத் திட்டங்களை எய்துவதற்கு வழிகோலும் நோக்குடனும், சீன ஆட்சியாளர்கள் வியத்நாமிய மக்களின் தேசிய நலன்களுக்குப் பெருந் துரோக மிழைத்தனர். வியத்நாமினை இரு கூறுகத் துண்டுபட்ட நிலையில் தொடர்ந்து பேணுவதற்கும், இதன் மூலம் அந்நாட்டினைப் பலஹீனப்படுத்தி, தம் மீது தங்கியிருக்கும் ஒரு நாடாகப் பேணுவதற்கும் சீன ஆட்சியாளர்கள் விரும்பினர்.

2. தேசிய விமோசனத்துக்காக அமெரிக்க ஆக்கிரமிப்பினை எதிர்த்து வியத்நாமிய மக்கள் நடாத்திய போராட்டத்தில், நுகோடின் டியெமென் ஆட்சி கவிழ்ந்த போது, வட வியத்நாம் மீது அமெரிக்கா குண்டுத் தாக்குதலை நடத்துவதற்கும், தென் வியத்நாமினுள் அமெரிக்கத் துருப்புக்கள் ஊடுருவுவதற்கும் சீன பச்சைக் கொடி காட்டியது. இராணுவத்துறை, அரசியல்துறை, ராஜதந்திரத்துறை ஆகிய மூன்றிலும் தாம் நடாத்திவரும் மும்முனைப் போராட்டத்தை ஒரு முனைப்படுத்தும் நோக்குடன், வியத்நாம் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த முன்வந்தபொழுது, சீனத் தலைவர்கள் இதைத் தடுக்க முயன்றனர். வியத்நாமிய மக்கள் தமது போராட்டத்தின் இறுதியில் வெற்றியை அண்மித்திருந்த தருணத்தில், பீகிங் ஆட்சியாளர்கள் சீனவை

உலகின் "மூன்றாவது மஹா வல்லரசு" என்ற அந்தஸ்துக்கு உயர்த்திக்கொள்ளும் நோக்குடனும், தைவான் பிரச்னை பற்றிய பேரத்துக்கு முடிவு காண்பதற்குமாக வியத்நாமிய மக்களின் பச்சை ரத்தத்தைத் தாரை வார்த்துக் கொடுத்து நிக்ஸன் நிர்வாகத்துடன் சோரம் போனார்கள்.

3. வியத்நாமிய மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவ கலோனியலிஸ ஆட்சியிடமிருந்து தென் வியத்நாமினைப் பூரணமாக விமோசனப்படுத்தி, தமது நாட்டினை மீண்டும் ஐக்கியப்படுத்திய பின்னர், வியத்நாம் சோஷலிஸக் குடியரசினைப் பலவீனப்படுத்தி வியத்நாமிய மக்களை அடிமை கொள்ளும் நோக்குடன் பீகிங் ஆட்சியாளர்கள் அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், ராஜதந்திர ரீதியிலும் பல சூழ்ச்சிகளை மேற்கொண்டனர். இறுதியில் வியத்நாம் தென் மேற்குப் புறத்திலிருந்து தாக்குவதற்கு பொல் பொட் - இயாங் ஸாரி கோஷ்டியின் ஆயுதப் படைகளையும், வடக்கிலிருந்து தாக்குவதற்குத் தனது சொந்த இராணுவத்தையும் பயன்படுத்தினர். இதன் விளைவாக அப்பாவி வியத்நாமிய சிவிலியன்கள் கொன்று குவிக்கப்பட்டனர்; பொருளாதார, கலாசார நிறுவனங்கள் தரைமட்டமாக்கப்பட்டன!

சீன ஆட்சியாளர்கள் மூன்று தடவைகள், ஒவ்வொரு தடவையும் மிகக் கொடுரமான முறையில் வியட்நாமிய மக்களுக்கு துரோகமிழைத்துள்ளனர்.

இதே விதமாக அவர்கள் லாவோஸ், கம்போடிய மக்களுக்கும் துரோகமிழைத்துள்ளனர். 1954 ஜெனீவா மாநாட்டில் அவர்கள் லாவோஸ், கம்போடிய மக்களின் தேசிய நலன்களைத் தாரை வார்த்துக் கொடுத்தனர். ஜெனீவா மகாநாட்டின் பின்னர், அவர்கள் தேசிய சுயாதீனத்துக்கும், சமாதானத்துக்குமென லாவோஸ், கம்போடிய மக்கள் நடாத்திய போராட்டங்களுக்கு முட்டுக்கட்டைகளையிட்டனர். 1975 ஏப்ரல் 17 ல், கம்போடிய மக்கள் தமது நாட்டினைப் பூரணமாக விமோசனப் படுத்துவதில் வெற்றி கண்ட பின்னர், பீகிங் ஆட்சியாளர்கள் தமது அடிவருடிகளாக பொல் பொட் - இயாங் ஸாரி கோஷ்டியினரைப் பயன்படுத்தி, தென் மேற்குப் புறத்திலிருந்து வியத்நாம் மீது தாக்குதல் தொடுக்கக் கூடிய ஒரு உந்து தளமாக கம்போடியாவை மாற்றியமைக்க முயன்றனர். லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசினைப் பொறுத்தளவிலும் சீன ஆட்சியாளர் லாவோஸ் மக்கள் சமாதான நிர்மாணப் பணிகளுக்குத் தொடர்ந்து குழிபறிப்புகளைச் செய்து வந்தனர்; லாவோஸை அச்சுறுத்தி அதனைத் தமது செல்வாக்கு வட்டத்தினுள் ஈர்த்திழுத்துக் கொள்ளும் பொருட்டு, சீன - லாவோஸ் எல்லையில் பல தரை படைப் பிரிவுகள் பலவற்றைக் நிறுத்தி வைத்தனர். ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு நாட்டினையும் அடிமை கொள்ளும் நோக்குடன், வியத்நாமிய, லாவோஸ், கம்போடிய மக்கள் மத்தியில் பிளவுகளையும் பூசல்களையும் உருவாக்க அவர்கள் முயன்றனர்.

தனது ஆஷாடபூதித் தனத்தை மூடிமறைப்பதற்காக, பீகிங் தலைமைப்பீடம் சீனத் துருப்புக்கள் "தியன் பியென் ஃபூவில் நின்று போராடின" . . . . . என்றவாறான பழங்கதைகளைக் கூறி



வியத்நாமுக்கு சீனா அளித்த உதவிகளையும் அடிக்கடி நினைவுபடுத்திப் பெருமை பீற்றிக் கொள்ளுகின்றது. பிரெஞ்சு கலோனியலிஸ்டுகளுக்கும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிராக வியத்நாமிய மக்கள் நடாத்திய இரண்டு விடுதலை யுத்தங்களின் போது சீனா வழங்கிய உதவிகளை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வியத்நாமிய மக்கள் மறக்கமாட்டார்கள். வியத்நாமிய மக்களைப் பொறுத்தளவில், இது ஒரே தலைவிதியைப் பகிர்ந்து கொள்ளும் மக்கள் மத்தியிலான உறுதியான ஒருமைப்பாட்டின் அற்புதமான வெளிப்பாடேயாகும். ஆனால், பீகிங் பிற்போக்கு ஆட்சியாளர்களைப் பொறுத்தளவில், வியத்நாமிலும், இந்தோ சீனா முழுவதிலும் தமது விஸ்தரிப்புவாதத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு அரசியல் கருவியாக மட்டுமே இருக்கின்றது.

தவிர, இது வியத்நாமுக்கு சீன உதவி வழங்கப்பட்டது பற்றிய பிரச்னை மட்டுமல்ல. சீன மக்களின் நலன்களின் பேரில் பல தியாகங்களைச் செய்த வியத்நாமிய மக்களுக்கே சீன மக்கள் நன்றிகூற வேண்டுமென்றும், வியத்நாமிய மக்களுக்கு உரிய நேரத்தில் உதவியும் ஆதரவும் வழங்க சீன மக்கள் கடமைப்பட்டவர்கள் என்று சீனத் தலைவர்கள் பல தடவைகளில் கூறி வந்துள்ளனர்.

1972 ல் நிக்ஸன் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயம் பற்றி 1973 ஜூனில் வியத்நாமிய தலைவர்களிடம் விவரிக்கையில் தலைவர் மாஓ ஸே-துங் இவ்வாறு கூறினார்:

> "உளந்திறந்து கூறுவதானால், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடித்தமைக்காக வியத்நாமிய மக்களுக்கு சீன மக்களும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், உலக மக்களும் நன்றி கூற வேண்டும். தோழர்களே, உங்களுடைய வெற்றிதான் நிக்ஸனை சீனாவுக்கு வர நிர்ப்பந்தித்தது."

1971 ல், ஐ. நா. ஸ்தாபனத்தில் சீனா அனுமதிக்கப்பட்டது. தொடர்பாக, பிரதமர் சூ என்-லாய் 1971 நவம்பரில் வியத்நாமிய தலைவர்களிடம் கூறியதாவது:

> "இதில் வியத்நாமின் பங்குப்பணி மிகப் பெரியது. எமது இரு நாடுகளும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்தவை."

1954 ல் டியென் பியென் ஃபூவில் போராடியவர்களும் வென்றவர்களும் யார்? இக் கேள்விக்கு வரலாறு தெளிவான விடையை அளிக்கின்றது. பிரெஞ்சு கலோனியலிஸ்டுக்களின் ஆக்கிரமிப்புக்கு எதிரான விடுதலை யுத்தத்தின் போது, சீன அரசாங்கம் பல ஆலோசகர்களை வியத்நாமுக்கு அனுப்பி வைத்தது. 1960 ம் ஆண்டுகளில் சீன - வியத்நாம் எல்லைப் புறத்தில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் குண்டு வீச்சினால் சேதப்படுத்தப்பட்ட ரயில்வே பாதைகளையும், சாலைகளையும் புனர் நிர்மாணிப்பதில் உதவுவதற்கெனவும், எல்லைப்புறத்தில் புதிய சாலைகளை நிர்மாணிப்பதற்கெனவும் "நிர்மாண வேலைத் துருப்புக்களையும் அனுப்பி வைத்தது.

ஆனால், தேசிய சிறுபான்மை இன மக்கள் வாழ்ந்த பகுதிகளினுள் ஊடுருவி, அங்குள்ள மக்கள் மத்தியில் தமது ''கலாசாரப் புரட்சி'' பற்றி பிரசாரஞ் செய்வதே இந்த ஆலோசகர்களினதும், துருப்புகளினதும் முக்கிய வேலையாக இருந்தது. கடந்த பெப்ரவரி லும் மார்ச்சிலும் வியத்நாமிய துருப்புக்களால் கைது செய்யப்பட்ட உளவாளிகளிலும், ''மலையேறும் துருப்பு'' களில் பெரும்பாலானோர் முன்னைய சீன ''வீதி நிர்மாண'' இராணுவத் துருப்பு யூனிட்டுகளைச் சார்ந்தவர்களே என்ற உண்மை இப்போது தெரிய வந்துள்ளது.

1954 ஜெனீவா மகாநாட்டில் வியத்நாமிய மக்களுக்குத் துரோகமிழைத்தது முதற் கொண்டு, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான வியத்நாமிய மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பயன்படுத்தி கம்போடியாவில் பொல் பொட் - இயன் ஸாரி கோஷ்டியினரை ஆட்சியிலமர்த்தியமை உட்பட, இறுதியில் வியத்நாமுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு யுத்தம் வரை சீன ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வந்த நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் பின்வரும் காரணிகளே ஏதுக்களாயிருந்துள்ளன:

— பேரினவாதம்;

— தேசிய சுயநலம்;

— பேரினவாத விஸ்தரிப்புக் கொள்கையும் மேலாதிக்கவாதப் போக்கும்.

சுருங்கக் கூறுவதாயின், வியத்நாமினையும், இந்தோசீனா முழுவதையும் வெற்றி கொண்டு, அதனை ஒரு உந்து தளமாகப் பயன்படுத்தி அங்கிருந்து தென் கிழக்காசியாவில் தமது விஸ்தரிப்புவாத திட்டங்களைச் செயல்படுத்துவதே பீகிங் ஆட்சியாளர்களின் பிரதான நோக்கங்களாக இருந்தன.

தமது விஸ்தரிப்புவாத, மேலாதிக்கவாதத் திட்டங்களை ஈடேற்றிக் கொள்ளும் பொருட்டு, பீகிங் ஆட்சியாளர்கள் ஒரு புரளித்தனமான, மோசடித்தனமாக தேசியக் கொள்கையையும் தந்திரோபாயத்தையும் பின்பற்றினர். இந்தக் கலையில் இவர்கள் தமது குருவான கோயபல்ஸையும் மிஞ்சி விட்டனர். தாம் செய்தவற்றுக்கான பழியை மற்றவர்கள் மீது அவர்கள் போட்டு வந்தனர். அவர்கள் உண்மைகளைத் திரித்துக் கூறினர்; வரலாற்றினைப் புரளி செய்தனர்; தஸ்தாவேஜுகளை மோசடி செய்தனர்; சோஷலிஸப் பதாகையை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, நிஜத்தில் சோஷலிஸத்துக்கு விரோதமாக செயல்பட்டனர். ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடுவதாகக் உச்சஸ்தாயில் கோஷித்துக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சோரம் போயினர்; இரு மஹா வல்லரசுகளுக்கு எதிராகப் போராடுவதாக கூறிக் கொண்டு, சோவியத் யூனியனுக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டனர்; மேலாதிக்கவாதத்துக்கு எதிராகப் போராடுவதாகக் கோஷித்துக் கொண்டு, இந்தோ சீனாவிலும் தென் கிழக்காசியாவிலும் தமது மேலாதிக்கவாத திட்டங்களை ஈடேற்றிக்கொள்ள முயன்றனர். வியத்நாம் சோஷலிஸக் குடியரசினுள் ஊடுருவதற்குத் தமது துருப்புக்களை ஏவி விட்ட அவர்கள் வியத்நாமே சீனாவினுள் ''ஊடுருவியது'' என்று பொய்ப் பிரசாரஞ் செய்தனர். ''மனித உரிமைகளைப் பாதுகாப்பதுபற்றி'' யும் ''இந்தோ சீன அகதிகளின் தலைவிதி'' பற்றியும் தாம் வெகு கரிசனை காட்டுவதாக பாசாங்கு பண்ணிய சீன ஆட்சியாளர்கள் தமது ''கலாசாரப் புரட்சியின் போது ஆயிரக்கணக்கான தமது சொந்த நாட்டுக் குடிமக்களைக் கொன்று குவித்தனர்; **200,000** க்கும் மேற்பட்ட ஹுவா மக்களை வியத்நாமிலிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்தித்தனர். பீகிங் ஆட்சியாளர்களைப் பொறுத்தளவில், அவர்கள் கூறும் வார்த்தைகளே உண்மைகள், அவர்கள் சுயநலன்களே ஒழுக்க நெறிகள்!

நாட்டிலுள்ள பல்வேறு கோஷ்டிகளை ஓரணியில் திரட்டுதற்கும், தமது ''நான்கு நவீனமயத் திட்டங்களை'' நிறைவேற்றுவதற்குமென சீனத் தலைவர்கள் தமது பேரினவாதப் பதாகையை உயர்த்திப் பிடித்து உச்சஸ்தாயில் பேரினவாதக் கோஷங்களை எழுப்பத் தற்போது தலைப்பட்டுள்ளனர். வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தளவில், இந்தோ சீனாவிலும் தென்கிழக்காசியாவிலும் தமது விஸ்தரிப்புவாதத் திட்டங்களை ஈடேற்றிக் கொள்ளுவதற்கு தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் சீன ஆட்சியாளர்கள், தமது ''நான்கு நவீனமயத் திட்டங்களை'' நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கத்தைய மூலதனத்தையும் தொழில்நுட்ப உதவிகளையும் பெறும் நோக்குடன் சோவியத் யூனியனுக்கும் சர்வதேச புரட்சி இயக்கத்துக்கும் எதிராக ஏகாதிபத்திய, பிற்போக்கு சக்திகளுடன், குறிப்பாக, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து நிற்கின்றனர்.

பேரினவாதத்தாலும், தனது ஆட்சியாளர்களின் விஸ்தரிப்புவாத, மேலாதிக்கவாதக் கொள்கைகளினாலும் பிணைக்கப்பட்டுள்ள சீனாவானது இன்று இந்தோசீன, தென் கிழக்காசிய நாடுகளின் சுயாதீனம், சுயாதிபத்தியம், பிராந்திய முழுமை ஆகியவற்றுக்காக ஓர் அச்சுறுத்தலாக மட்டுமன்றி, வியத்நாம், லாவோஸ், கம்போடியா ஆகியவற்றினை எதிர்ப்பதில் சீனத் தலைவர்களுடன் ஒன்று சேர்ந்து தாளம் போடும் நாடுகள் உட்பட, பல நாடுகளின் நலன்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. இன்னுமொரு உள்நாட்டு நெருக்கடிக்கு சீனா முகம் கொடுக்கக் கூடிய அபாயம் பற்றி தகவலறிந்த மேற்கத்தைய அரசியல்வாதிகளும், வர்த்தக வட்டார பிரமுகர்களும் ஏற்கனவே தமது அரசாங்கங்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளனர். ஆனாலும், சீனத் தலைவர்களின் விஸ்தரிப்புவாதக் கொள்கையினால் இந்நாடுகளின் நலன்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்கள் பற்றி இன்னும் இவர்கள் சரிவரப் புரிந்து கொள்ளாதவர்களாயுள்ளனர் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

கடந்த ஆயிரமாண்டு காலத்தில், சீனச் சக்கரவர்த்திகள் பல தடவைகளில் வியத்நாமினுள் ஊடுருவியுள்ளனர். சீனத் தலைவர்களின் கபடத் திட்டங்களை வியத்நாமிய மக்கள் தெளிவாக

புரிந்து கொண்டுள்ளனர். இதனால்தான் பீகிங் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளைப் பொறுத்து அவர்கள் எப்போதும் விழிப்புடன் இருக்கின்றார்கள். வியத்நாமுக்கு எதிரான ஆக்கிரமிப்பு யுத்தத்தை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மூர்த்தண்யப்படுத்திய நெருக்கடிமிக்க தருணத்தில்கூட, தமது 200,000 துருப்புக்களையும் மற்றும் இராணுவத் தளவாடங்களையும் வியத்நாமுக்கு அனுப்புவதற்கு சீனத் தலைவர்கள் முன் வந்த போது, இந்த உதவியை வியத்நாமிய அரசு வேண்டாமென நிராகரித்து விட்டது. சீனத் தலைவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தம்மீது கொண்டு வந்த நிர்ப்பந்தங்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து வந்த வியத்நாமிய மக்கள் தமது சுயாதீனமான, சுயாதிபத்தியமான மார்க்கத்தினை உறுதியாகப் பின்பற்றி வருகின்றனர்.

3

1979 பெப்ரவரியில் வியத்நாமுக்கு எதிராகச் சீனத் தலைவர்கள் தொடுத்த ஆக்கிரமிப்பு யுத்தம் அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் ஒரு தோல்வியாக முடிந்த பொழுதிலும், அவர்கள் தொடர்ந்தும் தமது வியத்நாமிய - விரோதக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்கு அனைத்து வழிகளிலும் முயன்று வருகின்றனர். இரு நாடுகளுக்கு மிடையிலான உறவுகள் தொடர்பான பிரச்னைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளின் போது தனது பேரினவாத நிலைபாட்டினைத் தொடர்ந்தும் பின்பற்றி வரும் சீனத் தரப்பு, ''வியத்நாமுக்கு இன்னுமொரு பாடத்தைப் புகட்டப் போவதாகவும்'' அச்சுறுத்தி வருகின்றது. அதே வேளையில், வியத்நாமுக்கு பல திசைகளிலிருந்தும் நிர்ப்பந்தம் கொண்டு வரும் நோக்குடன், கம்போடிய மக்களால் தூக்கியெறியப்பட்ட பொல் பொட் - இயங் ஸாரி கோஷ்டியை மீண்டும் ஆட்சியிலமர்த்துவதற்கும், லாவோஸ் மக்கள் குடியரசினுள் ஊடுருவல் செய்வதற்கும் சீனத் தலைவர்கள் அனைத்து வழிகளிலும் முயன்று வருகின்றனர்.

''சுயாதீனத்தையும் விடுதலையையும் விட உயர்ந்தது வேறெதுவுமில்லை.'' தமது சுயாதீனம், சுயாதிபத்தியம், பிராந்திய முழுமை ஆகியவற்றினைப் பாதுகாப்பதற்கும், எந்த ஒரு பிற்போக்கு சக்தியின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கும் பதிலடி கொடுப்பதற்கும், மேற்கொள்ளப்படும் விஸ்தரிப்புவாத நடவடிக்கைகளை முறியடிப்பதற்கும் வியத்நாமிய மக்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

ஒரு தர்மநியாயமான இலட்சியத்துக்காகப் பாடுபடும் வியத்நாமிய மக்கள், ஏகாதிபத்திய கலோனியலிஸ, நவ கலோனியலிஸ, விஸ்தரிப்புவாத, மேலாதிக்கவாத சக்திகளின் ஆக்கிரமிப்பு, தலையீட்டு நடவடிக்கைகளையும், திட்டங்களையும் படிப்படியாக முறியடித்து வரும் உலகின் முப்பெரும் புரட்சிகர இயக்கங்களின் ஒருமைப்பாட்டினையும், தேசிய ஐக்கியத்தையுமே தமது பெருவலுவாகக் கருதுகின்றனர். தமது வியத்நாம் - விரோதக் கொள்கையினால் அண்மையில் தழுவிக் கொண்ட தோல்விகளைக் கருத்திற்கொண்டு, காலோசிதமான முறையில் உரிய முடிவுகளை எடுக்க



சீனத் தலைவர்கள் தவறுவார்களேயானால், இன்னும் பல தோல்விகளுக்கு அவர்கள் வழிகோலியவர்களாவார்கள். இன்றைய சகாப்தத்தில், பெரியதோ அல்லது சிறியதோ, எந்த ஒரு நாடும் முழு மனித குலத்தினதும் ஒரு அங்கமாகும். முழு மனித குலத்தையும் ஆத்திரமூட்டாமல் — உலக சோஷலிஸ அமைப்பையும் தேசிய விமோசன இயக்கத்தையும், தேசிய சுயாதீனத்துக்கும் சமாதானத்துக்கும் சமாதானத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்குமான உலக மக்களின் பேரியக்கத்தையும் எதிர்த்து நிற்காமல் வியத்நாம் மீது கைவைப்பது பீகிங் விஸ்தரிப்புவாதிகளுக்கு அசாத்தியமான காரியமாகும். சோஷலிஸ நாடுகளும், உலக முழுவதிலுமுள்ள சமாதான நேச சக்திகளும் எப்போதும் வியத்நாமின் பக்கமே சார்ந்து நின்று வந்துள்ளன; வருகின்றன.

''அருகிலுள்ளவனைத் தாக்குவதற்கு தூரத்திலுள்ளவனோடு சிநேகம் பூண்டுகொள்ள வேண்டும்'' என்ற மாஜி சீன சக்ராதிபதிகளின் மாமூல் தந்திரத்தைப் பயன்படுத்தி சீனத் தலைவர்கள் தொடர்ந்தும் தமது விஸ்தரிப்புவாதக் கொள்கையை மூடி மறைத்து வர முடியும். ஆனால், பீகிங்கின் வியத்நாம் - விரோதக் கொள்கை வியத்நாமின் சுயாதீனம், சுயாதிபத்தியம், பிராந்திய முழுமை ஆகியவற்றுக்கு மட்டுமன்றி, இப் பிரதேசத்திலுள்ள இதர நாடுகளுக்கும் ஒரு பெரும் அச்சுறுத்தல் என்பதை தென் கிழக்காசிய மக்கள் வெகு விரைவிலேயே உணர்ந்து கொள்ளுவார்கள். பல தென் கிழக்காசிய நாடுகளில் அரசியல், பொருளாதார நெருக்கடிகளை உருவாக்குவதற்கு பீகிங் ஹுவா மக்களைத் தனது ஐந்தாம் படையாகப் பயன்படுத்தி வந்ததை எவராலும் மறந்து விட முடியாது.

வியத்நாமினை எதிர்த்து நிற்கின்ற அதே வேளையில், சீன விஸ்தரிப்புவாதிகள் ஆசியாவிலுள்ள பல நாடுகளின் உள் விவகாரங்களில் அநாகரிகமான முறையில் தலையிட்டு வருவது தெளிவாகத் தெரியவில்லையா?

கடந்த 30 ஆண்டுகள், பீகிங் ஆட்சியாளர்களில் தவறாக வழிநடாத்தப்பட்டு வரும் உண்மையான சீன கம்யூனிஸ்டுகளும் சீன மக்களும் வெகு விரைவில் உண்மையை உணர்ந்து வியத்நாமிய மக்களின் தர்ம நியாயமான போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியே தீருவார்கள்.

கடந்த 4,000 ஆண்டு காலமாக சீன சக்ராதிபதிகளின் ஊடுருவல்களுக்கு துணிச்சலுடன் முகம் கொடுத்துவந்த வியத்நாமி மக்கள், இன்றைய சீன ஆட்சியாளர்களின் கபடத் திட்டங்களுக்கும் சூழ்ச்சிகளுக்கு தொடர்ந்தும் துணிச்சலுடன் முகம் கொடுக்க உறுதி பூண்டுள்ளனர்.

இரு நாடுகளினது மக்களின் அபிலாஷைகளுக்கும், தென் கிழக்காசிய சமாதானத்தினதும் உலக சமாதானத்தினதும் நலன்களுக்கும் அமைய வியத்நாமிய மக்களும் சீன மக்களும் சமாதானமாக நட்புறவும் ஒத்துழைப்பும் பூண்டு ஐக்கியமாக வாழுகின்ற காலம் நிச்சயம் வந்தே தீரும்.

வெளியிடுவோர்:
**பீப்பள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ்**
124, குமாரன் ரத்தினம் வீதி,
கொழும்பு-2.

பிரகதி அச்சகம், 93, மாளிகாகந்தை வீதி, கொழும்பு-10.